# என்றாவது ஒருநாள்

Fine

2020168

சுஜாதா

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை,
தியாகராயநகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : ஜனவரி, 1981
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1982
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 1993 (விசா)
நான்காம் பதிப்பு : ஏப்ரல் 2000

விலை : ரூ 30-00

816481
சென்னை மாவட்ட கிளை நூலகம்
கொளத்தூர், சென்னை-99.

கிடைக்குமிடம் :
திருமகள் நிலையம்
55, வெங்கட்நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017

Available at :
THIRUMAGAL NILAYAM
55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai-600017
Phone : 4342899
4327696
Fax : 91-44-4341559

31524
4817190

அச்சிட்டோர் : ஜீவோதயம் அச்சகம், சென்னை-4

# பதிப்புரை

மிகச்சிறந்த எழுத்தாளர்-திரு சுஜாதா அவர்களின் தலைசிறந்த எழுத்தோவியங்களில ஒன்றான 'என்றாவது ஒருநாள்' என்னும் இந்நூலில் ஒரே ஒரு கருத்தை மையமாகவைத்து ஆயிரம் கதைகள் உருவாக்கப்படுகின்ற நேரத்தில் ஆயிரம் கருத்துக்கள் இழையோட ஒரு அற்புதமான கதையைத் தந்திருக்கிறார் திரு. சுஜாதா.

கண்ணெதிரே நாம் தினமும் சந்திக்கின்ற சம்பவங்கள் நெஞ்சை நெகிழவைக்கும் கதை வடிவம் பெற்றிருக்கிறது.

யதார்த்தங்கள் கதை வடிவம் பெறும்போது எளிதாக இதயத்தை அள்ளிக் கொள்கிறது.

'என்றாவது ஒருநாள்' கதையைப் படிக்கின்றபோது-நாமும் அந்தக்கதையில் ஒரு பாத்திரமாக மாறி அவர்களுடனேயே இருப்பதுபோல ஒன்றிவிட முடிகிறது.

பாத்திரங்கள்-சம்பவங்கள்-கதை எல்லாமே சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன...

குற்றங்கள் யாரால் பிறக்கின்றன?

குற்றவாளிகள் எப்படி உருவாகிறார்கள்? என்பனவற்றை எளிய நடையில், ஆனால், அழுத்தமான சம்பவங்களால் சுட்டிக்காட்டி அவைகட்குப் பரிகாரம் காண வேண்டும் என்கிற வருத்தத்துடிப்பு படிப்பவர்கட்கு ஏற்படும் வகையில் திரு. சுஜாதா அற்புதமாக உருவாக்கியுள்ள 'என்றாவது ஒருநாள்' கதையினை விசா பப்ளிகேஷன்ஸ் தன் முத்திரை வெளியீடுகளில் ஒன்றாகப் பெருமையுடன் வெளியிட்டு மகிழ்கிறது.

—விசா பப்ளிகேஷன்ஸ்

## சுஜாதாவின் பிற நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீரங்கத்து தேவதைகள் | 20-00 |
| வைரங்கள் | 16-00 |
| அனிதாவின் காதல்கள் (புதிய நாவல்) | |
| மாறுதல் வரும் | |
| என்றாவது ஒருநாள் | |
| விஞ்ஞானப் பார்வையிலிருந்து | |
| வசந்தகாலக் குற்றங்கள் | |
| அடுத்த நூற்றாண்டு | |
| கனவு தொழிற்சாலை | |
| கரையெல்லாம் செண்பகப்பூ | |
| ஒரு பிரயாணம் ஒரு கொலை | |
| கடவுள் வந்திருந்தார் | |
| குருபிரசாத் கடைசி தினம் | |
| ஆதலினால் காதல் செய்வீர் | |
| நிஜத்தைத் தேடி | |
| இரயில் புன்னகை | |
| தங்க முடிச்சு | |
| பிரிவோம் சந்திப்போம்-II | |

31524
4817190

# என்றாவது ஒரு நாள்

## 1

அவன் நிஜப்பெயர் நாராயணன் இல்லை. அதைப் பற்றி அப்புறம் சொல்லலாம். இப்போது அவன் நாராயணன்.

காலை எழுந்தபோது இன்றைய தினம் வேறு விதமாக அமையப் போகிறது என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

மைலாப்பூர் கோயிலைச் சுற்றியிருக்கும் பற்பல சந்துகளில் ஒரு சந்தில் ஐந்து ஆண்டாக சுண்ணாம்புப் பூச்சைப் பார்த்திராத ஒரு வீட்டு மாடியில் பின்புறத்தில் ஓர் ஆஸ்பெட்டாஸ் அவசர அறையில் அவன் குடியிருப்பு.

பத்துக்கு எட்டு அடி அளவு. அதில் அவன் எளிய உடமைகள். ஒரு தகரப்பெட்டி, தரையில் ஒரு படுக்கை, சுவரில் சில காலண்டர்கள். அறையின் குறுக்கே கொடி கட்டித் தொங்கும் ஒன்றிரண்டு பாண்டு, சட்டைகள், தரையில் கிடக்கும் பத்திரிகைகள். தண்ணீருக்கு ஒரு மண் கூஜா. அதன் மண்டையில் ஒரு தம்ளர்.

அறையை விட்டு வெளியே வந்தவுடன் கோவில் தெரியும் மொட்டை மாடி. அங்கிருந்து சிக்கலான மரப் படிகளில் சரிந்து அவனுடன் செல்லலாம்.

அந்த வீட்டில் பற்பல ஒரங்களில் பற்பல தடுப்பு களில் குடியிருக்கும் அவன் போன்ற மற்றவர்கள் காத் திருக்கும் ஒரே பாத்ரூம்.

அதன் வாசலில் தண்ணீர் நூலாக வடிக்கும் குழாய்.

அதில் நீர் பிடித்து முகத்தை நனைத்துக் கொண்டு மிச்சமிருந்த தண்ணீரில் பல் தேய்த்தான்.

குளிப்பது தற்போது இயலாத காரியமாகத் தோன்றியது. நாலு சோப்புப் பெட்டிகள் வரிசையாகக் காத்திருந்தன.

மீண்டும் தன் அறைக்கு வந்து, சட்டை பாண்ட் மாற்றிக் கொண்டு, கைக்காசை ஆராய்ந்தான்.

இரண்டு ரூபாய் சில்லறை.

பத்மாவில் இட்லி காப்பி சாப்பிட்டால் பஸ்சுக்குத் தான் மிஞ்சும், மத்யானச் சாப்பாட்டிற்கு அல்ல.

சாயங்காலம்தான் அந்த வாரக் கூலி கிடைக்கும். முப்பத்தி ஐந்து ரூபாய். அதுவரை...

சடக்கென அந்த நினைவு வயிற்றுக்குச் செய்தி யாகப் போய் இப்போதே பசித்தது. பெட்டியைத் திறந்து ஒரு சின்னக் கண்ணாடியை எடுத்துத் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

நாராயணனின் பொய் முகம். அடர்ந்த மீசை அடர்ந்த தாடி, நெற்றியும் கண்களும் பிரதான மூக்கும் மட்டும்தான் தெரியும் முகம். மற்றவை மறைந்திருந்தது. மறைக்க வேண்டும்.

ஐந்து ஆண்டு மறைத்தாகி விட்டது. மாநிலத்தில் உள்ள போலீஸ் ரிக்கார்டுகள் மறக்கிறவரைக்கும் மறைத்து வாழ வேண்டும்.

அவன் நிஜப் பெயர் புண்ணியகோடி!



நாராயணன் தன் அறையைப் பூட்டிவிட்டுப் படி யிறங்கி வெளியே வந்தான்.

நகரத்தின் காலை அவசரங்கள் தொடங்கிவிட்டன. டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் திறந்து விட்டார்கள்; "முதல்வர் முழக்கம்" என்று அலறியது தினத்தந்தி. ரேடியோ "நடைபாதை" அமைத்தது. குடிசையில் பூப் பெய்திய ஏதோ ஒரு பெண்ணுக்காக ஒலி பெருக்கி ஒரம் போக்கியது. சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் கால்களுக்கு இடையே மணி ஒலித்துக்கொண்டு தெப்பக்குளம் நோக்கி மிதித்துக்கொண்டு இருக்க, சேலைக் கடையில் பொம்மைகளுக்கு தூசி தட்டிக்கொண்டு இருந்தார்கள்.

நாராயணன் ஒரே ஒரு காப்பி சாப்பிட்டு விட்டு வெளியே வந்தான்.

சூரியன் இப்போதே கோவித்திருந்தான்.

ஓட்டலுக்கு வெளியே ஒரு சிறுவன் பெரிய சட்டை அணிந்து கொண்டு காதைச் சொறிந்து கொண்டு "அய்யா" என்று பல் இளித்தான். காவிப் பற்கள், பெரிய கண்கள். பழக்கப்பட்ட கை நீட்டல்...

ஐந்து பைசா கொடுத்தான்.

ஒரே ஓட்டம்

புண்ணியகோடி அந்த வயதில் ஊமையாக நடித் திருக்கிறான். "பே! பேபேபே!" என்று அபஸ்வரத்தில் கெஞ்சிவிட்டு வயிற்றைத் தொட்டுக் காட்டி இல்லை என்று கைவிரித்து நடித்திருக்கிறான். எப்பொழுது என்று நினைவு இல்லாத நாளிலேயே தான் பொய்கள் தொடங்கியிருக்கின்றன...

"டேய் இங்கே வாடா!"

"என்னங்க?"

"பஸ் ஸ்டாண்டில் சித்த முன்னாடி நீதானே ஊமை மாதிரி பாசாங்கு பண்ணே!"

''அய்யய்யோ! அது நான் இல்லீங்க. என் தம்பி!''

''நீ தாண்டா. நான் பார்த்தேன், ஏன் இந்த வயசிலேயே பொய் சொல்றே''

''நான் இல்லீங்க!''

''ராஸ்கல் படவா! நாலணா கொடுத்தேன். மறுபடி பொய் சொல்றே''

பளீர் என்று எதிர்பாராமல் கன்னத்தில் அதிர்ந்த அடி ''அய்யய்யோ அய்யய்யோ'' என்று தரையில் படுத்துக்கொண்டு, கால்களை உதறி, அந்த ஆள் கொலையே செய்து விட்டாற்போல் அட்டகாசமாக அழுது...

எல்லாமே நடிப்புத்தான்.

நாராயணன் மெல்ல நடந்தான்.

திருநீறு அணிந்து, சட்டைமேல் இடுப்பில் சரிகைத் துண்டு கட்டிக்கொண்டு, ஒரு பயபக்தி மனிதர் கோயி லில் இருந்து வெளிப்பட்டார். இளம் மனைவி. மனைவி யின் இடுப்பில் வசீகரமாக வேடிக்கை பார்த்துக் கொண்டு குழந்தை, படியத் தலைசீவி நெற்றியில் குங்குமம் இட்டுப் புதிய சட்டை அணிந்து, குட்டிக் கால்களில் ரப்பர் செருப்பணிந்து...

அப்பா, அம்மா?

ஐந்து வயதில் அவன் தாய் இறந்தது ஞாபகம் இருந்தது.

குடிசைக்குள் எரிந்த மண்ணெண்ணெய் விளக்கு' அதன் அருகில் அசைவின்றிக்கிடந்த அம்மா. சுற்றிலும் தாயார் இறந்தாச்சு என்று பாட்டுப்பாடி அழுது கொண் டிருந்த பெண்கள். வாசலில் பச்சை மூங்கில் கிடத்தப் பட்டு அதன் குறுக்கே சிம்பு வைத்து கட்டிக் கொண்டு இருந்தார்கள். அந்தப் படுக்கை தயாரிக்கப்பட்டதும் அதன்மேல் கிடத்தப்படும்போது அந்தத் தலை சற்று ஆடியதும் திறந்திருந்த கண்கள் அவனைப் பார்த்ததும்



தாரை தப்பட்டை ''டபக்கு டப்பா டகர டகர'' என்று முழங்க, உற்சாகமாக முன்னே ஆடிக் கொண்டு சென்ற சிறுவர்களும் கீச்சுக் குரலில் ஒலித்த அவசர நாதசுரமும் அவன் நினைவில் நீங்காத பிம்பங்கள்.

மற்றொரு பிம்பம்—

'மற்றொரு நாள் அவன் அப்பாவை பஸ் ஸ்டாண்டில் தேடியது. கையில் வாழப்பழத்தைக் கொடுத்து ''இங் கேயே உக்காரு வரேன்'' என்று சொல்லிப் போனவர் அப்புறம் வரவேயில்லை. நூற்றுக்கணக்கான மனிதர் கள் புழங்கும் இடத்தில், பிரயாணிகளின் ஊடே சிவப்பு பஸ்களின் இடையில், காப்பிக் கடையில், வெய்ட் பார்க் கும் மிஷினின் அருகில், ''எங்க அப்பாரு... எங்கே அப் பாரு எங்கே?'' என்று இருட்டும் வரை தேடியதும்,

எட்டாவது வயதில் அவன் தன்னைத்தானே பார்த் கொள்ள வேண்டிய முழுப் பொறுப்புள்ள இந்தியக் குடி மகன் ஆகிவிட்டான், புண்ணியகோடி.

நாராயணன் பாலத்தைக் கடந்தான்.

சாக்கடைக்கரையெல்லாம் குடிசைகள்,கட்சிக்கொடி கள், உடனே கட்டிடங்கள், டெலிவிஷன் விரல்கள்.

விரைவு பஸ்சில் ஏறிக் கொண்டு காலியாக இருந்த இடத்தில் உட்கார்ந்தான்.

அருகே தொப்பியை மடியில் வைத்துக் கொண்டு ஒரு போலீஸ்காரர்.

துணுக்குற்றான்.

எழுந்து வேறு இருக்கை பிடிக்கலாம் என்றால் காலி யில்லை. நிற்க வேண்டும், சந்தேகப்படுவார்.

போலீஸ்காரர் வெளியேதான் பார்த்துக் கொண்டு இருந்தார். அவன் போட்டோவை இவர் பார்த்திருப் பாரா?

சூட்கேஸ் திருடர்கள் என்கிற ரீதியில் புண்ணிய கோடி முதன் முதலில் "போட்டோ" பிடிக்கப்பட்டான், அப்புறம் எத்தனை முறை ஸ்லேட்டில் நம்பர் எழுதி, நின்று, திரும்பி... போட்டோக்கள், விரல் ரேகைகள்...

அதெல்லாம் ஐந்து ஆண்டு ஆயிற்றே. அப்போது வேறு முகம் பெயர்... சென்னையில் மக்கள் திரளில் ஒரு மூலையில் ஓர் அறையில் அவனுக்குக் கிடைத்திருக்கும் தற்காலிக பத்திரம்.

இனி அவன் புண்ணியகோடி இல்லை. செத்து விட்டான். சத்தியமாக அவன் திரும்பிப் போகமாட்டான். அந்தப் பெயரே ஏறக்குறைய மறந்து விட்டது, மறந்து விட்டதா...

அருகில் ஒரு பெண் நின்றாள்.

நேற்று இரவு மொட்டாகி, பின்னிரவில் மலர்ந்த மல்லிகையின் மணம் இன்னும் அவளிடம் மிச்சம் இருந்தது.

பெண் மணம்...

"அய்யா எங்கே புண்ணியகோடி?"

"கடைக்குப் போயிட்டாரும்மா?"

"இத பார் துணியெல்லாம் உலர்ந்து போச்சு. மடிச்சு டிரஸ்ஸிங் டேபிள் மேல வெச்சுரு!"

"சரிம்மா!"

"குளிச்சியா?"

"ஆச்சுது அம்மா?"

"இத பார்! இந்தா பழசாப்போச்சு சட்டை—இதை நீயே வெச்சுக்க?"

"அய்யாதும்மா இது?"

"பரவாயில்லை. போட்டுக்க?"

"வேண்டாம்மா!"



"எடுத்துக்கடான்னா!"

"நன்றிம்மா"

"உனக்கு என்ன வயசு!"

"தெரியாதம்மா"

மீசையெல்லாம் வளர ஆரம்பிச்சுடுச்சே; பதினஞ்சு பதினாறு இருக்கும்?"

"தெரியாதம்மா"

"இங்க வா! வந்து உக்காரு! ஏன் நிக்கறே"

"வேண்டாம்மா! வேண்டாம்!"

"பயப்படாதடா! ஒண்ணும் செய்துற மாட்டேன். கடிச்சு முழுங்கிட மாட்டேன்!"

பயம் அதீத பயம், அப்புறம் தயக்கம். அப்புறம் ஆர்வம். அப்புறம் வெட்கம். அப்புறம் இறுக்கம், அப்புறம் வியர்வை...

அப்புறம் மணம், பெண் மணம்!

"டிக்கெட்...டிக்கெட்!"

சில்லறை எடுத்துக் கொடுத்தான்.

"என்னங்க இப்பல்லாம் நம்ம பஸ்ல வர்றதில்ல?"

"முந்தின பஸ்ல போய்டறேன்" என்று முணுமுணுத்தான்.

அருகில் இருந்த போலீஸ்காரர் ஒருமுறை அவனைப் பார்த்து விட்டுத் திரும்பி சன்னலுக்கு வெளியே நோக்கினார்.

கண்டக்டர் விசாரித்தது சற்று உறுத்தியது. திரும்பத் திரும்ப ஒரே சமயத்தில் ஒரே பஸ்சில் செல்வதால்

ஆபத்து இருக்கிறது. இருந்தும், அவர்களுக்கெல்லாம் அவன் நாராயணன் தானே! புண்ணியகோடி இல்லையே!

அந்தப்பெண் இறங்கிவிட்டாள்.

தன் சேலையைத் திருத்திக் கொண்டு துடிப்பாக நடந்து செல்வதை சன்னல் வழியாகப் பார்த்தான்.

திலகம்!

கான்கிரீட் மிக்சர் சுழலச் சுழல அதன் பசிக்கு வரிசையாக ஜெல்லியும் சிமெண்டும் மணலும் கொண்டு வந்து தீனி போடும் பத்துப் பெண்களில் ஒருத்தி. சற்று வித்தியாசமான ஒருத்தி.

''யோவ் நீ தாடி மீசையை எடுத்துட்டா நல்லாருப்பே போலிருக்கு!''

பஸ் நகர நெரிசலில் இருந்து வெளிப்பட்டு நிலத்தின் முதுகிலிட்ட கறுப்புக் கோட்டின் மேல் விரைவாகச் சென்று கொண்டு இருந்தது. பெரும்பாலும் காலியாகி விட்டது. போலீஸ்காரர் அப்போதே இறங்கி விட்டார்.

வெளியே பார்த்தான். கோர்த்த மாடு ஒன்று வாயில் நுரையுடன் வர்ணக் கொம்புகளை ஆட்டிக் கொண்டு வண்டியிழுக்க அதை அனாவசியமாக, இந்த! என்று அதட்டி வண்டிக்காரன் ஒரு விறு விறினான்.

சுளீர் என்று புண்ணியகோடியின் உடம்பில் அந்த அடி பட்டது.

''ஏண்டா! 'அடிமடியிலேயே கையை வைக்கறியா! போனாப்போறதுன்னு ஏழை அனாதைன்னு வீட்டில வேலை கொடுத்து வீட்டோட வெச்சுக்கிட்டா இந்த வேலை செய்றியா நீ! ராஸ்கல்' பழையபடி ஒரு சுளீர்.



''அய்யா அய்யா இல்லீங்க: அம்மாதாங்க!—என்னை''

''அடப்பாவி! என்மேல பழி போடுறான் பாருங்க!'' துணியை மடிச்சு வைடான்னு சொல்லிட்டு உள்ளே போயிருக்கேன் - கூடவே ரூமுக்குள்ள வந்துட்டான். என்னடான்னா திருதிருன்னு முழிக்கிறான். எனக்கு அப்பவே சந்தேகம். நாயைத் துரத்தி அடிக்கலாம்னா மடக்குனு இறுக்கக் கையைப் பிடிச்சுட்டு என்னைத் தள்ளிட்டான்...செருப்பால அடிங்க அவனை! நல்லா அடிங்க—''

''படுபாவி! எங்க உப்பைத் தின்னுட்டு''

''வேண்டாங்க! அடிக்காதீங்க! அம்மாதாங்க என்னை உள்ள கூப்பிட்டாங்க''

''பொய் சொல்றயே புழுத்துப் போய்டுவடா! பொய் சொல்ற நாக்கை வெட்டுங்க. கையைக்காலை உடைங்க கட்டி வெச்சு உதைங்க.''

அவர் துரத்த, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அடைபட்ட அறையில் சுற்றிச் சுற்றி ஓடினான். அவருக்கு ஆத்திரம் மிகுதியாக, அவன் ஆத்திரமும் அதிகரிக்க, ஒரு திமிறிலில் அவரைத் திரும்ப முழங்காலால் உதைக்க அவர் பதறிப் போய் விழ கதவுத் தாழ்ப்பாளைத் திறந்து...

ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டிருந்தது. பஸ்.

அந்த தண்டனையின் அநியாயத்தை புண்ணியகோடி மறக்கவில்லை.

நாராயணன் பஸ்சில் இருந்து இறங்கி நடந்தான்.

''ஹிந்த் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி'' என்று அறிவிப்புப் பலகை ஒன்றியாய் நிற்க, அந்த எதிர்காலக் கட்டிடத்தின் முன் சுறுசுறுப்பாக கான்கிரீட் மிக்சர்கள் சுழன்றுகொண்டு இருந்தன.

சவுக்குச் சாரத்தில் கூலிப்பெண்கள் தட்டுத்தட்டாக அனுப்பிக் கொண்டு இருந்தார்கள்.

குடையின் கீழ் மேஸ்திரி கண்டிராக்டர் நின்றார்.

நாராயணன் பாண்ட்டை மடக்கிக் கொண்டான். டீசல் சக்தியில் சுழலும் இயந்திரத்தின் அருகில் சென்று அதைக் கயிறு சுற்றிக் கிளப்பினான். திலகத்தைத் தேடினான். மே லே நின்று கொண்டு இருந்தாள். அத்தனை பெண்களிலும் அத்தனை தூரத்திலும் அவள் அவனுக்குத் தனிப்படத் தெரிந்தாள். ''வாங்கய்யா'' என்றாள்.

சிமெண்ட் ஜெல்லி மணல் நீர்க்கலவையை ஒழுங்கு படுத்தத் தொடங்கினான். இயந்திரத்தின் வாய்ச்சுழலில் பச்சை நிற ஈரக் கலவையின் பதம் பார்த்து லீவரைத் திருப்பிக் கொட்டக் கொட்ட மறுபடி கலவை மேலிருந்து தொப் தொப் என்று விழும் தட்டுகள் சிமெண்டு கலவையுடன் மேல்தளம் உருவாகிக்கொண்டு இருந்தது...

மாடி!

அவன் முதல் பெரிய திருட்டு.

அதுவரை அங்கேயே பஸ் ஸ்டாண்டு, ரெயில்நிலையத்தில் சூட்கேஸ், சினிமாக் கொட்டகையில் கறுப்பு மார்க்கட் சில்லறை வேலைகள்தான் செய்து கொண்டிருந்தவன் முதல் முதல் பெரிய திருட்டு...

அந்த வீடு [புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியில் இருந்தது. பின்புறமாக அதை அணுகினான். தனியாகத்தான் இருந்தான். எப்போதுமே அவன் தனியாகத்தான் இயங்கியிருக்கிறான். கூட்டாளிகள் சேர்த்துக் கொண்டதே இல்லை.

மாடிக்கு பின்புற ட்ரெய்ல் பைப் மூலம் சத்தம் இல்லாமல் ஏறி, துணி உலர்த்தும் கொடிகளைக் கடந்து அந்தத் தாளிட்ட கதவை முதலில் சந்தித்தான். அழுத்திப் பார்த்தான். மசியாது போலிருந்தது. கதவின் கீழ்ப் பகுதியில் இருந்த தாள் கொஞ்சம் மசியும் போலிருந்தது. இத்தனை நாளாகியும் இத்தனை திருட்டுகள் கொள்ளைகள் செய்து அகப்பட்டுத் தப்பித்து...



இப்போது எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு ஒரு மூலையில் காங்கிரீட் கலக்கும் சாதா நாராயணனாக மாறின பின்னும் அந்த முதல் திருட்டுத் தெளிவாக ஞாபகம் இருந்தது.

கதவு திறந்து கொள்ள, மெதுவாக பஞ்சடி வைத்து நடந்து உள்ளே செல்ல, ஒரு லிங்க் குழாய். அப்புறம் ஒரு சின்ன டாய்லெட் தெரிந்தது. அதன்பின் படுக்கை அறை ஒரே ஒரு செகண்ட் டார்ச் போட்டு அணைத்துவிட்டான். ஒரு பெரிய காட்ரெஜ் பீரோ. படுக்கையில் இரண்டு பேர் படுத்திருந்தார்கள். போய்விடலாம் என்று தீர்மானித்தான். கடைசி நிமிடத்தில் மனம் மாறினான். சுவரில் விளக்கு சுவிட்சைத் தேடினான். பட்டென்று பிரகாசம் அறையில் பரவ படுத்திருந்தது மூன்று பேர் என்று தெரிந்தது. கணவன் மனைவி, நடுவே ஓர் ஏழு வயதுப் பெண். சற்று நேரம் அயர்ந்து தூங்குபவர்களைப் பார்த்தான். சிறுமி ஒரு கணம் சிலிர்த்துவிட்டுத் திரும்பி தன் அம்மாவுடன் ஒட்டிக் கொண்டாள்.

''அய்யா! அய்யா!! எழுந்திருங்க!'' என்றான். பக்கத்தில் இருந்த நாற்காலியை நகர்த்தி சத்தம் செய் செய்தான்.

திடுக்கிட்டு எழுந்தார், அந்த ஆசாமி. ''யாரு! யாரு!'' என்றார்.

''நான்தான்! புண்ணியகோடி! கொஞ்சம் முழிச்சுக்கங்க ? அவுங்களையும் எழுப்பிடுங்க! இது பாருங்க இது என்னது?''

''க... க... த்தி''

''அனாவசிய சேதம் வேண்டாமில்ல!...''

''வே...வேண்டாம், வேண்டாம். என்ன வேணும்? என்று இயல்பாகக் கைக்கடிகாரத்தைக் கழற்றினார்.

''கெடியாரம் வேண்டாம், என்கிட்ட கெடியாரம் நிறைய இருக்கு. இந்த பீரோ சாவி வேண்டும்''

''கீழே இருக்கு''

"பொய் சொல்லாதீங்க!"

"இல்லை. மெய்யா கீழ இருக்கு"

அம்மா எழுந்தாள். உடனே 'கோ' என்று கதறினாள்.

"கூவாதீங்க! கூவக்கூடாது. நீங்கள் நான் சொல்றபடி கேட்டா ஒண்ணுஞ் செய்யமாட்டேன்..."

அவள் குழந்தையை நெருங்கினாள்.

"தூங்கற குழந்தையை எதுக்கு எழுப்பறீங்க? தேவையில்லை, அம்மா! பீரோ, சாவி எங்க இருக்குது. கொஞ்சம் சொல்றீங்களா?"

அவள் கணவனைப் பார்க்க... "சாவி இல்லையே! சாவி எங்கங்க?" என்று நடுங்கினாள்.

புண்ணியகோடி திடீர் என்று செயல்பட்டு, சரேல் என்று பாய்ந்து அவர் கன்னத்தில் கீறினான்.

அவர் பயந்து கன்னத்தைத் தொட்டு ரத்தத்தைப் பார்த்து, "அய்யோ! அய்யோ" என்று கத்த—

"கூச்சல் போடறதை நிறுத்து, முதலில்!"

"நிறுத்தறேன்"

"எடு சாவியை!"

தலையணைக்கு அடியில் இருந்து சாவிக்கொத்தை எடுத்து எறிந்தார்கள்.

"நேரா எதிர்த்தாப்பல இருக்கற ரூமுக்குப் போங்க!"

அவர்கள் எவ்வளவு பயந்தார்களோ அவ்வளவு அவனும் அப்போது பயந்திருந்தான். ஒரு கத்திதான் அதிகப் படியாக! உயிர்மேல் ஆசை ஓர் ஆசாமியை, ஏன் ஒரு கும்பலையே எவ்வளவு கோழையாக்க முடியும் என்பதை முடிவில் உணர்ந்து கொண்டான்.

"அண்ணே! காண்டிராய்ட்டரு கூப்பிடறாரு!"

"கொஞ்சம் பார்த்துக்கப்பா, வந்துர்றேன்"



சவுக்குச் சாரத்தில் படியேறி மாடிக்கு வந்தார்.

திலகம் ஒருமுறை அவனைத்திரும்பி பார்த்து பிரத்தியேகமாகச் சிரித்துவிட்டு தலைச்சுமையைக் காலிசெய்தாள்.

"வாய்யா நாராயணன். உனக்கு என்ன கூலி வேண்டாமா?"

"கூலி எங்க போறது முதலாளி! உங்களை தொந்தரவு செய்ய வேண்டாம். அப்புறம் வாங்கிக்கலாம் என்று இருந்தேன்"

"நல்ல ஆளுப்பா நீ! நாராயணன் உனக்கு பாங்கில் பணம் எடுக்கறது தெரியுமா?"

திடுக்கிட்டான். "என்ன சொல்றீங்க முதலாளி?"

"இந்த செக்கை எடுத்துட்டுப் போய் பணமா மாத்திக் கிட்டு வருவியா?..."

"நானா?"

"ஏன், உனக்குத் தெரியாதா?"

"மேஸ்திரி இல்லியா?"

"மேஸ்திரி டவுனுக்குப் போயிருக்கிறார், நாளைக்கு சென்ட்ரிங்குக்கு பலகை வாங்கிட்டுவர... உனக்குத் தெரியுமா, தெரியாதா?"

"தெரியுங்க, வாங்கிட்டுவறேன்!"

"படிச்சவன் தானே!"

"எஸ். எஸ். எல். சி. பாஸ்ங்க!"

ஜாக்கிரதை. எம்பிளாய்மெண்ட்எக்ஸ்சேஞ்சில் அதுதான் சொல்லுயிருக்கிறான். நான் நாராயணன்!

"கூட யாராவது அழைச்சுட்டுப் போ."

"இல்லிங்க, தனியாப் போறேன்..."

முதலாளி செக் எழுதிக் கொடுக்க... "இரண்டாயிரத்து ஐநூறு. ஜாக்கிரதையா எடுத்துட்டு வா"

அதைத் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டு "முதலாளி வந்தனங்க" என்றான்.

"ஏன், என்ன?"

"என்மேல உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?"

"இத பாரு. நான் பல விதப்பட்ட மனிதர்களைப் பார்த்திருக்கேன். எனக்கு ஓர் ஆள் கண்ணைப் பார்த்தால் அந்த ஆள் எப்படின்னு கண்டுபிடிச்சுடுவேன்..."

கீழே சாரத்தில் இறங்கும்போது எதிர் திசையில் மறுபடி திலகத்தைப் பார்த்தான்.

"எங்கய்யா! வேலகீல கிடையாதா!"

"வெளிய போறேன். உங்களுக்கெல்லாம் கூலிப் பணம் எடுத்துவர பாங்கிக்குப் போறேன்" என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டான்.

"எனக்கு ஏதாவது வாங்கிவா!" என்றாள்.

நாராயணனுக்கு நிறைவாக இருந்தது.

கீழே வந்ததும் சட்டென்று ஞாபகம் வந்து சரசர என்று மேலே ஏறிவந்து, "முதலாளி, பாங்கு எங்கு இருக்குன்னு சொல்லலிங்களே!' என்றான்.

அவர் சிரித்துக் கொண்டே, "அதான் யோசிச்சேன், கேட்டுவெச்சுக்காம போயிட்டானேன்னு. எப்ப ஞாபகம் வந்து திரும்பி வரான் பார்க்கலாம்னு சும்மா காத்துக்கிட்டிருந்தேன்... நேர அசோக்நகர் பஸ்ஸ்டாண்டுக்குப்போயி, அங்க விசாரி, தஞ்சாவூர் பாங்குன்னு கேளு..."

"அதான் செக்கில் எழுதியிருக்குங்களே!"

"படிக்கத் தெரியும்னு சொல்லிக்கறே! போய்ட்டு சிக்கிரம் வந்துரு!"



நாராயணன் பஸ்சுக்காகக் காத்திருக்கையில் இரண்டு விதமாக அவனுக்கு உற்சாகமாக இருந்தது. ஒன்று முதலாளியின் நம்பிக்கை, இரண்டு திலகம்! அவள் அவனைப் பார்த்து சிரித்த பிரத்தியேக சிரிப்பு.

திலகம் அவன் புதிய வாழ்க்கையில் பூத்த ஒரே ஒரு மலர். அவளை அப்படி ஒன்றும் அழகு என்று சொல்லிவிட முடியாது. நகரத்தில் வெயில் படாத பளபளப்பான சருமத்துடன் கார்களில் செல்லும் பெண்களைப் போல இல்லை நிறம் ஏறக்குறைய கறுப்பு என்றுதான் சொல்ல வேண்டும். கன்னத்தில் மெலிதாக அம்மை வடுக்கள் தெரியும். மிகபெரிதாக இருந்தும் அவளிடத்தில் சொல்லத் தெரியாத வசீகரம் இருந்தது. நேரான மூக்கு. நல்ல உயரம்.மஞ்சள் நிறச் சேலையைச்சுருட்டி சும்மாடு வைத்து அதன் மேல் பாண்டு வைத்து அதன் மேல் கைகளை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, சேலையைச் சற்று உயர்த்தி இடுப்பில் சொருகிக் கொண்டு அவள் சாரத்தில் நடக்கும் போது, அந்த கறுப்புக் காலில் வெளுப்புக் கொலுசு மெலிதாகப் புலம்ப திலகம் அழகுதான்! இது வேறுமாதிரி அழகு, பிரத்தியேகமான கலங்க வைக்கும் அழகு.

அப்புறம் அந்தக் குரல்— "யோவ்" என்றுதான் கூப்பிடுவாள். பெயர் சொல்லமாட்டாள். என் பெயர் அவளுக்குத் தெரியுமா என்பதே சந்தேகம். எப்போதாவது அவளிடம் தன் பெயரைச் சொல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டதா என்று யோசித்துப்பார்த்தான், ஊகூம். இருந்தும் பெயர் தெரியாமலே அந்த "யோவ்" மூலமாகவே ஒரு தனிப்பட்ட உறவு ஏற்பட்டுவிட்டது.

திலகம் எல்லோரையும் பார்த்து அப்படிச் சிரிப்பது இல்லை என்பதைக் கவனித்தான். மிகவும் அருகில் நிற்கையில் அவள் தலைச்சுமைக்கு வருவாள். ஒருசெகண்ட் அவர்கள் பார்வை சந்தித்துக் கொள்ளும். கான்கிரீட் கலவை போலச்சுழலும். அவனுக்கு அங்கங்கே தினசரி உழைப்பில் திருடிய கணங்களில் தெரிவித்த ஆசைகள்

நிலகத்திற்கு ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேண்டும். நிலகத்திற்காக நாராயணனாக இருந்தாக வேண்டும். நம்பிக்கை நாராயணன். முதலாளி ரூ. இரண்டாயிரத்து ஐநூறு வரை நம்பும் நாராயணன்...

அன்று பாங்கு கட்டிடம் அமைதியாகவே இருந்தது. செக்கில் பின்பக்கத்தில் "நாராயணன்" என்று கையெழுத்திட்டுக் கொடுத்து, "டோக்கன்" வாங்கிக் கொண்டு காஷியர் அருகில் காத்திருந்தான்.

விரல்கள் விரிர்ச்விரிர்ச் என்று நூறு ரூபாய்நோட்டுக்களை எண்ணி முணுமுணுத்துக் கொண்டிருந்த காஷியரைப் பார்த்தான்...

புண்ணியகோடி அந்த பாங்குக் கட்டிடத்திற்குள் வாடகைச் சட்டை அணிந்து கொண்டு, படியத் தலை சீவிக் கொண்டு நுழைந்தான். பெரிய க்யூ. வாசலில் துப்பாக்கியுடன் நின்று கொண்டு இருந்த கிழவன். அந்த ஆசாமி தன் பெரிய ப்ரீஃப்கேஸில் நோட்டுக் கத்தைகளை அடுக்கிக்கொண்டு. அதை மூடும் சமயத்தில்பாய்ச்சல். ஒரே பிடுங்கல்... நிமிஷமாய் சாலைக்குள் ஒரேவந்து வாடகை சைக்கிள் ஏறி எதிர்சந்தில் புகுந்து, மற்றொரு சந்து—மற்றொன்று மற்றொன்று...

"டோக்கன் நம்பர் 147"

"நான்தாங்க" என்றான், நாராயணன் "எல்லாம் பத்து ரூபாயா கொத்துடுங்க. நூறு ரூபாய்க்கு அஞ்சும் நூறு ரூபாய்க்கு ஒரு ரூபா நோட்டாகவும் கொடுத்திடுங்க!"

"ஒரு ஆள் கண்ணைப் பார்த்தால், அந்த ஆள் எப்படிங்கிறதை கண்டுபிடிச்சுடுவேன்."

"அவ்வளவு சுலபமில்லை முதலாளி ..!"

ரூபாய் நோட்டுகளை வாங்கித் திணித்துக்கொண்ட போது நாராயணனுக்கு அந்தப் பணத்தின் பேரில் சுடு



பாடோ வாஞ்சையோ ஏற்படவில்லை. எத்தனைபணம் பார்த்திருக்கிறான். ஒன்றா, இரண்டா. ஆயிரக்கணக்கில்! எப்படியெல்லாம் செலவழித்திருக்கிறான்.

"இந்தா! வலது பக்கத்துக்கு ஒண்ணு, இடது பக்கத்துக்கு ஒண்ணு ஒட்டவெச்சுக்க" என்று இரண்டுநூறு ரூபாய் நோட்டு! "இதான் உனக்கு உடை!"

"இன்னும் ஒரு நோட்டு வேணுங்களே!" மெல்லிய இருட்டில் பார்த்த பெண் முகங்கள். ஐந்து நிமிடத்தில் ஒரு நிமிடம் பார்த்து, ஒரு நிமிடம் சிரித்து, ஒரு நிமிடம் விளக்கு அணைத்து, ஒரு நிமிடம் உடைகளைக் களைந்து...

"முன்னாலயே பணத்தைக் கொடுத்துட்டிங்கன்னா சரி!"

பணம்! பணத்திற்காக என்னவெல்லாம் செய்ய வைத்திருக்கிறான்...

பாங்கை விட்டு வெளியே வந்தபோது, அருகே இருந்த பேக்கரியில் இரண்டு கேக் வாங்கிக் கொண்டான். தன் கூலியில் முதலாளியைக் கழித்துக்கொள்ளச் சொல்ல வேண்டும். ஒரு கேக் முதலாளிக்கு. மற்றது நிலகத்திற்கு, இன்றைய இரண்டு இனிப்புக்களுக்கு!

□

# 2

அந்த போலீஸ் நிலையத்தில், எல்லாபோலீஸ் நிலையங்களுக்கும் உள்ள குணாதிசயங்களில் இருந்து சற்று வேறுபட்டு, வாயில்புறம் தோட்டம் இருந்தது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தர்மராஜனுக்கு பூக்கள் என்றால் விருப்பம். சின்னச் சின்ன தொட்டிகள் அமைத்து, ஜிவியா ஆஸ்டர் ரோஜா என்று போற்றிப் போற்றி வளர்த்து இருந்தார். போலீஸ் நிலையத்தைக் கடக்கும்போது ஒரு சின்ன மல்லிகைப் பந்தல் சற்று நேரம் வாசனையடிக்கும். டி. சி. நிலையத்திற்கு வந்தபோது பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு இருக்கிறார்.

மலர்கள் மட்டும் அல்ல; தர்மராஜன் எல்லாவற்றிலும் ஒழுங்கு. மேசை சுத்தமாக இருக்க வேண்டும். துப்பாக்கிகள் பளபளக்க வேண்டும். பாத்ரூம்கள் துப்புரவாக இருக்க வேண்டும். மிதியடிகள் அடிக்கடி மாற்றப்பட வேண்டும், ரிக்கார்டுகள் நேர்த்தியாக இருக்க வேண்டும். தர்மராஜன் எல்லாவற்றிலும் ஒருவித பிடிவாதமான சுத்தத்தை கடைப்பிடிப்பவர். ஒரு கேஸ் எடுத்தால் அதை லேசில் விடமாட்டார் — துப்புரவாக விசாரித்து, துப்புரவாக 'ரிப்போர்ட்'' எழுதி...

தர்மராஜன் அப்போது கிரைம் பிராஞ்சில் இருந்து வந்த பைல் ஒன்றை தீவிரமாக ஆராய்ந்து கொண்டு இருந்தார். புண்ணியகோடி என்பவனைப் பற்றியது, அது.



பெயர் புண்ணியகோடி,வயது சுமார் 32, உயரம் 5-10. எடை 160. மாநிறம், சதுர முகம். கரிய கருண்ட தலைமுடி. நேரான நாசி. பெரிய உதடுகள். நடுத்தர உடற்கட்டு சரளமான குரல். பெரிய கண்கள் காதுகள் சற்று வெளியே படர்ந்து இருக்கும்...

அதுவரை மொத்தம் 36 தெரிந்த குற்றங்கள், கொள்ளை, பலவகைத் திருட்டுக்கள், ஏமாற்றுதல், கொலை செய்ததாகத் தகவல் இல்லை. திருட்டுமுறை வேறுபடும்.பலதடவை பயமுறுத்திப்பேசியேசுலபமாகத் திருடியிருக்கிறான். "என் பெயர். புண்ணியகோடி'' ஒரு முறை தாக்குதலில் மேன் ஸ்லாட்டர். மூன்று முறை அகப்பட்டு இருக்கிறான். மூன்று முறையும் சிறையில் இருந்து தப்பித்து இருக்கிறான். ஐ. க்யூ அதிகம், கெட்டிக்காரன். தமிழ் தெரியும். சிறையில் இருந்து தப்புவதில் சிலவசீகர முறைகளை செயல்படுத்தியிருக்கிறான். நடக்கும்போது சின்னச் சின்னதாக அடியெடுத்து வைக்கும் பாணி.

எங்கு கண்டாலும் உடனே கைது செய்யலாம். வழக்குகள் நிறைய இருக்கின்றன. மராட்டியம், கர்நாடக மாநிலப் போலீசும் இவனை தேடுகிறார்கள்.

தர்மராஜன் புண்ணியகோடியில் மூன்று போட்டோக்களைப் பார்த்தார். நேராக இடது, வலது முகங்கள். சற்றும் தயக்கம் இல்லாமல் காமிராவை நேராக உற்றுப் பார்க்கும் கண்கள்,

மறுபடி அந்த முகத்தைப் பார்த்தார். முகத்தில் குற்றம் ஏதும் தெரியவில்லை. எத்தனையோ விற்பன்னர்கள் முகத்தில் இருந்து ஓர் ஆசாமியின் உள்விகாரங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்று சொல்வதெல்லாம் பொய் என்று நிரூபிக்கும் சஞ்சலம் இல்லாத முகம்-புண்ணியகோடி! நீ எங்கு இருக்கிறாய்?

ஹெட் கான்ஸ்டபிளைக் கூப்பிட்டார்.

"இதபாருங்க கந்தசாமி" என்றார். அவர்மரியாதையுடன் அருகில் நின்று எட்டிப்பார்த்து, "புண்ணியகோடி! தெரியும் சார். எத்தனை ஜில்லா ஜில்லாவா தேடிட்டு இருக்காங்க! எமகாதகன் சார். எட்டு தடவை ஜெயிலில் இருந்து தப்பிச்சிருக்கான் சார்"

"எட்டு இல்லைங்க. மூணு! சரியா சொல்லுங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டே அவனைப் பற்றி கட்டுக்கதையை கிளப்பி விட்டால் எப்படி!"

"புடிச்சா இரண்டாயிரம் ரூபா சார்! ஆப்பிடமாட்டேங்கிறானே! மெஸேச் ஏதாவது வந்திருக்கா. சார். மெட்றாஸ்ல இருக்கான்னுட்டு?"

"இல்லை. ஐ. ஜி. பொதுப்படையா ஒரு லெட்டர் எழுதியிருக்காரு, தீவிரமா முயற்சி எடுத்து அவனைப் பிடிக்கணும்; ரொம்ப நாளா கேஸ் பெண்டிங்குனு..."

சமீபத்தில் அவன் ஏதும் வேலை செஞ்சதா தகவல் இல்லீங்க!"

"நீங்கள் அவனைப் பாத்திருக்கிங்களா?"

"ஒரு முறை புரசைவாக்கத்தில் இருந்தப்ப ரிமாண்டுக்குக் கொண்டு வந்தாங்க? "பத்திரமா பார்த்துக்க கந்தசாமி. ஜெயிலை உடைக்கறதில் சூரன்"னு சர்க்கிள் ஸ்பெஷலா சொல்லிட்டுப் போனார். உறங்காமல் பார்த்துக்கிட்டு இருந்தேன். அதிகமாப் பேசலை சின்னப் பையன் பேர் என்னன்னு கேட்டேன். புண்ணியகோடினு சிரிச்சுக்கிட்டே சொன்னான். திருடறபோது கூட அடிக்கடி என் பேர் புண்ணியகோடின்னு சொன்னதா சாட்சி இருக்குங்க! கத்தியைக் காட்டி மிரட்டுவான். மீறினால் கீறிப்பிடுவான். அப்படி ஒண்ணும் வஸ்தாதுன்னுகூட சொல்ல முடியாதுங்க. மெலிசா இருக்கும் குரல். பிடி கீடி என்று சேர்க்க மாட்டான். லேசா சிரிச்சுக்கிட்டே ஓரத்தில் முழங்காலைக் கட்டிக்கிட்டு உக்காந்திருந்தான். என் காவல்ல அவன் தப்பிச்



சதில்லைங்க. சென்டிரல் ஜெயிலில் இருந்து தப்பிச்சருக்கான்னா அவன் என்ன சாமர்த்தியக்காரனா இருக்கணும்..."

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அந்த "போட்டோ" வைப் பார்த்துக் கொண்டே பேசினார் "கந்தசாமி, ஒன்னு செய்யுங்க! இந்த "போட்டோ" அஞ்சாறு காப்பி எடுத்துத்தரேன். கான்ஸ்டபிள்ங்க கிட்ட கொடுத்து வட்டாரத்தில் விசாரிக்கச்சொல்லுங்க. பஸ் ஸ்டாண்டில் சினிமா கொட்டகையில் ஓட்டல்களில். அப்புறம் இந்த ஏரியாவில் புதுசு புதுசா கட்டிடங்கள் கட்டறாங்க இல்லே. அங்க வெளியூர் ஆளுங்க நிறைய வேலைக்கு வந்திருப்பாங்க!"

"இவன் கூலி வேலை செஞ்சுக்கிட்டிருப்பான்னா சொல்றீங்க! இருக்காதுங்க! வேற மாநிலத்துக்குப் பறந்து போயிருப்பான் –"

"பார்க்கலாமே! எனக்கென்னவோ இவன் ஏதாவது ஒரு தொழில் தெரிஞ்ச ஆசாமியா இருப்பான்னு தோணுது. ஜெயில்ல இருந்து அவ்வளவு காலத்தில்தச்சு அல்லது இரும்பு வேலை ஏதாவது தெரிஞ்சிருக்கலாம்..."

ரிப்போர்ட்டை மறுபடி படித்தார். "சிறையில்இருக்கும்போது தச்சுத் தொழிலும், நெசவும் கற்றுக் கொண்டான்."

"இந்த முறை தீவிரமா முயற்சி செய்து பார்த்துறலாம் கந்தசாமி என்ன?"

"எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை சார்"

"இரண்டாயிரம் ரூபா கிடைக்கும் உங்களுக்கு!"

"அதனால்தான் சொல்றேன். எனக்கு அந்த மாதிரி ஒரு காசு இதுவரை வந்ததில்லை!"

கான்ஸ்டபிள் சென்றதும் அவர் அந்த ரிப்போர்ட்டை மடித்து வைத்து விட்டு சற்று யோசித்தார். கான்ஸ்டபிள்கள் கூடாது. நானே இதைத் தீவிரமாக எடுத்துக்

கொண்டு விசாரிக்க வேண்டும்...ஐந்து ஆண்டாகத் தலைமறைந்து இருக்கும் ஒரு பேர் போன புள்ளி.. போலீஸ் வலையில் இருந்து மூன்றுமுறை தப்பித்தவன். ஆயிரக்கணக்கில் திருடியவன்...ஓர் ஆசாமி இறப்பதற்குக் காரணம் ஆனவன் வெளியே இன்னும் உலவுகிறான்...எத்தனை போலீஸ் அதிகாரிகள். சாதனங்கள், வாகனங்கள், கம்ப்யூட்டர் இருந்து என்ன பிரயோசனம்?

அவன் வேல் வெறுப்பு அதிகரித்தது இந்த இயக்கத்தையே எள்ளி நகையாடுவதைப் போல இருந்தது அவன் பார்வையில் இருந்த நேர்மை...முதலில் இந்த "போட்டோ" விற்கு பிரதி யெடுக்கலாம் கட்டிடங்கள் கட்டப்படும் இடங்களில் விசாரிக்கலாம். டிபார்ட்மெண்டுக்குச் சென்று இவனைப் பற்றிய ரிக்கார்டுகளைப் பார்க்கலாம். இவன் சரித்திரத்தையே விரித்து வைத்திருப்பார்கள்...முழு முயற்சியாக இதை கவனிக்கலாம்.

அவருக்கு இந்த மாதிரி சமயங்களில் பாடுபட்டு மூளைக்கு வேலை தரக்கூடிய செயல்களில் ஈடுபடுவது தேவையாக இருந்தது—மனைவி இறந்து போனபின் அவர் வாழ்வில் ஏற்பட்ட வெறுமையைச் சமாளிக்க.

□

# 3

மாலை ஐந்து மணிக்கு வேலை முடிந்தது.

காங்க்ரீட் மிக்சர்களின் சுழற்சி நின்று போய் தற்காலிகமான செங்கல் கட்டிடத்துக்குள் மிச்சம் இருந்த சிமெண்டை பத்திரப்படுத்திப் பூட்டிவிட்டு, சிதறியிருந்த ஜெல்லியெல்லாம் பொறுப்பாகத் திரட்டி மறுநாள் உபயோகத்திற்கு ஒதுக்கி விட்டு கதவைப் பூட்டிக் கொண்டு நாராயணன் புறப்பட்டான்.

கூலிக்காரர்கள் எல்லோரும் உற்சாகமாக இருந்தார்கள். அந்த வார சம்பள தினம் அது. வெளியில் மேஜை போட்டு மேஸ்திரி உட்கார்ந்திருக்க, வரிசையாக விரல் நாட்டி கூலிக் காசு பெற்றுக் கொண்டு நடந்தார்கள்.

அந்த வரிசையின் கடைசியில் போய் நாராயணன் நின்றான். இரண்டு ஆட்கள் முன் திலகம் நின்று கொண்டு இருந்தாள். திரும்பிப் பார்த்து "சம்பளம் வாங்கிக்க வந்தியா" என்று சிரித்தாள். அவள் சும்மாடு இன்னும் தலையில் இருக்கமுதுகு பூரா தெரிந்தது. புள்ளி புள்ளியாக எளிய சேலை. அதற்குப்பொருத்தம் இல்லாத மஞ்சள் ரவிக்கை. எப்படி இருந்தால் என்ன? அந்த முதுகில் அவனுக்கென்றுபிரத்தியேகமாக ஒரு வசீகரம் இருந்தது. அத்தனை கறுப்பு இல்லை இவள். ஒருவிதமான காப்பி நிறம். கொஞ்சங்கூட அனாவசியப் பிடிப்பு இல்லாத உடல். மெலிசு என்றோ குண்டு என்றோ சொல்ல முடியாத நடுத்தரம்.

"நீ கொடுத்த கேக்கை அப்பவே தின்னுட்டேன்" என்றாள். வரிசை நகர சட்டென்று திரும்பி "எதுக்கு வாங்கி வந்தே" என்றாள்.

"நீதானே கேட்டே?" என்றான். மறுபடி திரும்பிக் கொண்டாள்.

மற்றவர்கள் ரிஜிஸ்தரில் விரல் ரேகை வைக்க அவள் மட்டும் கையெழுத்திடுவதைப் பார்த்தான்.

பணத்தை வாங்கிக் கொண்டு மார்பில் மறைத்துக் கொள்வதைப் பாத்தான். தனக்காக அவள் நிற்பதைப் பார்த்தான்.

"நீ கையெழுத்து போடறதுக்குள்ள பொழுது போய்டும். கைநாட்டுப் போடுய்யா" விரல் பதித்து விட்டு முப்பத்தாறு ரூபாய் சில்லறையை வாங்கிக் கொண்டு புறப்பட்ட அவளும் அவனுடன் நடந்தாள்.

"உங்க விடு எங்கே?" என்றாள்.

"மைலாப்பூர்"

"ரொம்பத் தொலைவுல்ல?"

"ஆமாம். நீ எங்கே இருக்கே"

"அரும்பாக்கம். அதுகூட தொலைவுதான். ஆனால் நடந்தே போயிடுவேன்! உங்கள் அப்பா அம்மாவெல்லாம் இருக்காங்களா?"

"இல்லே தனியா ரூம் எடுத்துட்டு இருக்கேன் நீ?"

"நான்கூட தனியா குடிசையில் இருக்கேன். நான் ஒரு ரேடியோ அவ்ளதான்!" என்று சிரித்தாள். ஒரு துணிப்பையில் இருந்து சிறிய டிரான்சிஸ்டர் எடுத்துக் காட்டினாள்.

"நீ படிச்சிருக்கியா?"

"ஆமாம். ஒம்பதாங்கிளாஸ்! எப்படித் தெரியும்."



"கையெழுத்துப் போடறப்ப பார்த்தேன்" அவள் கையெழுத்து சீராக இருந்தது நினைவுக்கு வந்தது.

"தமிழ்ப் புத்தகம் எல்லாம் படிப்பேன். நீ?"

"நானும்தான்!"

பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார்கள். "நான் எதிர்த்த பக்கம் போகணும்" என்றான்.

"நானும் உன் கூட வரட்டுமா" என்றாள்.

சற்று திகைத்து "எதுக்கு?" என்றான்.

ரிஷிமூலம் பார்க்கணும், சினிமாப் போவையா நீ?"

"இல்லை, போறதில்லை."

சினிமாக் கொட்டகையில்தான் முதலில் மாட்டிக் கொண்டான்.

"என்னோட சினிமாவுக்கு வரியா?" என்றாள். சாதாரணமான வார்த்தைகள். அர்த்தமோ உள் நோக்கமோ இலாது ஒட்டி மட்டும் தொனித்த வார்த்தைகள்.

"போனால் என்ன?" என்று தோன்றியது. "என்னையார் அடையாளம் கண்டுபிடிப்பார்கள்? ஐந்து வருசமாயிற்று. என் கேசை மறந்து போயிருப்பார்கள். எல்லா வற்றையும் மூடியிருப்பார்கள். அந்தக் காகிதங்கள், அந்த போட்டோக்கள், அடையாளங்கள் எல்லாம் எங்கோ உறங்கிக் கொண்டு இருக்கும்."

"வறேன்" என்றான்.

பஸ் வந்தது. பெண்கள் இருக்கையில் அவள் உட்கார அவன் அருகே நின்றான். அத்தனை பெண்களில் அவள் பிரத்தியேகமாகத் தெரிந்தாள். கழுத்தில் ஒரே மெல்லிய சங்கிலி, காதுகளில் ஏதோ நாலணா சமாச்சாரம். காற்றில் ஆடும் தலைமுடி முன் இருக்கையின் கம்பி வளைவைப் பிடித்திருந்த கைவிரல்களில் உழைப்பின் அழுக்கு.

நகரத்தில் இருப்பவர்கள் அத்தனை பேரும் அன்று சினிமாப் பார்க்க தீர்மானித்து இருந்தது போல மவுண்டு ரோடு பகுதியில் கூட்டம் பொங்கி வழிந்தது. தியேட்டர்

வாசலில் ''அவுஸ்புல்'' போர்டு போட்டு இரவுக் காட்சிக்கு இப்போதே நெருக்கிப் பசை போட்டு ஒட்ட வைத்தது போல் நின்றார்கள்.

திலகத்திற்கு ஏமாற்றத்தில் முகம் வாடி விட்டது ''ரொம்ப ஆசையா இருந்தேன்யா''என்றாள்,''திருட்டு டிக்கெட்டு ஏதாவது கிடைக்குமா பாறேன்'' என்றாள்.

ஓரத்தில் ஒருவன் நின்று இந்தப்பக்கம் அந்தப்பக்கம் விழித்துவிட்டு ''நாலு ரூபா டிக்கெட் வேண்டுமா? என்றான்.

''எவ்வளவு''

''எட்டு.''

''வேண்டாம்பா!'' என்றாள். ''எட்டு ரூபா ரொம்ப அதிகம்.''

அந்த நிடிலான ஆசாமி சட்டென்று சந்துப்பக்கம் மறைந்தான்–போலீஸ் தொப்பி தெரிந்தது.

அந்த போலீஸ்காரர் நேராக தன்னை நோக்கி வர, நாராயணன் சற்று நேரம் ஸ்தம்பித்துப் போய் சில்லென்று உணர்ந்தான். ஓடாதே! ஓடக்கூடாது.

போலீஸ்காரர் ''ஏன்யா! ப்ளாக்கில் டிக்கெட் வாங்கறீங்க! இப்ப டிக்கெட்கிடைக்கலைன்னா அட்வான்ஸ் புக்கிங் செய்துட்டுப் போங்க. மறுபடி வந்து பாருங்க! இந்தமாதிரி ஆளுங்களிடம் சொளையா எட்டும் பத்தும் கொடுத்து வாங்கறதினால் நீங்களும் இதை ஆதரிக்கிற மாதிரி ஆவுதில்லை?''

''வாங்கலிங்க!'' என்றான் நாராயணன்.

''பேசாம வீட்டுப் பக்கம் போய் சேருங்க!''

''வா திலகம்!'' என்றாள்.

இருவரும் தியேட்டரை விட்டு விலக. ''நாம் வாங்கினா இவருக்குக்கென்னவாம்!'' என்றாள்.



மவுனமாக நடந்தான்.

இப்போதெல்லாம் எட்டு ரூபாயா? எல்லாமே விலைவாசி அதிகமாகிவிட்டது. அவன் திருட்டு டிக்கெட்டு விற்ற காலத்தில் இத்தனை அதிகம் போகாது பால் கனியே இரண்டு ரூபாய்தானே, அப்போது? மூணு மூன்றரைக்கு விற்பான். இதே மவுண்டுரோடில் பாலம் தாண்டி சித்ராவில் ஒரு புத்தகத்தையே விற்றது ஞாபகம் வந்தது. எம். ஜி. ஆர். புதுப்படம். டிக்கெட் தியேட்டரில் வாங்கியதல்ல. அச்சடித்த டிக்கெட் மொத்த புத்தகத்துக்கே பத்து ரூபாய்தான் ஆயிற்று. தியேட்டர்காரர்களின் அவசரத்தை பயன் படுத்த வேண்டும். இரட்டை இரட்டையாக மூன்று ரூபாய்க்கு விற்கவேண்டும். கண்கள் சிவப்புத் தொப்பிக்கு அலைந்து கொண்டே இருக்க வேண்டும். தியேட்டருக்கு அருகில் இருக்கக்கூடாது. தூரத்திலும் இருக்கக் கூடாது. பஸ்விட்டு இறங்கி பையில் கையை அழுத்திக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வருகிறவர்களிடம் ''ஹவுஸ்புல்லுங்க. ரெண்டு டிக்கெட் இருக்குது. வேண்டுமா.''

அந்த இடத்தில் மிகக் குறைந்த நேரத்தில் முப்பது டிக்கெட் விற்று விட்டான். தியேட்டரில் இன்னும் அனுமதிக்க ஆரம்பிக்கவில்லை ஆரம்பித்தவுடன் ஓட்டம் எடுக்க வேண்டும். மிகவும் சிக்கலான வியாபாரம். ஆனால், அதில் அவனுக்கு ரத்தத்தில் உற்சாகம் ஏற்பட்டது ஓட்டம் என்றால் எப்படி ஓடுவான்! சிந்தாதிரிப்பேட்டையின் அத்தனை சந்துகளும் அத்துபடியல்லவா!

''என்னய்யா யோசிக்கிறே?''

''இப்ப நீ வீட்டுக்குத் திரும்ப தனியாப் போவியா?''

''தனியா இருக்கேன், தனியா போறதுக்கு என்ன? ஆனால் நான் இப்ப திரும்பிப் போறதா இல்லை.''

''பின்ன?''

''உன் கூட உன் வீட்டுக்கு வரப்போறேன்''

"எதுக்கு"

"பார்க்க! நான் மைலாப்பூர் பக்கமே வந்ததில்லை"

"வீடு இல்லை சின்ன ரூம்"

"ரூம்தான் இருக்கட்டுமே! பார்க்கக் கூடாதா?"

"ரூம்ல ஒண்ணுமில்லை"

"குடிக்க ஒரு தம்ளர் தண்ணி கிடைக்குமில்ல?"

"தாராளமா."

"என் குடிசையைவிட நல்லா இருக்குமில்ல?"

"இதும் ஒரு குடிசை மாதிரிதான்! சின்ன ரூமு ஆஸ்பெஸ்டாஸ் கூரை!"

"பார்த்துறலாமே! நானும் உன்கூட வர்றதில்உனக்கு ஏதும் தப்புன்னு பட்டுச்சுன்னா சொல்லிடுய்யா!"

"அதெல்லாம் இல்லை"

"உன் பேர கேட்டு வெச்சுக்கவே இல்லையே!"

"நாராயணன்"

"சாமி பேரு!" என்று கன்னத்தில் தொட்டுக்கொண்டாள். "நீ என்ன சாதி?"

"தெரியாது"

"சொந்த ஊர் எது"

"இந்த ஊர்தான்"

ஜாக்கிரதை. ரொம்ப கேள்வி கேட்கிறாள்... அந்த ஆள் நெரிசலில் அடிக்கடி அவன் மெல்ல அவள் மீது பட்டது தற்செயலான விஷயமாக இருந்தாலும். நாராயணனுக்கு உற்சாகமாக இருந்தது.

தன் அறையை மானசிகமாகப் பார்த்தான். துணிகள் எல்லாம் தாறுமாறாகத் தொங்க, கீழே எல்லாம் பத்திரிகைகள் இறைந்திருக்க, சோப்புப் பெட்டி திறந்திருக்க, சேச் சே ஒரு நிமிடம் முன்னால்போய் ஒழுங்கு



படுத்த வேண்டும். யோசித்துப் பார்த்தால், அந்த அறைக்கு வரப்போகும் முதல் விருந்தாளி, அவள். முதலில் "பத்மா"வுக்கு அழைத்துச் சென்று, "ஃபேமிலி" ரூமில் காப்பி பலகாரம் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

ஏற்கனவே "ஃபேமிலி" ரூமில் ஒரு குடும்பம் இருந்தது சற்று ஏமாற்றமாக இருந்தது. தனியாக அவளிடம் பேசலாம் என்று எதிர்பார்த்திருந்தான்.

அவள் நன்றாக கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு சாம்பாரை இட்லியின் தலையில் கொட்டிப் பிசைந்து, வடையைப் புட்டுப் புட்டு வைத்துக் கொண்டு சோறு போல் குழைத்துக் குழைத்து நிமிஷமாய் சாப்பிட்டு விட்டாள். தண்ணீரை ஒரே மடக்கில் குடித்துவிட்டு, காப்பியை தூக்கிக் குடித்துவிட்டு, "அப்பா! பசியாறிச்சுய்யா" என்றாள். இவன் அவளையே பார்த்துக் கொண்டு இருந்ததால் "என்னது! சாப்பிடாம வெச்சுக் கிட்டிருக்கியே!"

"நீ சாப்பிடறதை பார்த்துக்கிட்டு இருந்தேன்"

"கேலி பண்ற. பாத்தியா?"

"இல்லை. நீ சாப்பிடறது அழகாத்தான் இருக்கு' அப்படித்தான் சாப்பிடணும்!"

"பில்லு நீயா, நானா?"

"நான்தான்! எங்க பேட்டைக்குத்தானே நீ வந்திருக்கே!"

"அரும்பாக்கத்தில் இந்தமாதிரி ஓட்டல் கூட கிடையாது. நீ மட்டன் தின்னுவியா?"

"ம்!!'

"நல்ல மட்டன் குழம்பு வெக்கிற மிலிட்ரி ஓட்டல் ஒண்ணு இருக்கு. அங்க கூட்டிப் போறேன்!"

அறைக்கு சற்று அவசரமாக ஓடி அவள் நுழைவ தற்குள் ஒழுங்குபடுத்த முற்பட்டான். அவள் உள்ளே வந்து அவனுடன் இயல்பாக சேர்ந்துகொண்டு கீழே கிடந்த காகிதங்களை அடுக்கி வைத்தாள். குனிந்த போது அவள் மார்பு ஏறக்குறைய முழுவதும் தெரிய அவன் சற்றுத் தடுமாறினான்.

"பார்த்துக்க ஒரு ஆள் இல்லின்னா ஆம்பிள்ளைங்க ளும் இப்படித்தான் இருக்கும் போலிருக்கு. நீ விடுய்யா, நான் எடுத்து வெக்கறேன்" என்று அவன் கைக் காகிதங்களைப் பிடுங்கினாள். அவசரமாகச் சென்று அவன் தன் உள்ளுடைகளை மடக்கி வைத்தான்.

சில நிமிடத்தில் அறையை சுத்தம் செய்துவிட்டாள். "இப்படி எப்படி இருக்கு?" என்றாள்.

"ஒரு பெண்ணோட கைபட்டா எல்லாமே பளிச்சுனு ஆய்டும்னு தோணுது"

"உனக்கு கல்யாணம் ஆயிருச்சா?"

"இல்லை. உனக்கு?"

"ஊகூம். காத்துக்கிட்டிருக்கேன். உன்னை ஒண்ணு கேக்கட்டுமா?"

"என்ன?"

"ஏன் தாடி வெச்சிருக்க? ஏதாவது வேண்டு தலையா? விரதமா?

"அதெல்லாம் இல்லை"

"பின்ன எடுத்துறேன்"

"எடுக்கமாட்டேன்"

"ஏதாவது காரணம் இருக்கணுமே?"

"காரணம் இருக்கிறது. ஆனால், உன்னிடம் அதை சொல்லமாட்டேன்" என்பதை சிரிப்பில் மழுப்பினான்



ஜாக்கிரதை! இவள் ரொம்ப அருகே வருகிறாள். பட்டும் படாமலும் இருக்க வேண்டும். என்றாவது, யாரிடமாவது சொல்லிவிடப் போகிறோம் என்ற பயம் அவனுக்கு எம்போதும் உண்டு. தூக்கத்தில் உளறிவிட லாம் என்று எப்போதும் தனியே தூங்கியிருக்கிறான். குடிப்பழக்கம் ஏற்பட்டால் அப்போது உளறிவிடலாம் என்று சந்தர்ப்பம் கிடைத்தும் குடித்ததே இல்லை.

இப்போது இந்தப் பெண்... ஒருவேளை என்னைப் பற்றி சந்தேகிக்கிறாளோ? எதுக்கு இப்படித் துருவிக் கேட்கிறாள்? புரியவில்லை. எதற்கும் அதிகம் இவளிடம் வாயைவிடாமல் இருக்க வேண்டும், எச்சரிக்கை.

"நீ விட்டுக்குத் திரும்பிப் போகணுமில்ல? நேரமா யிடும். அப்புறம் பஸ் கிடைக்காது."

"விரட்டிறியே, என்கிட்ட பயமா?"

"இல்லை."

"நான் தனியாளு, பொம்பிள்ளை. உன்னை என்ன செய்து விட முடியும்?"

"அதுக்கில்லை"

"இல்லை, சுத்துப்பட்டவங்க உன் ரூமுக்கு ஒரு பொம்பளை வந்தா ஏதானும் ஏறுமாறாபேசுவாங்களா?"

"சுத்துப்பட்டவங்க யாருன்னே தெரியாது, எனக்கு."

"அப்ப நான் கேக்க வேண்டியதை பளிச்சுனு கேட்டுக்கிறேன்."

"என்ன?"

"நான் உன்னோட தங்கலாமாய்யா?"

இந்தக் கேள்வியின் எதிர்பாராத தன்மை அவனைத் தாக்கியது. இந்தக் கோணத்தில் அவன் நினைத்துப் பார்க்கக்கூட இல்லை. வாழ்நாள் முழுவதும் தனியாக

இருந்தவனுக்கு தனியாகத் திருடி, தனியாக ஜெயிலுக்குப் போய், தனியாகத் தப்பித்து தனியாகத் தலைமறைந்து வாழ்கிறவனுக்கு ஒரு புதுப் பிணைப்பா! ஒரு புதிய சொந்தமா?

வேண்டாம்?

ஏன் வேண்டாம்?

"எதுக்கு" என்றான்.

"இத பாருய்யா, நான் தனிக்கட்டை! நீயும் தனிக்கட்டை. ஆனால் நான் பொம்பளை. ஒரு பொம்பளை தனியா இருக்கிறது எத்தனை சிரமம்னு உனக்குத் தெரிந்து இருக்கும். அரும்பாக்கத்தில் நான் இருக்கிற குடிசையை வந்து பாரு. அந்த பேட்டையை வந்துபாரு. ராத்திரியானா எத்தனை ஆளுங்க பட்டை சாராயம் அடிச்சிட்டு வந்து தொத்தக் கதவைத் தட்டறாங்கன்னு வந்து பாரு! ஒரு பொம்பளை தனியா இருக்கான்னா உடனே கூட ரெண்டு மூணு விசயங்களையும் சேர்த்துக்கிடறாங்க. கூப்பிட்ட குரலுக்கு வந்துருவா. அஞ்சுருபா, பத்துருபா கொடுத்தா அத்தனையும் கழட்டிருவான்னு எதிர்பார்க்கறாங்க. அதுக்காகன்னு ஒரு கிழவியைசோறு போட்டுகூட வெச்சுக்கிட்டிருந்தேன். அது ஒரே திருடு! தினம் காசு திருடும். அதே குடிக்கும்! துரத்தி விட்டுட்டேன். பதினைஞ்சு நாளா தனியாத்தான் இருந்து பார்த்தேன். சமாளிக்க முடியல. யோவ்! எனக்கு ஒரு ஆண் பிள்ளை துணை வேணும்யா! வேறு ஒண்ணும் வித்தியாசமா நினைச்சுக்காதே! நான் உனக்கு சோறாக்கிப் போடறேன். ஒரு ஸ்டவ்வு, ரெண்டு அலுமினியப் பாத்திரம் வாங்கியா! இந்த இடம் போதும். வெளியில் மொட்டை மாடியில் படுக்கறேன். எனக்கும் கூலி வருது; உனக்கும் கூலி வருது. இருக்கிற காசு போதும். ஒண்ணு ரெண்டு சினிமாக்கூடப் பார்க்கலாம். என்னை ஏத்துக்கய்யா! எனக்கு யாருமில்லை. நான் அனாதைய்யா!" என்றாள்.



அவள் கண்களில் கண்ணீர் தெரிந்து, மெலிதாக கன்னத்தில் வழிந்தது.

"அழாதே! எதுக்காக அழறே?"

"இல்லை. நீயாவது அங்க வந்து என்கூட இருந்துரு. சின்ன குடிசைதான். ஆனால், துப்புரவா சுத்தமா வெச்சிருக்கேன் பக்கத்திலயே தெருவிளக்கு இருக்குது."

"திலகம். எப்படி என்னை நம்பறே? என்னைப் பற்றித் தெரியுமா, உனக்கு?"

"தெரியும்."

"என்னது?"

"ஒரு ஆள் எப்படிப்பட்டவன்னு முகத்தைப் பார்த்தாலே தெரிஞ்சுரும், எனக்கு"

"நான் எப்படிப்பட்டவன்னு சொல்றே?"

"சாது! கண்ணிலயே தெரியுது. தப்புத் தண்டாவுக்குப் போகமாட்டே! உன்காரியம் உண்டு, நீ உண்டுன்னு இருப்பே! பொம்பளைங்ககிட்டமரியாதையா நடத்துப்ப! பேச்சுல ஒரு பரிவு இருக்குது. எனக்கு உன்மேல முழுசா நம்பிக்கை ஏற்பட்டுடுச்சுய்யா! அதான் இப்படி தைரியமா கேட்டுட்டேன்!"

மனதுக்குள் சிரிப்பு வந்தது. கண்ணில் தெரிகிறதாம். முதலாளிகூட அதைத்தான் சொன்னார்! என் வேஷம் முழுசாகி, என் திரை பூராவும் விழுந்துவிட்டது.

புண்ணிகோடி புதைந்துவிட்டான்.

"மெய்யாத்தான்யா சொல்றேன். உன்மாதிரி நாலு சனங்க இருக்கிறதினால்தான் மழை பெஞ்சுக்கிட்டிருக்கு."

பெண்ணே! புண்ணியகோடியைத் தெரியுமா உனக்கு! அவன் செய்ததப்புத்தண்டாக்களின் பட்டியை

நீ அறிவாயா? அவன் சிந்த வைத்த ரத்தம் தெரியுமா, உனக்கு? அடித்த கொள்ளைகள்; கடித்த கைகள், கீறிய கத்திகள், மீறிய சிறைகள் எத்தனை உள்ளன! அவையெல்லாம் அவனுள் மறைந்திருக்கின்ற விஷயம் உனக்கு எப்படித் தெரியும்? என்னால் மறைக்க முடியவில்லையே! 

"என்ன சிரிக்கிறீங்க"

"என்மேல இவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கியே அதை நினைச்சுத்தான்"

"நான் யாரையும் சுலபமா நம்பமாட்டேன்யா?"

"வா, வெளிய போகலாம்"

"நீ எனக்கு இன்னும் பதில் சொல்லலியே?"

"சொல்றேன், வா!"

மெல்ல நடந்தார்கள்.

குளக்கரையில் கடைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டே லஸ் பக்கம் திரும்பினார்கள் பாலத்தைக் கடந்து, பகட்டான ஒளி வெள்ளத்தில் கடை கடையாக நிறைந்திருக்கும் துணி வகைகளை வேடிக்கை பார்த்தார்கள்.

அவளுக்கு ஒரு சேலை வாங்கித் தரலாமா என்று யோசித்தான். இருப்பது 30 ரூபாய். விலைச்சீட்டுக்கள் "முடியாது" என்றன.

அவன் மேல் எந்த சந்தர்ப்பத்திலும் படாமல்தான் நடந்து வந்தாள். அதனாலேயே அவள் பேரில் ஓர் இச்சை ஏற்பட்டது!

துணை—ஆண்பிள்ளைத் துணை. எப்படிப்பட்ட துணையைக்கேட்கிறாள், இவள். சமுகத்திற்கா, சந்தோஷத்திற்கா?



சாலையைக் கடந்து பிளாட்பாரம் பிள்ளையாரிடம் விபூதி பெற்றுக் கொண்டாள். மல்லிகைச்சரம் வாங்கித் தலையில் சொருகிக் கொண்டாள். காமதேனுவில் நடைபெறும் சினிமா "பார்த்தாகி விட்டது" என்றாள். பிச்சைக்காரர்களுக்கு காசு போட்டாள்,

இந்த கூட்டமான இடத்தில் எல்லாம் அவன் சாதாரணமாக அலையமாட்டான். ஒருநாள் சாப்பிட்ட ஓட்டலில் மறுநாள் சாப்பிடமாட்டான். இடம் மாற்றிக் கொண்டே இருப்பான். அறைக்கு எவரையும் வர விட்டது இல்லை. ஸ்திரமாக எதுவும் இல்லை. எந்த நிமிஷமும் போலீஸ் தட்டலை கதவில் எதிர்பார்த்த, முதல ஆண்டு. அப்புறம் கொஞ்சம் சுதாரித்த ஆண்டுகள். இருந்தும் எப்போதும் ஒருவித எச்சரிக்கை நிலை..

இன்று அவை இத்தனையும் கைவிட்டு கூட்டத்தில் புழங்குகிறான். காரணம், அவள்தான்.

"என்ன, யோசிச்சியா? தீர்மானிச்சியா?"

"தீர்மானிச்சுட்டேன்"

"என்ன?"

"சரி!" என்றான், சுருக்கமாக

முதல் தடவையாக அவன் கையைப்பற்றி சின்னதாக அழுத்தினாள். "பிள்ளையார்கிட்ட வேண்டிக்கிட்டது உடனே பலன் கிடைச்சுருச்சு" என்றாள். "வாய்யா ஓட்டலுக்குப் போய் சாப்பிடலாம். இன்னிக்கு என் செலவு!"

"நாளைக்கே வந்துரு!" என்றான்.

"மாத்திக்கத் துணியில்லை. இல்லைனா இன்னிக்கே வந்திடுவேன்" என்றாள். "ஒண்ணு செய்யறேன். படுத்திருந்துட்டு விடியக்காலைல கிளம்பிடறேனே"

"படுக்கை எதும் இல்லை"

"தரைல படுக்கறேன். உனக்கு என்ன ஆச்சு"

இருட்டில் முழங்கையைத் தலையணையாக வைத்து ஓரத்தில் படுத்திருந்த அவள் வடிவம் தெரிந்தது.

தோளின் சரிவும், இடுப்பு சரேல் என்று குறுகி உடனே வளைந்து நிறைந்து இருப்பதும், அவள் மார்பும் வயிறும் சீராக அசைவதும் சன்னல் வழியாகத் தெரிந்த விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தன.

எத்தனை நாளாகிவிட்டது. ஒரு பெண்ணைத் தொட்டு—

''உம் பேர் என்ன?''

''என் பேரைக் கேக்கறதுக்கா ரூபா கொடுத்து இங்க வந்தே?''

''தமிழ் பேசறியே!''

''நான் தமிழ் ஆளுதான். இங்க வந்து மராட்டி, குஜராத்தி எல்லாம் கத்துக்கிட்டேன். உன் பேர் என்ன?''

''புண்ணியகோடி! ஏன் சிரிக்கிறே''

''பேரு நல்லாருக்கு''

''சிரிச்சது போதும்!''

''இருப்பா! சிரிப்புத்தாங்கலை, எனக்கு!''

''இப்ப சிரிப்பை நிறுத்தப்போறியா இல்லியா!''

''நிறுத்தமாட்டேன்!''

''நிறுத்தமாட்டே? நிறுத்தமாட்டே?''

''அய்யோ!''

தோளில் ஒரு சின்னக் கத்திக்கீறல்! ''ஞாபகம் வெச்சுக்க!''

அவள் கைப்பையில் இருந்த அத்தனை பணத்தையும் பிடுங்கிக் கொண்டு விரைந்தது ஞாபகம் இருந்தது...



பெண்கள்! புண்ணியகோடியின் பெண்கள்! நாராயணனுக்கு கிடைத்தவள். இவள் வேறு, இவள் வேறு!

''தூங்கிட்டியா?'' என்றாள்.

''இல்லை.''

''ஏதாவது பேசேன்''

''என்ன பேச?''

''உன்னைப்பத்தி சொல்லேன்.''

''என்ன சொல்ல''

''அம்மா பேரு, அப்பா பேரு''

''தெரியாது''

''தெரியாதா?''

''சின்னப் பிள்ளையில் அம்மா செத்துட்டாங்க. அப்பா என்னை பஸ் ஸ்டாண்டில் விட்டுட்டு ஓடிட்டாங்க!''

''அடப்பாவி! அப்புறம் என்ன செஞ்சே?''

''என்னவோ செஞ்சேன். பிச்சைஎடுத்தேன், வீட்டு வேலை செஞ்சேன், எடுபிடி வேலை செஞ்சேன். எவ்வளவோ செஞ்சேன்!''

''எங்கப்பா சாராயம் குடிச்சு செத்துட்டாரு. அம்மா வேறு ஒருத்தனோட இருக்காள். எனக்கு அவள் செத்துட்டாள்... நான் தனியா வந்துட்டேன்''

அவள் பேசிக்கொண்டே செல்வது மனதில் பதியாமல் அவனுக்குக் கண்கள் சொருகின.

பஸ் ஸ்டாண்டு, பழக்கடை, எடை பார்க்கும் மெஷின், பலகாரக்கடை... ''இங்கேயே இரு என்ன?'' ''அப்பா... அப்பா'' என்று அழுதுகொண்டே தேடியது. பசி— இனம் காண முடியாது அழுந்த மனதில் பதிந்து கொண்ட பயம் அந்த துரோகம், அவன் உள்ளே ஏற்படுத்திய மனச்சேதம்.

□

022-33486886

# 4

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் கிரைம் ப்ராஞ்ச் ரிகார்ட் செக்ஷனில் இருந்து வெளிப்பட்டு சன்னல் அருகில் இருந்த மேசை முன் உட்கார்ந்தார்.

புண்ணியகோடியின் சரித்திரம் முழுவதும் இரண்டு கனமான ஃபைல்களில் அடங்கியிருந்தது. மெல்லப் புரட்டினார். அவன் படம், உடல் அமைப்புப்பற்றிய விரிவான குறிப்புகள். பத்து விரல்களின் ரேகைப் பிரதிகள் அவன் செய்த குற்றங்களின் பட்டியல்... எல்லா விவரங்களும் துல்லியமாக இருந்தன.

தன் பையில் இருந்து ஒரு சிறு காகிதத்தை எடுத்தார். பேனாவைத் திறந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டார்.

37 குற்றங்களில் ஒன்று அவன் செய்ததாகக் கருதப்படுவது. பெரும்பாலும் திருட்டு, கொள்ளை, அதிக பட்சம் நாற்பதினாயிரம். திருடிய இடங்கள் — வேலூர், வேலூர், வேலூர், செங்கல்பட்டு, சென்னை, சென்னை, சென்னை, பெங்களூர், பம்பாய், சென்னை...

மொத்தக் குற்றங்களில் பெரும்பாலும் சென்னையே. முதல் குற்றம் வேலூர், பிறந்து வளர்ந்த இடம் வேலூராக இருக்கலாம். ஒவ்வொரு பம்பாய்க் குற்றத்திற்குப் பின் அடுத்த குற்றம் சென்னை. கடைசிக் குற்றம் பம்பாய் எனவே அடுத்து சென்னைக்கு வந்திருக்கிறான் என்று சொல்லலாம். சமீபத்தில் குற்றம் இல்லை.



குற்றம் செய்யவில்லை. அல்லது அகப்படவில்லை. குற்றம் செய்யும் பாணியில் பெயர் புண்ணியகோடி என்று அறிவிப்பதுதான் பொதுவான அம்சமாக இருக்கிறது. போலீசை சவால் விடும் நோக்கமாக இருக்கலாம் அப்புறம் அடிக்கடி கத்திக் கீறல்.

''என்ன தர்மலிங்கம் எங்கே இவ்வளவு தூரம்.''

சி. ஐ. டி. பிரிவைச் சேர்ந்த ராஜகோபால அவர் தோளில் கைவைத்தார். ''என்ன நோட்ஸ் எல்லாம் எழுதிக்கிட்டிருக்கீங்க?''

''புண்ணியகோடிங்கிறவனைப் பற்றி சர்குலர் வந்தது. கொஞ்சம் ஆள் எப்படின்னு தெரிஞ்சுக்கலாமேன்னுட்டு பழைய ரிக்கார்ட்ஸ் பார்க்கிறேன்!''

''புண்ணியகோடி இல்லை. அவன் புண்ணியகேடி! மூணு முறை ஜெயிலில் இருந்து தப்பிச்சிருக்கான்''

''அவன் செயல் முறைகளைப் பார்த்தீங்களா?''

''இன்னும் பார்க்கலை.''

''ஒவ்வொரு முறையும் பாதுகாப்பில் இருந்து தப்பிச்சிருக்கான்! இத்தனைக்கும் சூப்ரண்டுக்கு ஸ்பெஷலா சொல்லியிருந்தும்!

''சுவர் ஏறிடுவானோ?!''

''முடியாது''

''பின்ன எப்படி''

''ஏதோ ஜெயில் முறையில் ஒரு ஓட்டை! நாம்கண்டுபிடிக்காத ஓட்டை இருக்கு! அது அவனுக்குத் தெரிஞ்சிருக்கு. மூணு தடவையும் மெட்றாஸ்லதான் தப்பிச்சிருக்கான். பாருங்க! நாங்களும் சல்லடை போட்டு ஜில்லா ஜில்லாவா சலிச்சுட்டம். அஞ்சு வருஷமா தலைமறைவா இருக்கான்னுதான் தோணுது... முயற்சி பண்ணிப் பாருங்க! ஒரு ரிவார்டு கூட இருக்குது''

"ரிவார்டுக்காக இல்லிங்க! இவ்வளவு தூரம் நம்ம போலீசை ஏமாத்தியிருக்கான்னு உறுத்துது. அதனால் நம்மால் இயன்ற அளவு முயற்சி பண்ணிப் பார்த்திடலாம்னு"

"செய்யுங்க. நம்ம பிராஞ்சுக்கு மாத்தல் வாங்கிட்டு வந்துடுங்களேன்."

"இல்லிங்க! ஸ்டேஷன் ஒர்க் நல்லாத்தான் இருக்குது"

"சாரி. மறந்தே போய்ட்டேன், உங்கள் மனைவி! "

"ஆமாங்க! நானும் மறக்கத்தான் இந்த மாதிரி புதுசா வித்தியாசமா ஏதாவது பார்க்கலாம்னுட்டு!"

"ரொம்ப சாரி." அவர் தோளில் அமுக்கிவிட்டு நிற்கிறார்.

தர்மலிங்கம் சற்று நேரம் ஃபைலை மறந்து வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு இருந்தார். ஆஸ்பத்திரியில் அவர் கையைப்பிடித்துக் கொண்டு "என்னை விட்டுடாதீங்க! இந்த இடத்தை விட்டுப் போய்டாதிங்க! இருங்க" என்று கெஞ்சிய குரல் அவருள் ஒலித்தது.

எப்படி மறப்பது? வீட்டை மாற்றியாகிவிட்டது. அவள் துணிமணிகள் எல்லாவற்றையும் தானம் செய்தாகி விட்டது. படுக்கை தலையணை உறை எல்லாவற்றிலும் அவள் வாசனை மிஞ்சியிருக்க அவற்றை தூக்கி எறிந்தாகி விட்டது. புகைப்படங்களை டிராயருக்கு அடியில் சொருகியாகிவிட்டது. இப்போது மனதில் மிஞ்சியிருக்கும் வடிவத்தை மறக்க புண்ணியகோடி!

மேலும் குறிப்புகளில் ஆழ்ந்தார்.

வயது 32. சிறையில் கற்றது, நெசவு, தச்சு...தச்சு வேலை தெரிந்தவர்கள் எங்கெங்கோ இருப்பார்கள்...



மாலை ஆறுமணிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பியபோது சாலையின் இருமருங்கிலும் செல்லும் கூட்டத்தைப் பார்த்து மலைத்தார்.

முதலில் சென்னையில் இருக்கிறானா என்பதே சந்தேகம் இருந்து, இந்த லட்சங்களில் எங்கே கரைந்திருக்கிறான்?

எங்கே ஆரம்பிப்பது?

எப்படி ஆரம்பிப்பது?

நெசவுத் தொழில் தெரிந்தவர்கள் சென்னையில் அதிகம் தேவையில்லை. ஆனால் தச்சர்கள்? தச்சர்கள் எங்கும் தேவைப்படுவார்கள். ஆரம்ப சித்தாந்தம் ஒன்று அமைத்து கொண்டார். அது புண்ணியகோடி சமீபகாலத்தில் குற்றம் எதுவும் செய்யாமல் சற்று நேர்மையான தொழில் ஒன்றில் இருக்கலாம் என்று.

இதை அவரது போலீஸ் அனுபவத்தில் உள்ளுணர்வு சொன்னது. இதுவே தப்பாக இருக்கலாம். அவன் அதிகம் படித்தவன் அல்ல. மற்ற மாநிலங்களுக்குச் சென்றாலும் உடனே சென்னை திரும்பியிருக்கிறான். சென்னைதான் அவன் மையம்.

திருடும் பாணியிலும் சில பொது அம்சங்கள் உள்ளன. கதவின் கீழ்த் தாழ்ப்பாளை நெம்பித் திறப்பது' காத்ரெஜ் போன்ற இரும்பு அலமாரிகளைத் திறப்பதில் இரண்டு முறை, வீட்டுக்காரர்கள் இருந்தால் பயமுறுத்தி சேதப்படுத்தி சாவிகளை வாங்கிக் கொண்டு திறப்பது. எப்போதும் கத்திக்கீறல் தோளில் வீட்டில் எவரும் இல்லையென்றால் அதைக் கவிழ்த்துப் பின்புறத் தகட்டை உடைப்பது, அந்தப்பாணி பலமுறை திரும்பத் திரும்ப வருவது ரிக்கார்டுல் இருக்கிறது அந்தப் பாணியில் திருட்டு சமீபத்தில் நிகழவில்லை. எனவே, அவன் தமிழ்நாட்டில் இருந்தால் இப்போது திருடுவது இல்லை என்று கொள்ளலாம்.

முதல் முதல் கட்டிட வேலை நடக்கும் இடங்களில் விசாரிக்கலாம். அதற்கு முன் அவன் "போட்டோ" வின் பிரதிகள் வேண்டும்...

வெறுமையான தன் வீட்டிற்குச் செல்ல விருப்பம் இல்லாமல் தன் நிலையத்திற்கு சென்றார்.

## 5

நாராயணன் தலையைக் குனிந்துகொண்டு அந்தக் குடிசைக்குள் நுழைந்தான்.

ஆளுயரமே இருந்த கூரை. குறுக்கே ஒரு கொடிக் கயிறு. நடு மூங்கிலில் தொங்கிய அரிக்கேன் விளக்கு. ஓரத்தில் இரண்டு பாத்திரங்கள். சாணிப்பச்சையாய் மெழுகியிருந்த தரை. சாமி படம் கோலம்.

"சுத்தமா இருக்குதே. நானே இங்க வந்துறலாம் போல!"

"இடம் போதாதுய்யா. உன் ரூம் கொஞ்சம் பெரிசு. அப்புறம் இங்க சூழ்நிலை சரியில்லை."

கதவோர மூங்கில் பிளாச்சு சன்னலுக்கு வெளியே "யாரு திலகம், புதுசா கிராக்கி?" என்று ஒரு குரல் கேட்டது.

"நான் சொன்னேன், இல்ல?"

ஒரு கலங்கிய முகம் எட்டிப் பார்த்தது, நேராக அவனைப் பார்த்து 'யார்றா நீ, பேட்டைக்கு புதுசா?"

"நான் திலகத்துக்கு உறவுக்காரன்"

"எம்பலேர்ந்து? ராத்திரிக்கு மட்டுமா!"

"யோவ்! போய்யா?" என்றாள்.

"நான் கூப்பிட்டா வரமாட்ட! என்ன ரேட்டுப் பேசிருக்கே?"



"இப்ப நீ போப்போறியா, இல்லியா"

"என்னைவிட இவன் என்னடி மம்மதனா?"

அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

திலகம் இவனைப் பார்த்தாள். அவள் கண்களில் சற்றுக் கலக்கம் இருந்தது.

"இத பாருங்க. அனாவசியத்துக்கு கலாட்டா செய்யாதிங்க! அப்புறம் விபரிதமா ஏதாவது ஆய்டும்"

"என்னடா விவரிதம் சோமாறி! நான் பத்து மாசமா இந்தத் தேவடியாளை சைஸ் பண்ணிக்கிட்டிருக்கேன். கூட்டிவிடறதுக்கு வேறு ஆளைப் புடிச்சுட்டாளா!"

"என்ன பாபு கலாட்டா?.' மற்றொரு முகம்!

"நாம பேட்டையில் எவ்வளவு நாள் இருக்கம்? இந்த பதிவிரதை என்ன பேச்சுப் பேசினா! இப்பபாரு."

"என்னம்மே!"

அவர்கள் இருவரும் திலகத்தை நெருங்கினார்கள்.

"அய்யய்யோ! காப்பாத்துங்களேன்!" நாராயணன் தரையில் தேடினான்...

அடுப்பு, பானை, கெரஸின் புட்டி, கத்தி! அவனுக்குப் பிடித்தமான ஆயுதம்—புண்ணியகோடியுடைய ஆயுதம். மின் வெட்டுப் போல் அதை எடுத்தான். "திலகம் என் பின்னால வந்துடு" என்றான்.

அவ்விருவரும் நெருங்க, "வாங்கடா இப்ப! தைரியம் இருந்தா வாங்க!"

"போ! பாபு! பயப்படாதே, நான் இருக்கேன். இன்னா செய்துருவான்"

பாபு என்பவன் நெருங்க, ஒரே வீச்சு!

அவன் தோளில் கத்தி கிறியது. ரத்தம் உடனே பீறிட்டது!

"வாடா! கிட்டவாடா!"

ரத்தத்தைப் பார்த்ததும் பாபு! "இரு. நம்ம வரதம் பயலைக் கூட்டியாறேன்" என்று உடனே புறப்பட்டான்.

மற்றவன் கீழே மடங்கி உட்கார "எந்திரிடா" என்றான்!

"அய்யோ அய்யோ அடிக்கறான்! அடிக்கறான்"

"அடிக்கலை. எந்திரிடான்னா! இன்னொருதபா வாங்கிக்கிறியா?"

"வேண்டாம், வேண்டாம்!"

"எந்திரி பின்ன?"

அவன் பனியன் பூராவும் ரத்தத்திட்டுகள். எழுந்திருந்தான். தா! டேய்! உன்னை விடமாட்டேன்! இருடா! வரதன் வரட்டும்! இரு! போயிறாதே! ஒரு நல்ல பொம்பளைக்கு பொறந்த பயலா இருந்தா இரு, வந்துடறேன்! உன்னை விடமாட்டேன்!" என்று புலம்பிக் கொண்டு அவன் செல்ல—

"சாமான் எல்லாம் எடுத்துக்க திலகம். இந்த இடம் உனக்கு உதவாது" என்றான்.

சைக்கிள் ரிக்ஷாவில் அவளுடன் பட்டுக்கொண்டு சென்றபோது அவள் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கிச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே"

"கத்தியைக் காட்டினதும் சிப்பாய் என்ன வேகமா ஓடிட்டான்!"

நாராயணனுக்கு சிரிப்பு வரவில்லை. நாராயணனாக மாறின பின் முதல் தடவை தூக்கிய கத்தி. எல்லாவற்றிற்கும் அப்போதே தலைமுழுகி தீர்மானமாக இருந்த



வைராக்கியம் முறிபட்டுவிட்டதில் அவனுக்கு வருத்தமாக இருந்தது.

"ஆமா! அவ்வளவு நல்லா கத்தி சுத்திறியே! முன்னாலயே பழக்கமா?"

"ம்"

"எங்கே? சர்க்கஸ்லயா?"

"இல்லை. ஒரு ஆளு கத்துத் தந்தார். எப்பவாவது இந்த மாதிரி நெருக்கடியான சமயங்களில் உபயோகிப்பேன்"

"விஸ் விஸ்!" என்று மானசீகக் கத்தி வீசினாள்.

சைக்கிள் ரிக்ஷாக்காரன் திரும்பிப் பார்க்க மறுபடி சிரித்தாள்.

"ஆம்பிளைத் துணை வேணும்கிறது; எவ்வளவு முக்கியம் பார்த்தியாய்யா? இனி எனக்குக் கவலையே இல்லை. நீ என்னைக் காப்பாத்தினதுக்கு உனக்கு ஒரே ஒரு பரிசு கொடுக்கப் போறேன்யா! கொண்டா உன் கையை!"

அவன் கையை எடுத்துக் கொண்டு அதன்மேல் ஒரு முத்தம் கொடுத்தாள். "இதான்" என்றாள்.

"இதுக்காக நிறைய கத்திவிசலாம்போல இருக்கே!"

அவள் சினிமாப்பாட்டு பாட ஆரம்பித்தாள்.

பஸ் ஸ்டாண்டில் இறங்கிக்கொண்டு, அத்தனை சாமான்களை பஸ்சில் ஏற்றுவானோ என்று சந்தேகித்து, அவ்வழி சென்ற ஆட்டோ ரிக்ஷாவை அப்பாதாயே என்று கெஞ்சி நிறுத்தி, மயிலாப்பூர் என்றதும் அவன் மலைக்க "எக்ஸ்டிரா" கொடுக்கிறேன் என்று சொல்லி... சம்மதிக்க வைத்து... ஒரு பொறுப்புள்ள கணவன் போல நடந்து கொண்டான்.

"இந்த ரேட்டில செலவழிச்சம்னா ரெண்டுபேர் கூலியும் ரெண்டு நாளில் காலியாய்டும் போல இருக்கே!"

"அப்புறம் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டே பசியாறிடலாம்" என்று சொல்லிச் சிரித்தான்.

அவனுக்கு உற்சாகமாக இருந்தது. இலக்கற்று இயங்கிக் கொண்டு இருந்த அவன் நாட்களுக்கு புதிதாக ஓர் அர்த்தம் ஏற்பட்டது போல இருந்தது. அவனுக்கும் அவளுடன் அந்த அர்த்தமற்ற சினிமாப்பாட்டைப் பாட வேண்டும் போலிருந்தது. தன் மேல் பட்ட அவள் தொடையில் சுவாதீனமாகக் கைவைத்து அழுத்த வேண்டும் போலிருந்தது.

வேண்டாம்—மெதுவாக, மெதுவாக!

இன்று குடிசைக்கு வந்து அவளைக் கேட்ட இரண்டு பேருக்கும் உனக்கும் வித்தியாசம் இருக்கிறது. உன் குறிக்கோள் அவள் உடல் அல்ல; ஒரு நட்பு, உன் பாலை வாழ்க்கையில் முதல் முதலாகக் கிடைக்கப் போகும் நட்பு. நட்பு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்; காதல் என்பதெல்லாம் பெரிய வார்த்தை. சிநேகிதி! என் முதல் சிநேகிதி.

ஆட்டோ ரிக்ஷா கரடு முரடான பாதையில் செல்லும்போது அவள் மேல் அடிக்கடி படுவதை விரும்பி ரசித்தான். பாதை முழுவதும் அப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான். தன் கைகளில் எடுத்து அவளைத் தோளில் அணைத்துக் கொண்டால் என்ன?

வேண்டாம், இன்றைக்கு வேண்டாம். நிறைய சமயம் இருக்கிறது. அவசரமே இல்லை.

என்னை போலீஸ் பூராவும் மறந்து விடட்டும். இப்போதே மறந்திருப்பார்கள். இன்னும் ஓராண்டு பொறுக்கலாம். அதற்குள் சற்றுப் பெரிய வேலை, சற்று வசதிகள்.



இவள் இனிமேல் கூலி வேலைக்குப் போக வேண்டாம். என் மனைவி வீட்டில்தான் இருக்க வேண்டும்.

மனைவி!

ஆம், இவள்தான், கடைசியில், இவள்தான் எனக்கு மனைவியாக வாய்க்கப் போகிறாள். இவள்தான் எனக்கு உயிர் வாழ்வதில் ஓர் அர்த்தம் உண்டுபண்ணப் போகிறாள்.

மெல்ல மெல்ல அவசரமே இல்லாமல் நட்பு உருவாகி முதிர்ந்து, அவளை சம்மதம் கேட்டு, மணம் முடித்து, அப்புறம்தான் அவளைத் தொட வேண்டும்.

நான் நாராயணன், புண்ணியகோடி அல்ல. சந்து சந்தாகப் பெண்ணைத்தேடிப் பணத்தை வாரியிறைத்த புண்ணியகோடி அல்ல.

நான் நாராயணன். ஒரே ஒரு பெண்ணுக்காக ஏங்கப்போகும் நாராயணன். அவளுக்காக உயிர் வாழப் போகும் நாராயணன்.

இன்றைக்கு அந்தக் கன்னத்தில் கத்தி வீசிய அந்தக் கணத்தில் கொஞ்சம் புண்ணியகோடி திரையைத் திறந்து வெளிவந்து விட்டான். ஆனால் அவனை அவசர அவசரமாகத் துரத்தி அனுப்பி விட்டேன். இனி அவன் வரமாட்டான். வரக்கூடாது.

31524
4817190

# 6

காலை எழுந்ததும் அவள் புன்னகையில் விழித்தாள்.

"லேசாக் குறட்டை விடறய்யா நீ" என்றாள்.

"லேசா என்ன, நிறையவே விடுவேன்! எனக்கே கேக்கும்?"

"சூப்ரண்ட்சார்! இவன் விடற குறட்டையில ஜெயிலே அதிருது. கல்லெல்லாம் கழண்டுக்கும்."

அவள் தன் பெட்டியை ஓர் ஓரத்தில் ஒதுக்கி வைத்திருந்தாள். கொடியில் அவன் பாண்ட் தொங்கும் இடத்தில் இருந்து மரியாதையாக சற்று ஒதுங்கி அவள் பருத்திச்சேலை தொங்கியது.

ஒரே ஒரு வட்டக் கண்ணாடி அலமாரியில் ஒண்டியிருந்தது. அதன் அருகில் குங்குமச் சிமிழ், ஒரு பவுடர் டப்பா அவளது டிரான்சிஸ்டர்.

ஓரத்தில் ஸ்டவ் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அதன் மேல் ஓர் அலுமினிய வாணலியில் உப்புமா தயாராகிக் கொண்டு இருந்தது.

"குளிச்சிட்ட போலிருக்கே?"

"விடியற்காலைல எழுந்து போயிட்டேன். குழாயடியில கூட்டமில்லை. துணி துவைச்சுட்டுக் குளிச்சிட்டேன், உப்புமா திங்கறியா?"

"என்ன இதெல்லாம்?"

"ஏன்யா எனக்கு நீ இருக்க இடம் கொடுத்திருக்கே, அதுக்கு உபயோகமா நான் ஏதாவது செய்ய வேண்டாமா?

"ஊகூம். நீ சும்மா இங்க இருந்தாலே போதும் திலகம்! முதல் முறையா இந்த ரூம் பளிச்சுனு இருக்கு. நீ வந்ததாலே!"



"கொஞ்சம் கொஞ்சமா உன்னை ஒப்பேத்திடறேன். பாத்துக்கிட்டே இரேன். நேரமாவுது பல் தேய்ச்சுட்டு குளிச்சிட்டுக் கிளம்பு. வேலைக்கு போவணும்"

□

# 7

காலை தர்மலிங்கம் போலீஸ் நிலையத்துக்கு வந்தபோது இன்று "செடிகளுக்குத் தண்ணீர் விட வேண்டும்; மறுபடி அந்தப் புண்ணியகோடி கேஸைத் தொட வேண்டும்" என்று தீர்மானித்தார். தரையில் ஒரு காகிதம் கிடந்தது. அதைப் பொறுக்கி குப்பைக் கூடையில் போட்டு, "ஏம்பா பெருக்கறதுக்கு ஆள் வரலை?" என்று சத்தமிட்டார்.

உள்ளே தன் அறைக்குள் நுழையுமுன் நேராக நடந்து நிலையத்தின் பின்பகுதிக்குச் சென்றார். இரவு பிடித்து காவலில் அடைத்து வைக்கப்பட்ட ஆசாமிகள் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்று இருந்தார்கள். பரட்டைத்தலை, கிழிந்த பனியன்...முரட்டு உடல்கள், "முதலாளி, அனாவசியமா என்னைப் போட்டு அடைச்சு வெச்சிருக்காங்க! விட்டுடுங்க" என்று அலறினான், ஒருவன்.

தர்மலிங்கத்திற்கு இவர்கள் மேல் தயவு தாட்சண்ணியம் கிடையாது, ராத்திரிக்குற்றம் பெரும்பாலும் குடித்த கேஸா இருக்கும். மதுவிலக்கு என்பது ஒரு மகா மகா தோல்வி. மது விலக்கு மக்களுக்கு கல்வி தருவதில் இருக்கிறது என்று நம்புகிறவர் அவர். மதுவிலக்குச் சட்டங்கள் அடிக்கடி மாறுவதும் தளர்த்தப்படுவதும் அவருக்குப் பிடிக்கவில்லை.

"என்னய்யா கேஸு?" என்றார் கான்ஸ்டபிளிடம்.

"குடி, அடிதடி! மாமுலுங்க!"

"உம்பேர் என்னய்யா?"

"பாபு, சார்! முதலாளி, எஜமானே, சீமானே, ராஜாவே! என்னை விட்டுறுங்க, நான் தப்பு தண்டாவுக்கு போகாத வயசு. வேலைக்கும் போகணுங்க. ஏதோ கொஞ்சம் குடிச்சிருந்தேன், அவ்வளவுதாங்க."

"கம்பிகள் வழியாக அவன் முடியைப் பிடித்து நிமிர்த்தி, "பொய் சொல்றே! சண்டை போட்டிருக்கே, நீ யார்யா?" என்றார்.

"ரங்கன்!" என்றான்.

"தோளில் என்ன காயம்? பாபுவோட சண்டை போட்டியா?"

"பாபு இல்லிங்க. அது வேற ஆளுங்க. அவனைப் பிடிக்காமல் எங்களைப் பிடிச்சு அடைச்சிருக்காங்க!"

"ராத்தி ஃபுல் தண்ணி கார் ரெண்டு பேரும்"

"இந்தக் காயம் எப்படி வந்தது!"

"அது புதுசா ஒரு ஆளுங்க! பொம்பள விசயம்!"

"யார்யா, புதுசா ஆளு?"

"அதை ஏன் கேக்கறிங்க! கத்தி எடுத்து, தோள்ல சரக்குனு கீறிப்புட்டான் சார்... மின்னல் மாதிரி, கூட்டாளிகளை அழைச்சுட்டு வர்றதுக்குள்ள ஓடியே பூட்டான்"

தர்மலிங்கம் "ஏய் ரங்கா கிட்ட வா!" என்றார்.

அவன் தோளில் சுத்தமாக நான்கு அங்குல கீறல். ரத்தம் பொங்கி உறைந்திருந்தது.

"கத்தி வெச்சிருந்தானா?"

"இருட்டில் தெரியலிங்க. சரேல்னு பாஞ்சான்!"

கத்திக் கீறல் வலது தோளில்.



"அந்த ஆள் எப்படி இருந்தான்?"

"சின்னப் பயல்னு சொல்ல முடியாது. நடுத்தரமா இருந்தான்"

"கொஞ்சம் இரு!" என்றார். தன் மேஜைக்குச் சென்று புண்ணியகோடியின் புகைப்படத்தை எடுத்து வந்தார்.

"இதபார், இந்தப் போட்டோவில் உள்ள மாதிரி ஆளா?"

ரங்கன் அதை உற்றுப் பார்த்து, "இல்லிங்க! வேறு மாதிரி இருந்தான்!"

"வேறு மாதிரின்னா எப்படி!"

"அவனை நல்ல வெளிச்சத்தில் பார்க்கலிங்க..."

பாபு "அதைக் காட்டுங்க" என்றான்.

பார்த்து "ஊகூம், அவன் தாடி மீசை எல்லாம் வெச்சுக்கிட்டிருந்தான்" என்றான்.

"அப்படியா?" தர்மலிங்கம் தன் பையிலிருந்து பேனாவை எடுத்து, அந்தப் புகைப்படத்திற்கு சுமாராக மீசை தாடி வரைந்தார்.

"இப்ப பாரு"

பாபு கண்களைக் குவித்துக்கொண்டு பார்த்து, "இப்ப கொஞ்சம் அவன் மாதிரித்தான் தெரியுதுங்க" என்றான்.

ரங்கன் எட்டிப்பார்த்து "ஆமடா!" என்றான்.

தர்மலிங்கம் சற்றுப் படபடப்புடன் "கான்ஸ்டபிள், ஜீப்பை ரெடிபண்ணுங்க. இவங்க ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டு வாங்க. அங்க போகலாம்" என்றார்.

"சார் இதுபுண்ணியகோடியா இருக்கும்னு சந்தேகப் படறிங்களா!"

"இருக்கலாம்"

வெளியே வந்ததும் பாபுவும் ரங்கனும் அவர் காலைப் பிடித்து "எங்களை விட்டுடுங்க" என்றார்கள்.

"உங்களை யார் விடப்போறா! முதல்ல அந்த இடத்தை அடையாளம் காட்டுங்க!"

"எங்க வேண்டுமானாலும் வாரங்க! இங்க மட்டும் திருப்பி அடைச்சுறாதீங்க"

"வாய்யா முதல்ல"

பூந்தமல்லி ஐரோடில் இருந்து சரிந்து மிகப் பெரிய பாதாள சாக்கடைக்கான கான்க்ரீட் வட்டங்களைக் கடந்து, கரிய சிறுவர்கள் ஆரவாரித்துத் தொடர்ந்து வர, அந்தக் குடிசைக் கும்பலின் முகப்பில் நின்றது, ஜீப். சில்லறை நாய்கள் உற்சாகமாகக் குலைத்தன.

"ஏய் நம்ப பாபு!" என்று அடையாளம் கண்டு சிலர் பின் பற்றினார்கள். கான்ஸ்டபிள் அவர்களை விரட்ட, தர்மலிங்கம் அந்தக் குடிசைகளின் ஊடே நடந்தார். பேட்டையே திகைத்து, வேலை போட்டது போட்ட படி விட்டுவிட்டு வேடிக்கை பார்த்தது.

"இதாங்க!" என்று பாபு அந்தக் குடிசையைக் காட்டினான்.

கதவு திறந்திருந்தது.

உள்ளே சென்றார்.

காலியாக இருந்தது.

வெளியே வந்தார்.

"இங்க பக்கத்து வீட்டில் யாரும்மா." என்றார். "இந்தக் குடிசையுள் இருந்தவங்க பேரு என்ன?"

"திலகம்"

"எங்க அவங்க?"

ராத்திரி சைக்கிள் ரிக்ஷா வெச்சுக் கூட்டிப் போய்ட் டாங்க. ராத்திரி அடிதடி ஆயிருச்சிங்க"



"கூட்டிப்போன ஆள் யாருன்னு யாருக்காவது தெரியுமா?"

மவுனம்.

"இங்க சைக்கிள் ரிக்ஷா ஸ்டாண்டு எங்கய்யா இருக்கு?"

"மெயின் ரோடுப் பக்கங்க?"

"தாடி மீசை எல்லாம் வெச்சிருந்தான். பேட்டைக்குப் புது ஆளு"

"அந்தப் பொண்ணு தனியாகத்தான் இருந்ததா?"

"ஆமங்க. கட்டடத்தில் கூலி வேலை செஞ்சுக்கிட்டு இருந்துதுங்க! நல்ல பொண்ணு. கூட ஒரு கிழவி இருந்துச்சு. கொஞ்ச காலமா அதும் இல்லை. தனியாத்தான் இருந்தது."

"சரி! பார்த்துறலாம் " இன்ஸ்பெக்டர் மறுபடி ஜீப்புக்கு வந்தார்.

புண்ணியகோடிதான், அது. நிச்சயம் அவன்தான்! அவன் அடையாளம், அவன் முத்திரை கத்தி விளையாட்டு, தோளில் கீறல், வலது தோள்...

"ஏய் பாபு இங்க வா"

நடுங்கிக்கொண்டே அவன் வந்தான்.

"என்ன நடந்தது? விவரமாச் சொல்!"

"ஒண்ணும் இல்லிங்க. இந்த ரங்கம்பயலுக்கு அந்தப் பொண்ணு மேல ஒரு கண்ணு. ரொம்ப நாளா பல்லைக் காட்டிக்கிட்டு இருந்தான். ராத்திரி ஒரு புதுப் பயலோட வரவும் இவனுக்குக் கடுப்பாய் போச்சு. போய்க் கேட்டிருக்கான். சண்டை வந்திருச்சு. அவன் சரக்குன்னு கத்தி எடுத்துக் கீறிட்டான். என்னா வேகம்!"

"போய்யா போ! இந்த ஆளை அழைச்சுட்டுப் போயி ஆஸ்பத்திரியில் மருந்து போட்டுக்க."

அவன் வணங்கிவிட்டு "இனிமேல் செத்தாலும் குடிக்க மாட்டேங்க" என்றான், சந்தோஷத்துடன்.

"அடுத்த தடவை மாட்டிப்ப இல்லை, அது வரைக்குமா!"

சைக்கிள் ரிக்ஷா நிலையத்தில் அடுத்து விசாரித்தார்.

"ஆமாங்க!ஒரு தாடி வெச்ச ஆளும் ஒரு பொம்பளை யும் இருந்தாங்க. பொட்டி ஸ்டவ்வு டப்பா எல்லாம் வெச்சிருந்தாங்க. பஸ் ஸ்டாண்டில்தான் கொண்டு விட்டேன். ஆட்டோ ரிக்ஷா ஏறி போயிட்டாங்க!"

"எந்தப்பக்கம்? இந்தப்பக்கமா, அந்தப்பக்கமா?"

"இதோ இப்படித்தான் போனாங்க" என்று கை காட்டினான்.

நகரத்துக்குள் சென்று இருக்கிறான்.

கூலி வேலை! இங்கு இருந்து அருகாமையில் கட்டிடத் தொழில் நடக்கும் இடங்களில் விசாரிக்க வேண்டும்,

"ஆட்டோ ரிக்ஷா எங்கேருந்து வந்துக்கிட்டு இருந் தது?"

"அது எதித்த பக்கத்தில் இருந்து வந்ததுங்க!முதல்ல வரமாட்டேன்னு சொன்னான். நான்கூட போய்ட்டு வாய்யா, எக்ஷ்டிராவா ஏதாவது கொடுப்பாருன்னு சொன்னேன்."

"சவாரி எங்கன்னு சொன்னாங்களா? ஞாபகம் இருக்கா?"

"இல்லிங்க!"

"சரி!என்ற சிந்தனையுடன் புறப்பட்டார். நின்றார்

"ராத்திரி எத்தனை மணி இருக்கும்?"

"ஒம்பதரை பத்து இருக்கும்ங்க,சினிமாவிட்டாச்சு!"

□

# 8

நாராயணனும் திலகமும் மைலாப்பூர் பஸ் ஸ்டாண் டுக்கு வந்து நின்றார்கள்.

திலகம் சற்று நொண்டுவதைக் கவனித்தான். "என்ன காலில்?"

"சாரத்தில் ஏறினபோது கான்கிரிட் கம்பி குத்தி டுச்சு. அது என்னடான்னா இப்பதான் வலிக்குது."

அவள் காலைப் பார்த்தான்.

"நல்லா அடிபட்டிருக்கே! இன்னிக்கு வேணா வேலைக்குப் போகாம இருந்துரு"

"ஆ! ஒரு நாள் கூலி போயிரும்!"

"இத பார், திலகம், இனி நீ வேலை செய்ய வேண் டாம். உழைச்சு சம்பாதிச்சு உன்னைக் காப்பாத்தறது என் பொறுப்புன்னு வெச்சுக்க!"

"என்னால நடக்க முடியும்யா"

"இல்லை. காயம் சீழ் பிடிக்கிறமாதிரி இருக்குது. முதல்லே இதை கவனிக்கலாம். வா டாக்டர்கிட்டகாட்ட லாம்..."

"சேச்சே! அதெல்லாம் வேண்டாம்யா சுண்ணாம்பு வெச்சா சரியாய்டும். வேலையை எதுக்கு விடணும்"

"நீ வாயேன், சொல்றேன்"

"ஒரு நாள் கூலி!"

"நான் ரெட்டிப்பா சம்பாதிக்கிறேன், வா"

"எப்படி?"

"எனக்கு நிறைய வேலை தெரியும்"

எப்பொழுதாவது அந்த டாக்டரிடம் சென்று இருக்கிறான். ஏழ்மையின் விளிம்பில் இருப்பவர்களுக்கு என்றே ஒரு டாக்டர். முக்கால்ல ரூபாய் ஒரு ரூபாய் இப்படித்தான் வாங்குவார்.

நல்ல கூட்டம் இருந்தது. சின்ன இடம். வெளியே தெருவில் நின்றார்கள். சிறு குழந்தைகள், ஈரல் குலைக் கட்டியுடன், பானை வயிற்றுடன் கவலையுடன் ஒரு கிழவி. டிபன் பாக்சுடன் ஒரு பெண். ஏனைய சிறுமிகள் தினக் கூலிக்காரர்கள். காசைப் பத்து பைசா கணக்கில் சம்பாதிப்பவர்கள்.

"நீங்க வாங்க" என்றார்.

"வா, திலகம்"

இருவரும் நெருக்கமான அறைக்குச் சென்றார்கள். "இவளுக்கு காலில் காயம்ங்க"

"காட்டும்மா! என்ன புருசன்கூட சண்டை போட்டியா, சூடு காச்சி இழுத்துட்டானா! ஏன்யா?"

"இல்லிங்க. கம்பி குத்திருச்சு" என்று அவனைப் பார்த்துச் சிரித்தாள். புருசன் என்று சொன்னது அவளுக்கு இனிப்பாக இருந்தது. "அவர் என் புருசன் இல்லிங்க" என்று அவள் சொல்லாதது மேலும் இனித்தது. அவனைப் பார்த்து அவள் சிரித்ததில் இருந்த அந்யோன்யம் திகட்டியது.

கட்டுடன் வெளிவந்து, அவனுடன் நடக்கும்போது "இப்ப நம்ம ரெண்டு பேரையும் புருஷன் பெண்சாதின்னு சொன்னால், நம்புவாங்க போலத்தான் இருக்குதுய்யா" என்றாள்.



"அப்படியே இருந்துட்டுப் போகட்டுமே!" என்றான்.

"ஆ! ஆளைப்பாரு!"

"பத்மா" வில் பலகாரம் காப்பி சாப்பிட்டார்கள். அங்கிருந்து அவளை அறைக்கு அழைத்துச்சென்றான். "நான் வேலைக்குப் போறேன். நீ ரூம்பிலே படுத்திரு. டாண்ணு அஞ்சரை மணிக்கு வந்துடுறேன். சாப்பாட்டுக்கு?"

"நான் பார்த்துக்கறேன். நீ போய்ட்டு வா உன் வீட்டைப்பத்தி இனி கவலைப்படாதே!"

"நம்ம வீடு!" என்றான்.

"சரி. நம்ம வீடு"

பஸ்சில் செல்லும்போது மிகுந்த உற்சாகத்துடன் இருந்தான். அவன் வாழ்வில் புதிய அர்த்தங்கள் ஏற்பட்டதுபோல் உணர்ந்தான். சன்னலுக்கு வெளியே காட்சிகள் எல்லாமே அவனுக்காக வைக்கப்பட்டவை போல் இருந்தன. பாதை என்னுடையது. அந்த மின்சாரத் தூண் என்னுடையது. தூரத்தில் தெரியும் அந்தத் தகரக் கொட்டகை, அதை ஏறக்குறையத் தழுவிக்கொண்டு இருக்கும் பஞ்சுமேகவானம் எல்லாம் என்னுடையது.

□

# 9

இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் மெதுவாக ஜீப்பில் அந்தச் சாலை வழியே சென்று கொண்டு இருந்தார்.

இந்தப் பகுதியில் நிறைய கட்டிட வேலை நடக்கிறது. ஒவ்வொன்றாக விசாரித்துப் பார்க்கலாம்.

முதலில் ஓர் அரை கிரவுண்டில் கட்டப்படும் சிறிய வீடு...கொல்லத்து மேஸ்திரியை விசாரித்தார். "நாலு, ரெண்டு சின்னப் பயலுக, நாலு பொம்பளை அவ்வளவு தாங்க இங்க வேலை செய்யறது எல்லாரும் இருக்காங்க. பார்த்துக்கங்க!"

அடுத்தது சற்று விஸ்தாரமான மூன்று மாடிக் கட்டடம். கன்ட்ராக்டர் அந்த போட்டோவைப் பார்த்து "ஊகூம்' தாடி வெச்சுக்கிட்டு யாரும் கிடையாதுங்க, என்கிட்ட" என்றார்.

அடுத்து ஒரு தொழிற்சாலைக்கான அரைகுறைக் கட்டிடம். "சிமெண்டு கிடைக்காமல் தவிக்கறாங்க! ரெண்டு மாசத்துக்கு அப்புறம் இன்னிக்குத்தான் வேலையே துவங்குது"

"சரி இந்த ஆளு முந்தி உங்கள் கிட்ட எப்பவாவது வேலை செஞ்சிருக்கானா?" என்று போட்டோவைக் காட்டினார்.



"இவன் மாதிரின்னு சரியா சொல்ல முடியாது. ஆனால், தாடி வைச்ச ஆள் ஒருத்தன் சண்முகம்னு எங்கிட்ட இருந்தான்."

"இப்ப அவன் எங்கே?"

"தெரியாதுங்க. வேலையை விட்டுட்டுப் போயிட்டான்"

"அவன் அட்ரஸ் கிடைக்குமா?"

"தினக்கூலி ஆளுங்க.அட்ரஸ் எல்லாம் கேட்டு வெச்சுக்கறதில்லிங்க"

ஐந்து இடங்களில் விசாரித்தும் சரியாக ஒன்றும் பெயரவில்லை. அலுத்துக் கொண்டு ஜீப்பில் ஏறினார். "திரும்ப ஸ்டேஷனுக்குப் போப்பா..." என்றார்.

பொறுமை! பொறுமை நிறைய வேண்டும். புண்ணியகோடி சென்னையில் இருக்கலாம் என்பது தெரிகிறது. அந்த ஆசாமிதான் புண்ணியகோடி என்பதற்கு ஆதாரம். அதிகம் இல்லை. ஒரே ஒரு கத்திக் கீறல்.

அது அவனா...?

பொறுமை! பொறுமை! ஆரம்பித்ததை முடித்து விடலாம். "ஜீப்பை நிறுத்துப்பா" என்றார்.

"திரும்பி இந்த ரோடிலேயே இன்னும் கொஞ்சம் போகலாம்" என்றார்.

ஏறக்குறைய மூன்று மைல் வந்துவிட்டார்.இவ்வளவு தூரம் தள்ளியிருக்கிறதே! அரும்பாக்கத்தில் இருந்து அந்தப் பெண் இதுவரை வருவாளா, என்ன?

இந்த கன்ஸ்டிரக்ஷன் கம்பெனி என்று போர்டு எழுதியிருந்தது. உள்ளே கட்டிட வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. கடைசி கடைசியாய் இங்கே விசாரித்து முடித்து விடலாம்... "நிறுத்துப்பா"

நாராயணன் பஸ்ஸை விட்டு இறங்கி, வேகமாக நடந்தான்.

இன்றைக்கு கொஞ்சம் லேட்முதலாளி சத்தம் போடுவார். இந்த கன்ஸ்டிரக்ஷனை நெருங்கினான். போலீஸ் ஜீப்பைப் பார்த்துத் திடுக்கிட்டான்

போலீஸ்! எதற்கு இங்கே நிற்கிறது?

ஓர் இன்ஸ்பெக்டர் உள்ளே முதலாளியை நோக்கி நடந்து செல்வதும், நடுவே ஓர் ஆளை ஏதோ கேட்பதும் அவன் முதல் மாடியில் நிற்பவரைக் காண்பிப்பதும் தெரிந்தன.

"என்ன விசாரிப்பார்கள்? என்னைப்பற்றியா? சே! என்னை யாருக்குத் தெரியும்? நான் நாராயணன். நாராயணன் நல்லவன். புண்ணியகோடி போய் ஐந்து ஆண்டு ஆயிற்று. போலீஸ் அவனை எப்பொழுதோ மறந்து விட்டார்கள். வேறு ஏதாவது விசாரிக்க வந்திருப்பார்கள். உள்ளே போகலாம்."

உள்ளே செல்வதற்கு முன் சற்றுத் தயங்கினான். இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் சாரத்தில் ஏறி நடப்பதைப் பார்த்தான்.

"வேண்டாம். இப்போது அங்கே போக வேண்டாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அவர்கள் சென்றதும் நுழையலாம். எதற்காக வந்தார்கள் என்று விசாரிக்கலாம்."

நாராயணன் சாலையின் எதிர்ப்புறத்தில் நடந்து, சற்று தூரம் நடந்து ஒரு சந்தில் திரும்பி உள்ளே சென்று ஒரு டீக்கடையில் நுழைந்தான்.

தர்மலிங்கம், காண்ட்ராக்டர் இளைஞனை அணுகினார். அவன் போலீசைக் கண்டதும் சற்று ஆச்சரியத்துடன், ஆனால், பயமின்றி "என்ன சார்?" என்றார்.



"திலகம்னு ஒரு பொண்ணு இங்க வேலை செய்யறதா?

"திலகம்...திலகம்? இருங்க மஸ்டர்ரோலைப் பார்த்துச் சொல்றேன்!"

இன்ஸ்பெக்டர் காத்திருந்தார். சுற்றிலும் பார்த்தார். சுறுசுறுப்பாக வேலை நடந்து கொண்டு இருந்தது. தெரிந்தவரை தாடி மீசையுடன் யாரும் இல்லை.

திலகம்னு ஒரு பெண்ணு வேலை செஞ்சுக்கிட்டுருக்கு, ஆமாம்."

"எங்கே கூட்பிடுங்க?"

மேஸ்திரி "திலகம்னு ஒரு பெண்ணு வேலை செய்றதே. அதைக் கூப்பிடுங்க!" என்று கீழே நோக்கி ஆணையிட்டான்.

"மேஸ்திரி அங்கு இருந்து 'திலகம் இன்னிக்கு வரலைங்க" என்றார்.

"சரியாப் பாருய்யா?"

"மேஸ்திரிக்கு அவுங்க எல்லாரையும் தெரியும், சார் என்ன விஷயம் சொல்லுங்க."

"சரியாப் பார்க்கச் சொல்லுங்கள்."

"சரியாப் பார்த்து சொல்லுய்யா."

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் படத்தைக் காட்டினார். இந்த ஆளு முகத்தைப் பார்த்த மாதிரி இருக்கா?"

"இதென்ன? பேனாவில் தாடிபோட்டிருக்கே!"

"மீசை தாடி வெச்சிருப்பான். போட்டோவில் மீசை தாடி இல்லை. நான் வரைஞ்சேன்"

அந்த இளைஞர் அதைப் பார்த்துவிட்டு...சற்று யோசித்தான். "அசப்பில் பார்த்தால் என்கிட்ட கான்கிரிட் மிக்சர் பண்ணிக்கிட்டிருக்கான், நாராயணன்னு ஒருத்தன்; அவன் மாதிரி இருக்கு. ஆனால், சொல்ல முடியாது...மேஸ்திரி, நாராயணனைக் கூப்பிடு?"

"நாராயணனும் வரலிங்க!"

நாராயணன்! அதுவா அவன் பெயர்?...

"சரியா சொல்ல முடியலிங்க! அவனும் இன்னிக் வேலைக்கு வரலை!"

"வருவானா?"

அவன் கைக்கெடிகாரத்தைப் பார்த்து "மண பத்தரை ஆச்சு! வரமாட்டான்னு நினைக்கிறேன் காலைல எழு மணிக்கு வந்திருக்கணும்! விஷயம் என்ன சொல்லுங்க"

"ஒரு சந்தேகம்! அவன் ஒரு பழைய குற்றவாளியா இருப்பான்னு சந்தேகம்! அவனும் அந்தப் பொண் ணும் சிநேகமா?"

"ரெண்டு பேரும் சேர்ந்து போனாங்க! சிநேகம்னு சொல்ல முடியாது...ஆனால்..."

"என்ன, சொல்லுங்க?"

"நாராயணனை எனக்குத் தெரியும்! அவன் ஒன் ணும் கேடியா இருக்க முடியாது..."

"எப்படி சொல்றீங்க!"

"ரொம்ப நம்பகமான ஆசாமி. வேலை ஒழுங்க செய்வான். பேங்கில் போய் பணம் எடுத்துட்டு வரு வான்; ஒரு பைசா தொடமாட்டான். அப்பழுக்கு இல் லாத கணக்கு. அதிகம் பேசமாட்டான். ரொம்ப நல் ஆசாமி. அவனை ஒரு குற்றவாளின்னு நினைச்சு பார்க்கக்கூட முடியாது..." மறுபடி படத்தைப் பார் தான். "இல்லிங்க, என் கண்ணு ஏமாத்துது. இவன் இல்லைன்னு நினைக்கிறேன்"

"அப்படியா? எத்தனை நாளா உங்களுக்குத் தெ யும், அவனை."

"ரெண்டு வருஷமா"

"அவன் இப்ப வருவானா?"

"இன்னிக்கு இனிமேல் வரமாட்டான்னு நினை கிறேன். பாதி நாள் வேலை ஆய்டுச்சே!"

"என்ன வேலை செஞ்சுக்கிட்டிருந்தான்"



"கான்கிரீட் மிக்சர்ல"

"தச்சு வேலை எதுவும் செய்வானா?"

"ஊகூம்! அவன் வந்தால் அனுப்பறேன்"

"வருவானா!"

"நாளைக்கு வருவான். இன்னிக்கு இனிமேல் வருவான்னு தோணலை"

"அவன் கையெழுத்து ஏதாவது இருக்குதா?"

"கையெழுத்தா! மஸ்டர்ல கையெழுத்துப் போட் டதா ஞாபகமில்லை. தமிழ்ல சில வேளைகளில் போடு வான். பெரும்பாலும் இவங்ககிட்ட கட்டைவிரல் ரேகைதான் வாங்கிப் பதிச்சுப்பேன்!"

இன்ஸ்பெக்டர் பிரகாசமானார். "எங்கே, மஸ்டர் ரோலைக் காட்டுங்க"

"சார்! எதுக்குன்னு நீங்கள் சொல்லணும்!"

ஆயாசத்துடன் "பயப்படாதீங்க! ஒரு விதமான சந் தேகத்தின் பேரில்தான் விசாரிச்சுக்கிட்டு இருக்கோம். இப்ப நீங்கள் சொல்றீங்க, அந்த ஆள் நாராயணன் தங்கமான ஆசாமி தப்புத்தண்டா செய்ய மாட்டான்னு. அது ஓர் அபிப்ராயம். அதையே கைரேகையை வெச்சுக் கிட்டு சுலபமா நிர்மானமா தெரிஞ்சுக்கிடலாம். நான் அந்த நாராயணன் வேறு பேருள்ள ஆசாமின்னு நினைக்கிறேன். அந்த வேறு ஆசாமியோட விரல் ரேகைகள் எங்கள்கிட்ட இருக்கு. இரண்டையும் ஒத்துப் பார்த்துட்டால் விஷயம் தீர்ந்துடும். காட்டுங்க! இதைக் கேக்கறதுக்கு எனக்கு சட்டப்படி உரிமை இருக்குது..."

அந்த மஸ்டர்ரோல் காகிதத்தை இன்ஸ்பெக்டர் ஆவலுடன் பார்த்தார். நாராயணன், வெறும் நாராய ணன் இன்ஷியல் ஏதும் இல்லை. அதன் எதிரே ஆஜ!

கணக்கு. வார இறுதியில் வாங்கிய சம்பளத்திற்கு சாட்சியாக அவன் இடது கைக்கட்டைவிரல் அடையாளம் துல்லியமாக இருந்தது.

"இந்த மஸ்டர்ரோல் முடிஞ்சுருச்சில்ல? பேமெண்ட் எல்லாம் ஆயிடுச்சில்ல?"

"ஆமாம்"

"இதை எடுத்துப்போய் நாளைக்குத் திருப்பித் தந்துடறேன்"

இளைஞன் தயங்க, "கவலைப்படாதீங்கன்னு சொன்னனில்ல. இதனால் உங்களுக்கு ஏதும் போலீஸ் தொந்தரவு கிடையாது. பயப்படாதீங்க! போலீஸ்னா ஏன் மிரள்றீங்க!"

"சரி, எடுத்துட்டுப் போங்க. ஆனால், திருப்பிக் கொடுத்திடுங்க. கணக்குக்கு வேணும்!"

"நிச்சயம்! நான் வறேன். அந்த ஆசாமி வந்தால் நீங்கள் ஏதும் கேட்க வேண்டாம். ஏன்னா அவன் மேலே சந்தேகம்தான் இருக்கே ஒழிய ஊர்ஜிதமாகலை. இந்த விரல் ரேகையை லாப்ல வெச்சு ஒப்பிட்டுப் பார்த்தப்புறம்தான் நிர்மானமாத் தெரியும்! அதுவரைக்கும் நீங்கள் ஏதும் சொல்லிட வேண்டாம். என்ன?"

"சரி சார்"

"அப்புறம் அந்த ஆள் வீட்டு விலாசம் இருக்குதா உங்ககிட்ட?"

"இல்லிங்களே?"

"சரியா யோசிச்சிப் பாருங்க! அது முக்கியம்!"

"இல்லிங்க. அவன் வீட்டு விலாசம் நான் கேட்டு வெச்சுக்கலை"

"எங்க இருக்கான்னு ஏதாவது சொன்ன ஞாபகம் இருக்குதா?"



"நாளைக்கு வருவான், கேட்டு வெச்சுக்கிறேன்"

"வேண்டாம். நான் மறுபடி நாளைக்கு வறேன்! அது வரைக்கும் அவன்கிட்ட ஒண்ணும் கேட்க வேண்டாம்! நீங்கள் அவன் நல்ல ஆளுன்னு சொல்லிட்டிங்க அனாவசியமா ஊர்ஜிதமாகச் சந்தேகத்தை அவன் பேரில் திணிக்க வேண்டாம், வறேன். நாளைக்கு மறுபடி சந்திக்கலாம்."

இன்ஸ்பெக்டர் கீழே இறங்கி வந்து நடந்து ஜீப்பில் ஏறிக் கொண்டார். அவர் கையில் நாராயணனின் விரல் ரேகை இருந்த மஸ்டர்ரோல் காகிதம் இருந்தது. கான்ஸ்டபிள் டிரைவர் ஸீட்டில் வந்து உட்கார "நேரா லாபுக்குப் போப்பா!" என்றார்.

ஜீப் சீறிப் புறப்பட, சந்தின் முனையிலிருந்து அது செல்வதை நாராயணன் பார்த்துக்கொண்டு இருந்தான்.

அது சென்று மறைந்ததும் மெதுவாக கட்டடத்தை அணுகினான்.

முதலாளிப் பையன் முதல் மாடியில் நிற்பதைப் பார்த்தான். நாராயணன் வருவதை அவன் பார்த்தான். அங்கு இருந்து கைக்கடிகாரத்தைக் காட்டி "இவ்வளவு லேட்டா வரியே!" என்று சைகையில் தெரிவித்தான்.

நாராயணன் "மன்னிச்சுக்குங்க" என்று கும்பிட்டான்.

"சரி சரி, வேலையைப்பாரு" என்று சைகை.

நாராயணன் மிக்சரின் அருகில் சென்றான். அங்கே நின்றிருந்த சுலைமானிடம் "என்ன பாய், போலீஸ் ஜீப்பு வெளிய போறதப் பார்த்தனே, எதுக்கு வந்தாங்க?" என்றான்.

"அவங்க எதுக்கு வந்தாங்களோ தெரியலை. ஆனால், திலகத்தையும் உன்னையும் அவுங்க வந்த பிற்பாடு கூப்பிட்டாரு முதலாளி! திலகம் இன்னும் வரலை! நீ இப்பதான் வந்திருக்கே!"

நாராயணன் துணுக்குற்றான். எதற்கு என்னைக் கூப்பிட வேண்டும்? சரி முதலாளியிடம் போய்க் கேட்டு விடலாம்.

கை வேலையைவிட்டு விட்டு கை கழுவிக்கொண்டு சாரத்தில் ஏறிச் சென்று முதலாளியை சந்தித்தான்.

''வாய்யா, நாராயணன்.''

''சார் மன்னிச்சுக்கங்க. லேட்டாயிருச்சு. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருந்தது. ஒரு சின்ன விசயம். கேட்கணுமுங்க உங்கள் கிட்ட?''

''என்ன?''

''இப்ப போலீஸ் வந்திருந்தாங்களாமே? என்னை கூப்பிட்டீங்களாமே?''

அந்தப் பையன் யோசித்தான்! முதலில் சொல்ல வேண்டாம் என்றுதான் முடிவு செய்திருக்க வேண்டும். ஒருமுறை நாராயணன் முகத்தைப் பார்த்தான். தெளிவாக, களங்கம் இல்லாமல் இவனது பார்வையை சந்திக்கும் கண்கள்! இவன் எப்படி பழைய கேடியாக இருக்க முடியும்? அபத்தம். இவனிடம் சொல்லி விடலாம்! ''இதோ பாரு நாராயணன்'' போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்திருந்தார். என்கிட்ட ஒரு போட்டோ காட்டினார். அதை என்னவோ அசப்பில பார்த்தால் உன் படம் மாதிரி இருந்ததப்பா. தாடி மீசை எல்லாம் கையால வரைஞ்சிருந்தாலும் ஜாடை உன்னைப் போல இருந்தது. அவர் வேறு ஏதும் சொல்லாமல், ''இந்த ஆளை நீ பார்த்திருக்கியா?''ன்னு கேட்கவுமே; உடனே, ''ஆமாம். இந்த மாதிரி மூஞ்சி உள்ள ஆளு நம்மகிட்ட வேலை செய்யறான் பேர் நாராயணன்''ன்னு சொன்னேன். உடனே அவர் 'இவன் பழைய கேடி, சார்'' அப்படின்னாரு. உடனே நான் சிரிச்சுட்டேன். ''அப்படின்னா நிச்சயமா நம்ம நாராயணனா இருக்க முடியாது. அவன் நம்பகமான ஆசாமி எனக்கு அவனை நல்லாத் தெரியும்''னுட்டேன்! அவ்வளவுதாம்பா விசயம்!''



''நாராயணன் சிரித்த தினுசு! 'நான் வேணும்னா போய் இன்ஸ்பெக்டரைப் பார்த்துட்டு, சந்தேகத்தை தீர்த்துட்டு வந்துர்றேன், சார்!''

''வேண்டாம்! அவரே நாளைக்கு வர்றேன்னார்''

''திலகத்தையும் கேட்டாரா?''

''ஆமாம். எதுக்குன்னு சொல்லலை. அது வேற கேஸா இருக்கும். திலகம் இன்னிக்கு வரலை!''

''அப்படியா'' என்றான்.

''சரி. நீ போ, வேலையைப்பாரு! நீ ஒன்னும் அனாவசியமா கவலைப்படாதே. இதைப்பத்தி ஏதோ தப்பிப் போன அடையாளம். உனக்கு இதனால ஒரு தொந்தரவும் வராது. நாளைக்கு வந்ததும் ரெண்டு கேள்வி கேட்பாங்க. சும்மா மாமூலா ஒரு விசாரிப்பு, அவ்வளவுதான்!''

''சரிதான் சார்!''

படி இறங்கும்போது அந்த அருமையான முதலாளிப் பையனை திரும்ப ஒருமுறை பார்த்துக் கொண்டான்!

இந்த வேலைக்கு இன்றில் இருந்து தலை முழுக்கு... நாளை அவன் வரப்போவது இல்லை.

நாராயணனுக்கு வருத்தமாக இருந்தது. எல்லாம் ஓய்ந்து விட்டது என்று நேற்றுத்தான் நினைத்தான். ஓயவில்லை கரப்பான் பூச்சி, அது நசுக்க நசுக்க புதுசாக ஒன்று வந்துகொண்டே இருக்கும்.

மறுபடி தலைமறைவை ஆரம்பிக்க வேண்டும். ஊர் மாற்ற வேண்டும். பழக்கமான செயல்தான். ஆனால், சென்ற நான்கு ஐந்து ஆண்டாகச் செய்யவில்லை. முடிந்து விட்டது; போலீஸ்காரர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைத்தான்.

ஆனால், இந்த முறை ஒரு சோகம்! அவன் புதிய சிநேகிதி திலகம்! அவனது மாறிய வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்த அழகான சித்திரம்!

"ஒரு காப்பி சாப்பிட்டுட்டு வறேன். அண்ணே" என்று அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான்.

மெல்ல நிதானமாக நடந்தான்.

யோசித்தான்.

முதலாளிக்கு என் முகவரி தெரியாது. எனவே கவலையில்லை. உடனே என்னைத் தொடர்கிற கவலை இல்லை.

ராடியை எடுத்து விடலாமா? ஆபத்து!

ஊர் மாற்றலாமா? எந்த ஊர்? மறுபடி பம்பாய்! மறுபடி துறைமுகமா!

எண்ணெயும் ஈரமும் தரையில் படர்ந்த சாலையில் பாதி இருட்டில் மஸ்தான் என்பவனுடன் சண்டையிட்ட ஞாபகம் வந்தது. மறுபடி அந்த வாழ்க்கையா?

பம்பாயில் நல்ல முறையில் பிழைக்க எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருக்குமே! முயன்று பார்க்கலாமே

முதலில் பம்பாய் செல்லத்தான் வேண்டுமா? சென்னையிலேயே பதிந்திருந்தால் என்ன!

திலகத்திடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டு, அவளை யோசனை கேட்கலாமா?

வேண்டாம். அவசரப்படாதே !

திலகத்துடன் ஓடிப்போய் விடலாம் திலகத்துடன் சென்னையிலேயே தங்கலாம். திலகத்தை உடனே விவாகம் செய்து கொள்ளலாம். திலகத்திடம்

எல்லா நினைவுகளிலும் திலகம்தான் இருந்தாள். முதலில் மைலாப்பூர் சென்று அவளைப் பார்க்கலாமே என்பது வரைதான் தீர்மானித்தான் பஸ் ஏறினான்.

"ஃபாரஸ்ஸிக் சைன்ஸ்" லாபரட்ரியின் வாசலில் தர்மலிங்கம் சீருடையில் இல்லாத மற்றோர் அதிகாரியிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.



"ரிமார்க்கபிள்! எங்க சார் பிரிண்ட்ஸ் கிடைக்குது!"

அதிருக்கட்டும். விரல் அதேதானே! புண்ணியகோடியுடைய விரல் ரேகைதானே?"

"சந்தேகமே இல்லை! சுழலுக்கு சுழல் ஒத்துப் போறது. வரிக்கு வரி அதேதான் எப்படி லேடஸ்ட் பிரிண்ட்ஸ் ஏதாவது எடுத்தீங்களா!"

"இல்லை! அந்த ப்ரிண்ட் மஸ்டர் ரோலில் இருந்து எடுத்தது. ஒரு ஆள்மேல சந்தேகப்பட்டு, அவன் கூலி வேலை செய்யற கட்டிடத்தில் சம்பளப் பட்டுவாடா காகிதத்தில் இருந்து எடுத்தது!"

"இவன்தான், கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. கடவுளோ மனுசனோ இந்த விரல் ரேகைகளை மட்டும் மாற்ற முடியாதுங்க!"

"ரொம்ப தாங்க்ஸ்! உங்கள் டீரீட்மெண்ட் ரொம்ப ஒத்தாசைங்க!" என்றார் தர்மலிங்கம்!

"ஏங்க! இன்னும் நிறைய இம்ப்ரூவ் செய்யனுங்க. புதுசா எலக்ட்ரான் ஆட்டோகிராஃபின்னு ஒண்ணு வந்திருக்குங்க... நம்ம சருமத்தில் பட்டிருக்கிற விரல் ரேகையைக்கூட அதில் எடுத்துடுவாங்க!

"வரேங்க!"

தர்மலிங்கம் மிகவும் உற்சாகமாக வெளியே வந்தார்.

புண்ணியகோடியை ஏறக்குறைய பிடித்தாகி விட்டது. நாளை காலை நிதானமாக அந்த கட்டிடத்தின் அருகில் காத்திருந்து அவன் வந்தவுடன் பிடித்துவிட வேண்டியது. டி. சி.யிடம் சொல்லி விடலாமா? இல்லை, என் சொந்த முயற்சி இது.

வலை விரித்தாகிவிட்டது. பறவை வந்து விழப்போகிறது! ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஐந்து ஆண்டு காவல் இலாகாவையே திணற அடித்தவன் சுலபமாக அகப்படப் போகிறான்...

தர்மலிங்கத்திற்கு நாளை மாலை செய்தித்தாள்களின் உயரமான தலைப்புச் செய்திகள் இப்போதே தெரிந்தன!

**பழைய கேடி அகப்பட்டான்!**

**கண்ணி வைத்துப் பிடித்தார்கள்...**

இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் சென்ற சில தினங்களாக இந்த வழக்கில் மிகவும் ஆர்வம் கொண்டு...

அவசரப்படாதே! நாளைக்கு அப்புறம்தான்! இன்னும் பறவை சிக்கவில்லை!

ஜீப்பை உடனே அந்தக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றார், மாலை ஆறரை மணியிருக்கும். எல்லா வேலைகளும் முடிந்து போய் வாட்ச்மேன் மட்டும் இருந்தான். அவனிடம் சென்று "காலைல எத்தனை மணிக்குப்பா வேலை துவங்குது?" என்று கேட்டார்.

ஏழு எட்டு மணிக்குங்க!"

"உனக்கு இங்க வேலை செய்யற நாராயணனைத் தெரியுமா?"

"தெரியாதுங்க!"

"நிலகம்:"

"தெரியாதுங்க. மேஸ்திரிக்கு எஜமானருக்கு தெரிஞ்சிருக்கலாம்..."

வாட்ச்மேனை கேட்டால் எப்படித் தெரியும்?

தர்மலிங்கம், பதட்டப்படாதே! ஒரு நாள்தான் பாக்கி. ஏன் உன் இதயம் அனாவசியத்திற்கு படக் படக் என்று படபடக்கிறது. ஒரே இரவு! நன்றாகத் தூங்கு, காலையில் செயல்படு

புண்ணியகோடி! நான் உன்னை சட்டத்தின் பெயரில் செக்ஷன் 41 சி. ஆர். பி. சி. யின்படி...

இரு! பொறுத்திரு, தர்மலிங்கம்...

□

# 10

நாராயணன் தன் அறைக்குத் திரும்பி வந்தபோது அறை ஆச்சரியமாக மாறியிருந்தது. வெறும் அறையாக இருந்ததை அரை நாளில் வீடு ஆக்கிவிட்டாள். அவளது பொருள்களும் தன் பொருள்களும் கலந்து ஒன்றிப்போய் விட்டதை கவனித்தான்.

ஓரத்தில் ஸ்டவ் அடுப்பு பற்றவைத்து சமையலைத் தொடக்கி விட்டாள். எப்போது நேரமும் கிடைத்து, தண்ணீரும் வந்து, எல்லாத் துணிமணிகளையும் மொற மொற என்று துவைத்து மடித்து வைத்தாளோ, கண்ணாடி ஆணியில் மாட்டப்பட்டு சுத்தமான சீப்புடன் காத்திருந்தது. பத்திரிகைகள் சுத்தமாக மடிக்கப்பட்டு இருந்தன. போதாக் குறைக்கு ஒரு திரைச்சீலை. ஓவல்டின் டப்பாவில் சொருகப்பட்ட சில மலர்கள், எங்கே பறித்தாள்!

"கால் எப்படி இருக்கு?"

"பரவாயில்லை. நாளைக்கு ஆறிப்போய்விடும்!"

"இந்தக் காலை வெச்சுக்கிட்டே இத்தனை வேலையும் செஞ்சேன்னா உடம்பு நல்லா இருந்தா உன்னைக் கட்டிப் பிடிக்க முடியாது போலிருக்'கே!"

"கட்டிப்பிடிக்கத்தானே எல்லாப் பயலுகளும் அலைஞ்சாங்க!"... என்று கண்சிமிட்டிச் சிரித்தான். அவனும் சிரித்தான்.

"நான் விடுவேனா! ஒரே ஒரு ஆளுக்காகத்தான்யா நான்!" என்றாள்.

நாராயணனுக்கு உள்ளே துடித்தது. அவன் மேல் ஆசையா? பெண்ணே நானும் அப்படித்தான்!

"நாளைக்குக் காலை நானும் உன் கூட வந்துர்றேன்யா! என்னால் நாள் பூரா இந்தமாதிரி வீட்டில் உக்கார்ந்திருக்க முடியாது. போர் அடிக்குது."

"திலகம்! நாளைக்கு நான் வேலைக்குப் போக மாட்டேன்!"

"ஏன்?"

"வேலையை விட்டுட்டேன்!"

"ஏன்?"

"ஏன்? இப்போது புண்ணியகோடியின் சாமர்த்தியம் தேவையாக இருந்தது! "உனக்காக!" என்றான்.

"எனக்காகவா? புரியறமாதிரி சொல்லுய்யா"

இப்போது பொய் உறுதிப்பட்டு சரமாரியாக வெளி வந்தது.

"காலைல போனேனா? ஆஜர் எடுக்கறபோது "திலகம் எங்கே?"ன்னு என்னைக் கேட்டாங்க. "அதால வரமுடியலை. காலில் அடிபட்டுக் கட்டுப் போட்டு இருக்கு"ன்னேன் உடனே மேஸ்திரி "அந்தப் பொண்ணை பார்த்தால் காலைல இருந்து வேலைக்கு வர வேண்டாம்னு சொல்லிடு"ன்னார். எனக்கு வெறுப்பாய் போச்சு. "ஏன், மேஸ்திரி, இது எப்படி நியாயம்? ஒரு பொம்பளை உடம்பு சுகமில்லாமல் ஒரு நாள் வரலைன்னா அதுக்காக உடனே வேலையை விட்டு நிறுத்திர்றதா"ன்னு கேட்டேன்! அதுக்கு அந்த ஆள் என்ன சொன்னான் தெரியுமா, திலகம்..."

"என்னவாம்?"



"வேண்டாம், அந்தப் பேச்சே வேண்டாம்"

"பரவாயில்லை. சொல்லு!"

"அவளை நிறுத்தறது அதுக்காக இல்லை, நாராயணா, அவளைப்பத்தி நாங்கள் கேள்விப்படறது நல்லால்லே! அவள் நடத்தை நல்லால்லே! அப்படி இப்படின்னு ஆரம்பிச்சான்! சட்டையை கொத்தாப் புடிச்சுக்கிட்டேன். "மேஸ்திரி! நீ வேலையை விட்டு நிறுத்தறதுக்கு வேற ஏதாவது காரணம் சொல்லு! ஆனால், அபாண்டமா கதை மட்டும் சொல்லாதே! அந்தப் பொண்ணு எப்படிப்பட்ட பொண்ணுன்னு எனக்குத் தெரியும்"னேன், "ஆமாம். தெரியும் நீயும் தானே அவளை வெச்சுக்கிட்டிருக்கே..." அப்படின்னு ஆரம்பிச்சானே பார்க்கணும்! உடனே விட்டேன் பாரு! புரட்டிப் புரட்டி எடுத்துட்டேன்!"

அவள் மானசீகமாக அந்த சண்டையை புன்னகையுடன் ரசிக்க...

"மேஸ்திரி குய்யோ முறையோன்னு கத்திட்டு எஜமான்கிட்ட சொல்ல அவர் வந்து "என்ன நாராயணா இந்த அடி அடிக்கலாமா?"ன்னு என்னை சத்தம் போட்டார். நான் சொன்னேன். த பாருங்க திலகம் இங்கு வருவானா நான் வேலைக்கு வர்றேன்! இல்லைன்னா நானும் நின்னுக்கிறேன்னு அடிச்சுச் சொல்லிட்டேன்!"

"விட்டுட்டியா. அடப்பாவி! என்னை எவன் என்ன சொன்னால் உனக்கென்னய்யா!"

"ஆ! அப்படி சுலபமா சொல்லிறமுடியுமா திலகம்?"

"ஏய்யா, நீ என்னை லவ் பண்றய்யா?" என்றாள் திலகம்.

"ஆமாம் திலகம்!" என்றான் வெட்கத்துடன்.

"சரிதான் அப்ப ரெண்டு பேருக்குமே வேலை போச்சா!"

"வேலை என்ன வேலை! சுண்டைக்காய்! நான் உனக்கு எட்டுரிலே வேலை வாங்கித்தரேன், வா, திலகம் மெட்றாசை விட்டுட்டு நாம ரெண்டு பேரும் வேற ஊர் போயிடலாமே?"

"அதுகூட சரிதான். ஆனால்..."

"ஆனால் என்ன?"

அவள் யோசித்து "வேண்டாம்யா! இந்த ஊர்லயே இருக்கலாம்!" என்றாள்.

"நீ சொன்னால் சரி! அப்புறம் திலகம்..."

"என்ன?"

"நாம ரெண்டு பேரும்..."

"அதான் ஒன்னா சேர்ந்து இருக்கப் போறமே!"

"அதில்லை, திலகம். அவுங்கல்லாம் என்ன தீமையா பேசினாங்க? அதுக்காகத்தான் நீ கல்யாணமானவன்னு தெரிஞ்சு இருந்தால் அந்தப் பேச்சுப் பேசியிருப்பான் களா..."

"சுத்தி வளைச்சுப் பேசாதே! இப்ப என்ன சொல்றே? நான் கல்யாணம் செஞ்சுக்கணும்கிறியா?"

"நாம்!"

"அதாவது உன்னை நான்!"

"ஆமாம்!"

அவள் சிரித்து, "அதுக்கென்னய்யா அவசரம்? ஊரானுங்க ஏதோ பேசறான்னு உடனே கல்யாணம் செய்துக்கிறதா? அது சரி, கல்யாணம்கிறது என்ன சும்மாவா? கல்யாணம் செய்துக்கறதுக்கு நீ எவ்வளவு பணம் காசு வெச்சிருக்கே?"

"பணம் என்ன சுலபத்தில் சம்பாதிச்சுடுவேன்"

"எப்படி, திருடியா!"



"இல்லை, உழைச்சு!"

"அதுக்காக அய்யா ஒண்ணும் தீவிரமா முயற்சி செய்யறாப்பல இல்லையா! இருக்கிற வேலையையும் போக்கிட்டில்ல வந்திருக்கே! அது பாருய்யா கல்யாணத் துக்கு ஒண்ணும் அவசரம் இல்லை! என்ன குடிமுழுகிப் போச்சு? இப்ப உன்னை யாராவது "இந்த பொம்பளை யாரு'ன்னு கேட்டால் "என் மனைவி"ன்னு சொல்லிக்க யேன்! என்னை யாராவது கேட்டால் தாலி கட்டின புருசன்கிறேன்!"

"ஆனால் என்னைக்காவது ஒரு நாள் மெய்யாகவே கல்யாணம் கட்டிக்க வேண்டாமா?"

"அது அப்புறம். முதல்ல கொஞ்சம் சம்பாதிக்கலாம். அடுத்த வேளைச் சோத்துக்கு லாட்டரி! கல்யாணமாம்! கல்யாணம் வாய்யா, வந்து சாப்பிடு! வெளி ஆளுங்க ளைப் பொறுத்தவரையிலும் நானும் நீயும் புருசன் பெண்சாதிதான்யா!"

நாராயணனின் உள்ளே உற்சாகம் பொங்கியது. கூடவே ஓர் உறுத்தல். அந்த போலீஸ் விசாரிப்பு சே! என்னை எப்படி இவ்வளவு பெரிய நகரத்தில் கண்டு பிடிப்பார்கள்!

இருந்தும், அவன் உள்ளுணர்வு இந்த நகரத்தை விட்டு விலகிச் செல்வதுதான் உத்தமம் என்று சொல்ல, அந்தப் பெண்ணின் பாசம் அவனை இங்கேயே நிறுத்து கிறது. சட்டென்று உதறிவிட்டு ஓடிவிடலாமா? ஆனால், பாவம், திலகம் தனியாக என்ன செய்யவாள்? அவளுக்கு பாதுகாப்பு தேவையாக இருக்கிறது.

திலகத்தின் சமையல் நன்றாக இருந்தது. மெலிதாக தாக மசாலா வாசனையுடன் ஒரு குழம்பு வைத்திருந் தாள். அதில் முட்டை மிதந்தது. அவள் ஆக்கியிருந்த சோறு இரண்டு பேருக்கும் சரியாகப் போதுமானதாக இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும், வெளியே சற்றுதூரம் நடக்கலாம் என்றாள். அவன் தங்கினான். இருந்தும் கடற்கரை பக்கம் போகலாம் என்று தோன்றியது.

நேராக நடந்து பாலம் கடந்து சாந்தோம் சர்ச் மூலம் கடற்கரை சாலையில் நுழைந்து மணலில் இருட்டில் உட்கார்ந்தார்கள்! அவள் உடலின் விளிம்பு வெளிச்சம் பின்னணியில் பெரிதாகத் தெரிய, "சொல்லி விடலாமா? புண்ணியகோடியாய்ச் செய்த பாவங்கள் அத்தனையும் சொல்லி விடலாமா?"

வேண்டாம், பொறு!

ஆனால், கல்யாணத்துக்கு முன்பு நிச்சயம் சொல்லி விடவேண்டும். ரிஜிஸ்தர் கல்யாணம் என்கிறார்களே, அதற்கு எவ்வளவு செலவு ஆகும்?

"வெளி ஆளுங்களைப் பொறுத்தவரையிலும் நானும் யும் புருசன் பெண்சாதிதான்யா!"

மனதில் கல்யாணம் செய்து கொண்டு விட்டோம்; எதற்காக சடங்குகள்!

கல்யாணம் ஆகிவிட்டது என்றால், இன்றைக்கு முதல் இரவா?

"திலகம்! வா திரும்பப் போயிடலாம் அப்புறம் ரொம்ப லேட்டாயிரும்"

ஓர் ஓரத்தில் தன் பாயை விரித்து சிக்கனமாகத் தலையணையை அமைத்தாள். எதிர் ஓரத்தில் அவன் படுக்கையை விரித்தாள். 'படுத்துக்கய்யா! எனக்குத் தூக்கம் வருது!'

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் எதிர்பார்த்தது நிகழவில்லை. படுத்துக்கொண்டு சற்று நேரம் பாசாங்குத் தூக்கந்தூங்கி, அப்புறம் எழுந்து தன்



படுக்கையில் வந்துபடுத்துவிடுவாள் என்று எதிர்பார்த்தான். இல்லை. சத்தமே இல்லாமல் உறங்கினாள்.

இல்லை, விழித்து இருக்கிறாள்.

பெண் எப்படி அவளே வருவாள்! அவளது இயல்பான அடக்க நிலையில் ஆண் வந்து கேட்பதைத்தானே விரும்புவாள்? நான் அவளிடம் போக வேண்டும். நான் கேட்கவேண்டும். அதுதான் சரி.

மெல்ல எழுந்து, குறுக்கே நடந்து, தூங்கிக்கொண்டு இருக்கும் அவள் எதிரே உட்கார்ந்தான்.

தெருவிளக்கு வெளிச்சத்தில் கொஞ்சம் தெரிந்தாள்.

தெரிந்த அளவுக்கு அவனுள் ஒரு கிறக்கம் ஏற்பட்டது.

கையைக் கட்டிக்கொண்டு இருந்தாலும், சேலை விலகியிருந்ததாலும் மேல் பட்டன் விலகியிருந்ததாலும், நிழல் வெளிச்ச வித்தியாசத்தாலும் அவள் மார்பகங்கள், தெளிவாகத் தெரிந்தன. வயிற்றின் இடைவெளியில் பாவாடை நாடா படுத்து இருந்தது.

இரண்டு கால்களையும் ஒட்ட வைத்து அவள் படுத்து இருந்தால் ஏற்பட்ட இடுப்புச் சரிவு எல்லாவற்றையும் நிதானமாகக் கண்களால் வருடினான்.

அவளைத் தொடுவதற்கு அவன் கைகள் துடித்தன.

உடம்பு முழுக்க ஒரு மின்சாரம் பாய்ந்த நிலை ஏற்பட்டது.

மெல்ல, அவளை எழுப்பாமல், மிச்சம் இருந்த மார்புச் சேலையை மெதுவாக விரல்களால், விலக்கினான்.

அவள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

மார்பு ஜாக்கெட்டின் மூலையை சற்று இழுத்துப் பார்த்தான்.

அனாவசியகொக்கிகள்!

இடுப்பில் நாடா சுருக்கு முடியிட்டு 'கலபம்' என்றது!

நிதானமாக வெகுளித்தனமாக அந்தச் சுருக்கை இழுத்தான்.

அந்த முடிச்சு அவிழ்ந்து, இடுப்புப் பாவாடை தளர்ந்தது.

நாராயணனுக்கு புண்ணியகோடியின் பூட்டைத் திறக்கும் லாவகம் ஞாபகம் வந்தது. சத்தமே போடக் கூடாது. விரல் பதியக்கூடாது. மிகச் சன்னமாக, விரல்களால் துளி கூடப் பிசகாமல் புண்ணியகோடி அதில் தேர்ந்தவன்.

இருந்தும், அந்தத் திருட்டில் இதயம் படக் படக் என்றது. ஏறக்குறைய காதில்கேட்டது. எத்தனையோ பம்பாய் பெண்களை எத்தனை விதத்தில் பார்த்திருக்கிறான். இவள் மட்டும் என்ன பிரத்தியோகம்! இவளை அடைவதில் இருக்கும் லேசான அலட்சியத்தாலா?

ஒரு தேர்ந்த கைக்கெடியாரக் கலைஞன் ஹேர் ஸ்பிரிங்கை மென்மையாக விலக்குவது போல் அவள் இடுப்பில் தளர்ந்த துணியை நிதானமாக நீக்கினான். அழுத்தியிருந்த தொடைகள் தெரிந்தன.

மெதுவாக, மிக மெதுவாக அவள் தூக்கத்தைக் கலைக்கவே கலைக்காமல், தன் முகத்தை அவளுக்கு மிக அருகே கொண்டு சென்று... அவன் மூக்கின் நுனியின் நுனி அவள் வயிற்றில் ஒரு மயிலிறகுத் தோகையாய்ப் பட...

சட்டென்று அவன் தலைமயிரைப் பிடித்தது, ஒருகை!

திடுக்கிட்டாள்!

''இன்னிக்கு வேண்டாம்யா!'' என்றாள் திலகம்.

சட்டென்று தெருவிளக்கு அணைந்துவிட்டது.

திலகம் தன் உடைகளை சரிசெய்து கொண்டு, எழுந்து உட்கார்ந்தாள்.



''இத பாருய்யா...என்னை நீ இப்ப என்னவேணா செய்துட முடியும். என்னால எதிர்க்க முடியாது. உடம்பால எதிர்க்க முடியாது. ஆனால் மனசில நிச்சயம் எதிர்ப்பேன்; திட்டுவேன். அப்புறம் உன் வாசல் பக்கம் வரமாட்டேன் போயிருவேன். உன் ஆசை அஞ்சு நிமிஷத்தில் தீர்ந்து போயிரும், அதுக்காக நம்ம சிநேகிதத்தை அப்படியே ஒட்ட வெட்டிடணும்னு நீ நினைக்கிறியா? யோசிச்சுப்பாரு.''

''இல்லை, திலகம். நான் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க விரும்பறேன்.''

''அப்ப இதுக்கு ஒண்ணும் அவசரமில்லைதானே!''

''இல்லை!''

''நீ என்ன பொம்பளையே பார்த்தது இல்லையா?''

''பார்த்திருக்கேன்.''

''அப்ப சும்மா படு! ராக் கூத்தடிக்காதே!'' என்று சிரித்துக் கொண்டு படுத்தாள். புழுப்போல் தன்னை சுருட்டிக் கொண்டு, புடவையால் போர்த்திக் கொண்டாள்.

நாராயணன் சற்று நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு, வெளியே போய் மொட்டைமாடியில் நின்றான்.

அவனுள் ஒரு விவரம் இல்லாத பயம் உருவாகியது.

என்னை போலீசார் கண்டுபிடிக்கப் போகிறார்கள். அதற்குள் எப்படியாவது இவளை அடைய வேண்டும். தன்னலம் மிகுந்த ஆசைதான். ஜெயிலுக்குச் செல்லப் போகும் பழைய கேடியை கல்யாணம் செய்து கொள்ள சம்மதிப்பாளா?

இங்கேயே, இந்த இடத்திலேயே இவளை உதறிவிட்டு விலகிப் போய், மற்றொரு நகரில் மற்றொரு பொந்தில் மறைந்து கொண்டால் என்ன? அதுதான் சரி...

இல்லை!

எத்தனை நாள்தான் இப்படி சட்டத்தில் இருந்து ஓடிப் பதுங்குவது?

என்றாவது ஒரு நாள், ''போதும்!'' என்று சொல்ல நின்று நிலைக்க வேண்டாமா?

இவளிடம் ஆதியோடு அந்தமாக எல்லாவற்றையும் சொல்லி விட்டால் என்ன?

என்னை புண்ணியகோடியின் திருத்தின அவதார மாக இவள் ஏற்றுக் கொள்வாளா?

நிச்சயம் மறுத்து விடுவாள்!

“உடம்பால எதிர்க்க முடியாது! மனசால எதிர்ப் பேன்!''

அவள் உடம்புதான் வேண்டும் என்றால், இதோ இப்போதே உள்ளே செல்! அவளை அடை! ஒரே ஒரு தரம்! அப்புறம் ஓடு! உன் ஓட்டத்தைத் தொடர். நிற்காதே ஓடு!

இப்போது என்ன நிகழ்ந்து விட்டது? போலீஸ் விசாரிச்சிருக்காங்க. அவர்கள் என்னைக் கண்டுபிடிப் பார்கள் என்பது என்ன நிச்சயம்? அவசரப்படாதே, இன்னும் ஏதும் நிகழவில்லை. இன்னும் உனக்கு திலகத் திடம் ஒரு வாய்ப்பு இருக்கிறது...பொறு! பொறுமை முக்கியம்.

மறுபடி உள்ளே சென்று அவளது பக்கம் திரும்பாமல் படுத்தான்.

□

# 11

தர்மலிங்கம் மணியைப் பார்த்துக் கொண்டார்.

காலை ஒன்பது.

இன்னும் அந்த நாராயணன்வேலைக்கு வரவில்லை.

எதிரே கட்டிட வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டு இருந்தது. அவர் கண்கள் சாலையை அடிக் கடி வருடின—தாடி வைத்த ஆசாமி யாராவது வரு கிறனா என்று.

ஒரு போலீஸ் ஆபீசருக்கு காத்திருப்பது பழக்கப் பட்ட விஷயமே. எத்தனை நாட்கள், எத்தனை மணி நேரங்கள் எங்கெங்கெல்லாம் காத்திருக்கிறார். வீட்டு வாசல்களில் படிகளில் ஆஸ்பத்திரியில்...

''எனக்கு பயமா இருக்குதுங்க! என் கையைப் பிடிச் சுக்கங்க!''

தர்மலிங்கம் தன்னை உலுக்கிக் கொண்டு மனைவி யின் நினைவுகளை உதறி மறுபடி சாலையில் கண் ணோட்டினார்.

ஏன் இன்னும் அவன் வரவில்லை. “எட்டு மணிக்கு வேலைக்கு வந்து விடுவான்!'' என்று சொன்னார்களே! ஒரு வேளை அவனுக்குத் தகவல் தெரிந்து உஷாராகி விட்டானா பறவை மறுபடி தப்பிவிடப் போகிறது! உள்ளே போய் விசாரிக்கலாம்.

“இங்கேயே இருங்க. ஜீப்பை மர நிழலில் கொண்டு போய் நிறுத்துங்க. நான் போய் உள்ளே விசாரிச்சுட்டு

வர்றேன். தாடி வெச்ச ஆள் வந்தால் கொஞ்சம் கண் காணிங்க. ஓட முயற்சி செய்தால் துரத்திப் பிடிச்சிருங்க'' என்று கான்ஸ்டபிளிடம் சொல்லிவிட்டு, கட்டடத்தை நோக்கி நடந்தார்.

''வரணும் சார். வரவேண்டியவன்தான் இன்னும் வரலை. என்ன செய்யச் சொல்றீங்க'' என்றான், அந்த இளைஞன்.

''உங்க பேர் என்ன?''

''பிரகாஷ்!''

''பிரகாஷ் அந்த ஆள் நேத்திக்கு அப்புறம் வந்தானா?''

அவன் சற்று யோசித்தான்.

''தயங்காமல் சொல்லுங்க. போலீஸ்காரங்ககிட்ட பொய் மட்டும் சொல்லாதீங்க.''

''வந்தான் சார்''

''அவங்கிட்ட நாங்கள் அவனைத் தேடிக்கிட்டு வந்த விவரத்தை சொன்னீர்களா?''

மறுபடி தயக்கம்.

''சொன்னீங்க. அப்படித்தானே.''

''ஆமாம்''

''ச்ச்ச்—காரியத்தைக் கெடுத்துட்டீங்க. ஏன் சார் நான் ஒண்ணும் சொல்ல வேண்டாம்னு குறிப்பா உங்கள் கிட்ட சொல்லிட்டுத்தானே போனேன்.''

''அந்த ஆள் நீங்கள் நினைக்கிற கேடி இல்லைங்க. நிச்சயம் எனக்குத் தெரியும்ங்க.''

இன்ஸ்பெக்டர் கோபத்துடன் ''அதைத் தீர்மானிக்க வேண்டியது நாங்கள். மிஸ்டர் பிரகாஷ். நீங்கள் கொடுத்த மஸ்டர் ரோலில் அவன் விரல் ரேகை இருந்ததில்ல; அதை வெச்சுப் பொருத்திப் பார்த்துட்டம். அதே ஆள்தான்னு ஊர்ஜிதமாய்டுச்சு. இப்ப என்ன சொல்றீங்க?''



அவன் அயர்ந்து போய், ''அப்படியா. நம்பவே முடியலைங்க.'' என்றான்.

''அவன் பேர் நாராயணன் இல்லே. புண்ணிய கோடி. முப்பத்தாறு குற்றங்கள் செய்திருக்கிறான். மூணு முறை சிறையில் இருந்து தப்பிச்சிருக்கிறான். ஒரு ஆளுடைய சாவுக்குக் காரணமாக இருந்திருக்கிறான்.''

''ஆளைப் பார்த்தால், அவன் என்கிட்டே வேலை செஞ்ச நல்ல முறையைப் பார்த்தால் அவன் பழகின விதத்தைப் பார்த்தால், அப்படிச் சொல்லவே முடியாதுங்க.''

''ஆளைப் பார்த்து எவனையும் நம்பாதீங்க. நீங்கள் இனிமேல் பார்க்க முடியாது. இனி வரமாட்டான். எனக்கு நிச்சயம் தெரியும். பறந்துவிட்டான்.'' என்றார், விரக்தியுடன்.

''அவன் வீட்டு விலாசம் உங்ககிட்ட கிடையாதுன்னு நேற்று சொன்னீங்க.''

''சாரி, சார். நான் கேட்டு வெச்சுக்கலை இருங்க, நம்ம ஒர்க்கர்ஸ் யாருக்காவது தெரியுமான்னு கேட்டுப் பார்க்கிறேன்.''

''எனக்கு நம்பிக்கையில்லை. அவன் ஜாக்கிரதையான ஆசாமி இந்நேரம் ஊரை விட்டுக்கூடக் கிளம்பியிருப்பான்'' தர்மலிங்கம் ஆத்திரத்துடன் தன் கையைக் குத்திக் கொண்டார். ''சட் தாழ் உடைஞ்சு போச்சு. வரமாட்டான். வறேன். எதுக்கும் அவன் வந்தால், உடனே எனக்கு மறைமுகமாக தகவல் சொல்லுங்கள்.''

''சரி, சார்.''

வெளியே வந்த தர்மலிங்கம் ''ஓட்டுய்யா. ஜீப்பை'' என்று அதட்டினார்.

''வர்லியா சார்.''

''ம்கூம் ஆள் கண்டுக்கிட்டான். இனி வரமாட்டான்''

"விலாசம் கிடைச்சா..."

"ஆமா. கிடைக்குது. விலாசம் காகிதத்தில் எழுதி வெச்சு ஒரு தங்கத் தட்டில கொடுக்கிறாங்க, போங்க."

"எங்கே போறது."

"எங்கயாவது."

## 12

"திருப்புளி இழைப்புளி ஏதாவது வெச்சிருக்கியா?"

"ஒண்ணும் இல்லீங்க."

"பின்ன எப்படி உனக்கு தச்சு வேலை தெரியும்னு ஒப்புக்க முடியும்?"

"வேலை குடுத்துப் பாருங்க."

"இது என்ன பலகை."

"மாம்பலகை. இது தேக்கு இது பிள்ளை மருது."

"இத பாரு, இந்த சட்டத்தில் இந்த ஆணி அடி பார்க்கலாம்."

நாராயணன் சரியான சுத்தியைத் தேர்ந்து எடுத்தான்.

"டக்...டக்"

ஆணியின் மண்டையில் செங்குத்தான, இரண்டு அடி செம்மையாக உள்ளே இறங்கியது.

"நீ தச்சன்தான்யா. ஒரு ஆள் ஆணி அடிக்கிறதைப் பார்த்தே தச்சனா இல்லையான்னு தெரிஞ்சுக்கிடுவேன். ட்ராங்கி படிப்பியா?"

"தெரியுங்க!"

"இதாரு?"

"சம்சாரம்ங்க! அடுத்த வேளைச்சோத்துக்கு இல்லாமல் கஷ்டப்படறம்ங்க! பாத்து வேலை குடுங்க!" என்றாள் திலகம்.



"சரி, வேலைக்கு வந்துரு! தினம் அஞ்சு ரூபா!"

"சரிங்க" என்று சொல்ல ஆரம்பித்தவனைத் தடுத்தாள்.

"வர்றங்க. கட்டுப்படியாகாதுங்க! பத்து ரூபாயாவது இருந்தாத்தான் . சரிப்படுங்க!"

"அதெப்படி? ஆள் புதுசு! வேலை எப்படின்னு தெரியாமல் எப்படி அவ்வளவு கூலி கொடுக்க முடியும்!"

"வேலையைப் பார்த்துக்கிட்டு கொடுங்க" என்றாள் திலகம்.

"வேண்டாம்மா!"

"அப்ப வர்றங்க! வாய்யா!"

திகைத்து அவளுடன் நடந்தான். "என்ன திலகம்!" என்றான்.

"பேசாமல் நடய்யா! அந்தாளு திரும்பக் கூப்பிடறானா இல்லையா பாரு!"

பத்தடி நடந்ததும் "யோவ்! ஏழரை ரூபா வெச்சுப்பியா! கடைசியா சொல்லு" என்று கூப்பிட்டார், கடைக்காரர்.

"பாத்தியா! நான் சொன்னேன் இல்லை!" என்று திரும்பினாள்.

"சரியான பொம்பளையைக் கட்டிருக்கய்யா!"

திலகம் அவனைப் பார்த்து சுந்தரமாகச் சிரித்தாள்.

"ஒழுங்கா வேலை செய்! போட்டுக் குடுப்பாரு!"

"கீதா ஃபர்னிச்சர் மார்ட்" வசதியாக சந்தில் ஒளிந்திருந்தது. அதன் பின்புறத்தில் ஷெட் போட்டு அதில் தச்சு வேலை நடந்து கொண்டு இருந்தது. சரியான இடம் தற்போது புதைந்து மறைந்து கொள்ள ஏற்ற கடை வேலை. கூலி. மறுபடி வாழ ஒரு விளிம்பு. மறைந்திருக்க ஒரு சின்னத்தீவு.

"திலகம்! நீ வீட்டுக்குப் போயிரு! நான் வேலையை முடிச்சுக்கிட்டு சாயங்காலம் வந்துர்றேன்!"

"அதெப்படி? நீ வேலைக்குப் போயி, நான் சும்மா இருக்கறதா? வேற எங்கயாவது கூலி வேலை கிடைக்கு தான்னு பார்க்கறேன்!"

"அவசரமில்லை, திலகம்! இன்னிக்கு வேண்டாம். ஏழரை ரூபா நமக்குப் போதும், நான் சொல்றதைக் கேளு!

அவள் சென்றதும் தன் வேட்டியை டப்பாகட்டு கட்டிக் கொண்டான். சட்டையை அவிழ்த்துத் தொங்க வைத்தான். பென்சில் கேட்டான். ரம்பத்தைத் தேடினான். ஸ்கேல் எடுத்தான். வரைபடத்தைப் பார்த்தான்.

கட்டையை தேர்ந்து எடுத்து வரைந்தான். கும்பிட்டான். துவக்கினான்.

உதவிக் கமிஷனருக்கு விறைப்பாக சல்யூட் அடித்து விட்டு தர்மலிங்கம் நின்றார்.

கமிஷனர் அவர் கொடுத்த ரிப்போர்ட்டை நிதானமாகப் படித்தார். நிமிர்ந்தார்.

"ஆள் மெட்றாஸ்லதான் இருக்கணும்னு நினைக்கிறீங்களா? ஒரு நாள் ஆயிடுச்சே!"

"ஆமாம், சார்! இருந்தாலும், சென்டிரல், எக்மோர் மேலும் பஸ் நிலையங்களுக்கு தகவல் கொடுக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டேங்க..ஆள் அடையாளமும் கொடுத்திருக்கு. டிவிஷன்ல எல்லா ஸ்டேஷனுக்கும் கொஞ்சம் தீவிரமா முயற்சி பண்றதுக்கு நீங்கள் ஆர்டர் கொடுத்துட்டீங்கன்னா..."

"செய்திடலாம், ..ஏறக்குறைய பிடிக்கிற லெவலுக்கு வந்துட்டிங்களே!"



"இல்லை, சார். இன்னும் இல்லை...தப்பிச்சுருவான்னு அச்சமா இருக்குது!"

"கவலைப்படாதீர்கள்... உடனே செயல்படலாம் நீங்கள் இன்னொன்னு செய்யலாம். தர்மலிங்கம்."

"சார்!"

"இந்த சைக்கிள் ரிக்ஷா கோணத்தை கொஞ்சம் தீவிரமாக விசாரிக்கலாம். அன்னிக்கு ராத்திரி அவங்க ரெண்டு பேரையும் ஏத்திக்கிட்டுப் போனானே, சைக்கிள் ரிக்ஷாக்காரன், அவனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா பாருங்க. ஏதாவது தகவல் தெரியும்!"

"நிச்சயம் சார்! உடனே செய்யறேன்."

"சரி! ஆளு சிட்டியில் இருக்கான்னு தெரியுது."

"இருக்கலாம்னு தெரியுது, சார்!"

"குட் ஒர்க்!"

"இன்னும் முடியலையே, சார்."

"முடிஞ்சுடும். கீப் இட் அப்."

தர்மலிங்கம் மறுமுறை சல்யூட் அடித்து விட்டுப் புறப்பட்டார்.

□

# 13

மாலை திலகம் பூவைத்துப் பொட்டுவைத்துப் பளிச்சென்று காத்திருந்தாள்.

"இந்தா டீ குடி."

"அட. அதுக்குள்ள ஒரு ஓட்டலே வெச்சுட்டியே."

டீயை வாங்கும்போது அவன் விரல்கள் பட்டபோது அவள் மதிக்கவில்லை.

இந்தச் சேலை புதுசாகக்கட்டியிருக்கிறாள் மெலிதான சேலை. எனக்காக அலங்காரம் செய்து கொண்டு இருக்கிறாள். விநோதப் பெண். கிட்டியும் கிட்டாதவள். தொட்டும் தொடாதவள். ரத்தத்தில் ஒரு தற்காப்பு இருக்கிறது. சிந்தனையில் ஒரு தெளிவு இருக்கிறது.

"களைச்சு வந்திருக்கே, இந்தா. துண்டு முகங் கழுவிக்கிட்டு வேறு சட்டை போட்டுக்கிட்டுவா... வெளிய போவலாம். சினிமாப் பார்க்கலாம்."

நாராயணனுக்கு சற்று அச்சமாக இருந்தது. மாலை வேளைகளில் வெளியே செல்வது நல்லது அல்ல. ராத்திரி போகலாம் திலகம்."

"ஏன்?"

"கொஞ்சம் அசதியா இருக்கு."

"சரிதான். உழைச்சிருக்கே. மறந்தே போய்ட்டேன்."

"இந்தா கூலி, ஏழரை ரூபா."



"எனக்கு எதுக்கு? நீயே வெச்சுக்க."

"இல்லை, நீதானே வீட்டுக்காரி. நீ பார்த்து எனக்கு செலவுக்குப் பணம் கொடு"

"எல்லா விதத்திலயும் என்னை உன் பொண்டாட்டியா மாத்தறே."

"ஒன்னே ஒன்னு தவிர."

"சட். அதுல என்னய்யா இருக்குது."

"தெரியாமப் பேசறே நீ."

"சரி சரி. ஆரம்பிச்சா விடமாட்டே, நீ."

"திலகம் இப்பவே சொல்லு, சரின்னு சொல்லு."

"எனக்கு?"

"என்னை கல்யாணம் செஞ்சுக்கிறதுக்கு.

"ஆளைப்பாரு ஏழரை ரூபாயில எவன்யா உனக்கு கல்யாணம் கட்டி விடறான்."

"கோயில்ல போய் மாலை மாத்திக்கிட்டாப் போச்சு."

"அதெல்லாமல் செல்லாது. எனக்கு கல்யாணம்னா நாலு சனங்க வேணும், நகை வேணும், பட்டுச் சேலை வேணும், தேனிலவு போகணும்!"

"அடி சக்கை! பணக்காரங்க ஆசையெல்லாம் வெச்சிருக்கே. சரி. நான் இனிமேல் சேர்த்து வெக்க ஆரம்பிக்க வேண்டியதுதான். என்ன?"

சிரித்து மழுப்பினாள்.

"திலகம், உண்மையா சொல்லு. உனக்கு இதெல்லாம் ஆசையில்லைதானே?"

"சொல்லமாட்டேன்."

"என்னைக் கல்யாணம் கட்டிக்க இஷ்டமா, இல்லையா? பட்டுனு சொல்லிரு."

"சொல்றன்யா, வேளை வர்றப்ப சொல்றேன்."

"இஷ்டமில்லைன்னா பளிச்சுனு சொல்லிடலாம்"

"கொஞ்சம் பொறுய்யா. இன்னிக்குத்தான் வேலையே கிடைச்சிருக்கு உனக்கு. உடனே கோட்டை கட்டாதே. இதபாரு, உன்கிட்ட ஒரு குணம் ரொம்ப பிடிச்சிருக்கு நாணயம். பொய்யில்லாத மனுசன், நீ. உழைச்சு சம்பாதிக்கிறதுக்கு மரியாதை கொடுக்கற மனுசன், நீ..."

அவள் பேசப்பேச அவனுக்கு வெட்கமாகவும், வருத்தமாகவும் இருந்தன. என்ன ஒரு குரூரமான நியாயம், இது. இவளை நான் முன்பே சந்தித்து இருந்தால், எத்தனை வித்தியாசமாக என் வாழ்க்கை அமைந்திருக்கும், சே.

"நான் மறுபடி வேலைக்குப் போகத் தீர்மானிச்சுட்டேன்யா"

"எங்கே?"

"அதே இடத்துக்கு; நாம வேலை செஞ்சுக்கிட்டு இருந்தமே!"

"அங்கே எதுக்கு? அவன்தான் உன்னை கடுமையாப் பேசினான்னு நான் எல்லாத்தையும் உதறிட்டு வந்துட்டேன்..."

"பேசினால்? ரெண்டு நாள் கூலி பாக்கி தரவேண்டாமா! அதுக்காக வேலையை விட்டுர்றதா? அவ்வளவு சுலபமா நாமதான் விட்டுர்றதா? நான் போய் கேட்கப் போறேன்!"

நாராயணன் அவசரமாக "இத பார், திலகம், நீ அங்கே போகக்கூடாது!" என்றான்.

"ஏன்?"

"அவன் உன்னைப்பத்திப் பேசினது நல்லால்ல!"

"என்ன சொன்னான்? வேசின்னானா?"

"அந்த மாதிரித்தான்"



"என்னை எத்தனையோ சனங்க எவ்வளவோ சொல்லிட்டாங்கய்ய! நான் இதுக்கெல்லாம் அசையற ஆள் இல்லை. நான் போகத்தான் போறேன்!"

"அங்க போனே எனக்கு...கெட்ட கோபம் வரும்!"

"இத பார், சும்மா என்னால சும்ல உட்காந்திருக்க முடியாது"

"வேற வேலைக்குப்போ. அங்க மட்டும் போகாதே!"

"கூலி பாக்கியிருக்கே?"

"நான் போய் வாங்கிவறேன்! நீ போக வேண்டாம்"

"நீ சொல்றதே விளங்கலை, எனக்கு!"

"இந்த விஷயத்தில மட்டும் நான் சொல்றதைக் கேளு, திலகம்! பாக்கி என்ன வேணா செஞ்சுக்க!"

## 14

தர்மலிங்கம் ஜீப்பில் இருந்து இறங்கி, சோம்பேறித்தனமாக நின்று கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷாக்காரனை அணுகினார். மஞ்சளில் சிறுக்கெழுத்தில் "சைக்கிள் ரிக்ஷா நிலையம்" என்று எழுதி, ஒரு வேல் பதித்திருந்தது. போலீஸ் உடையைப் பார்த்ததும் அவர்கள் இருவரும் பரபரப்பானார்கள்.

"யார்யா அது? உன் பேர் என்ன?"

"துரை வேலுங்க!"

"இந்தப் பேட்டையில் இது ஒண்டிதான் சைக்கிள் ரிக்ஷா ஸ்டாண்டா!"

"இல்லிங்க. மரத்தாண்ட ஒன்னு இருக்குதுங்க"

"எவ்வளவு தூரம்?"

"இருக்குங்க ஒருமைல் தொலவு!"

"இந்தப் பேட்டைல இது ஒண்ணுதான்!"

"ஆமாங்க!"

"அதுயார், அங்கே கொடி தெரியுதுபார். அதுக்குக் கீழே ஒரு குடிசையில் நாலுநாள் முன்னாடி ராத்திரி ஒரு

அடிதடி நடந்தது. ஒரு ஆளும் ஒரு பொம்பளையும் சைக்கிள் ரிக்ஷாவில கிளம்பி வந்தார்களாம்...''

''எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. நான் அந்த வம்புக்கெல்லாம் போறதில்லிங்க! டீக்கடையில் கேட்டுப் பாருங்க துரைவேலு எப்படின்னு...''

ஆயாசத்துடன் ''யோவ்! உன்னை ஒருத்தரும் சொல்லை, பயந்து சாவாதே!''

''எப்படியோ நான் ஒருத்தரையும் இட்டாரலைங்க''

''ஏன்யா நீ?'' என்று என்று அருகில் இருந்தவனைக் கேட்டார்.

''தெரியாதுங்க!''

''இந்த ஸ்டாண்டில வாடிக்கையா வேற யார் இருக்காங்க!''

''இன்னும் நாலு வண்டி உண்டுங்க!''

அவுங்கல்லாம் அப்புறம் வருவாங்க!

அப்போது மற்றொரு சைக்கிள் ரிக்ஷாக்காரன் மிதித்துவர...'' என்ன சார்! குட்மார்னிங் சார். சாராயக் கேஸா!'' என்றான்.

''வாய்யா மருதை!''

''உனக்கு ஏதாவது ஞாபகம் இருக்காய்யா... நாலு நாள் முந்திராத்திரி, அதோ பார், அந்தக் கொடியாண்டை ஒரு குடிசையில ..

''ஒரு பொம்பளை, ரெண்டு ஆளு...தகறார் வந்து கத்தியால கீறிட்டானே!''

''அதேதான்!'' என்றார், உற்சாகமாக.

''நான்தாங்க பஸ் ஸ்டாண்டண்டை கொண்டு விட்டேங்க! ஒரு தாடிவெச்ச ஆள், ஒரு பொம்பளை பொட்டி படுக்கையோட!''

''அவுங்கதான்யா, அவுங்கதான்!''

''பஸ் ஸ்டாண்டில விட்டேங்க!''

''பஸ் பிடிச்சுப் போனாங்களா?''

''இல்லிங்க. பஸ் கிடைக்காமல் ஒரு ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி, அந்தாளோட கெஞ்சிக் கூத்தாடி... அதுல போனாங்க!...''



''எங்கே போனானாங்க? ஏதாவது காதில பட்டுதா?''

''இல்லை சார்!'' என்றான் பிரகாசமாக!

சட்! ''ஆட்டோ எங்கிருந்து வந்தது?''

''எதிர்த்த பக்கத்தில் இருந்து''

''எதிர்த்த பக்கம்னா? சரியாகச் சொல்லு...''

''பஸ் ஸ்டாண்டு தெரியுமில்ல... அங்கேருந்து பார்த்தா, பாலம் தெரியுதில்ல? அங்க இருந்து வந்தது. அதை மடக்கி திரும்பி அந்த வழியே போனாங்க!''

''அப்ப என்ன மணி இருக்கும், ராத்திரி?''

''ஒம்பதரை, பத்து!''

''சரி வர்றேன்!''

தர்மலிங்கம் அடுத்து அந்த பஸ் நிலையத்தில் வந்து நின்றார்.

பாலம் தெரிந்தது.

அந்த வழி சென்று இருக்கிறார்கள் என்றால் நகரத்தின் உள்ளேதான் சென்று இருக்க வேண்டும்! இந்தப் பக்கம் அரும்பாக்கம்...இங்கே இல்லை, அவன்! நகரத்தில் இருக்கிறான்.

ஆட்டோ ரிக்ஷாவை எப்படிக் கண்டுபிடிப்பது? ஆயாசமாக இருந்தது. நகரத்தில் எவ்வளவு ஆட்டோக்கள் உண்டு! ஒவ்வொருவரையும் விசாரிக்க வேண்டுமா! கேஸ் வழுக்கிக்கொண்டு செல்கிறது...

கையை அள்ளியதில் சிக்கிய மீன் விரல் இடுக்கில் நழுவித் தப்பித்து நகர நதியில் மறைந்து விட்டது. இப்போது பெரிய மிகப் பெரிய வலை தேவை சே! விட்டு விடலாமா! இனி என்ன செய்வது!

வசீகரமாக அவரை இழுத்து அழைத்துக்கொண்டு சென்ற சாலை, சட்டென்று ஒரு சுவரில் நின்றுவிட்டது. திருப்பம் ஏதும் இல்லை, இனி, நேரே போனால் முட்டிக் கொள்ளத்தான் வேண்டும்.

திகைத்து நின்றார்.

# 15

பதினைந்து நாள்.

இந்தப் பெண்ணோடு !வினோதக் குடும்பம் நடத்தியாகிவிட்டது,

தின வாழ்க்கையில் ஒரு பரிபூர்ண மனைவி. காலை எழுந்திருந்து காப்பித் தண்ணீர் வைத்து, குளிக்கத் தண்ணீர் கொடுத்து, ஒரு சிறிய டிபன் பாக்சில் இட்லியோ, தோசையோ வைத்து அவனை வேலைக்கு அனுப்புவாள், பிற்பகல் சோறு கொண்டு வருவாள். மாலை டீ போட்டுத் தருவாள். அவன் துணிகள் அத்தனையும் துவைத்து மொர மொரவென்று உலர்த்தி வைத்திருப்பாள்.

அறை இல்லை, வீடு அது. வீட்டில் சின்னச் சின்ன அலங்காரங்கள் சதா "விவித் பாரதி" ஒலிக்கும் ரேடியோ. சாமி படம், முட்டை விளக்கு, சுத்தமாகிச் சுருட்டி வைக்கப்பட்ட படுக்கை.

படுக்கை விரித்ததும் அவள் வேறொருத்தி அன்னியன் முட்டை பருவம் போல், தன் சகலங்களையும் சுருட்டி அடக்கிப் படுத்திருக்கும் ஒரு மறுப்பு.

பதினைந்து நாள். என்னை விசாரிக்க எவரும் வரவில்லை. போலீசார் மறுபடி கைவிட்டு இருப்பார்கள். ஏதோ ஒரு சந்தேகத்தின் பேரில் தேடியிருப்பார்கள். தடயங்கள் கிடைக்காமல் நிறுத்தி விட்டார்கள். என் பத்திரம் பாதுகாக்கப்பட்டு விட்டது தப்பித்து விட்டேன்.



ஆனால், இந்த நிலை அபாயமானது. பதுங்கிப் பதுங்கி அலுத்து விட்டது. சந்துக்குள் பின்புறத்தில் இழைத்து இழைத்து, சாதா நாற்காலிகள், குள்ள மேஜைகள் என்று செய்து இருட்டின பிறகு வீடு வந்து... எத்தனை நாள்?

எனக்கு வெளிச்சம் வேண்டாமா? காலார பீச்சாங் கரையில் நடக்க வேண்டாமா? பக்கத்தில் திலகத்துடன் உரசிக் கொண்டு தின்பண்டங்கள் வாங்கித்தின்று, அலைகளில் கால் நனைத்து ஓடிப்பிடித்து...

என்ன செய்வது? கல்யாணத்தைம் பற்றிப் பேச்சே எடுக்க மாட்டேன் என்கிறாளே. கல்யாணம் செய்து கொள்வதால் எந்த மாறுதலை நான் எதிர்பார்க்கிறேன்? அதனால் எனக்கு என் கடந்த காலத்தில் இருந்து விடுதலை கிடைத்துவிடப் போகிறதா? இல்லையே, பின் ஏன்?

கல்யாணம் செய்து கொண்டால் அவள் எனக்கு உரியவள் ஆகிறாள். இந்த அபாயப் பிரதேசத்தில் இருந்து நான் கிளம்பி வேலூர் சென்றால் அவள் என்னுடன் வரவேண்டும். அவள் என்னுடையவளாகி விடுவாள். இப்போது பாதிதான் உண்மை. எந்த நேரத்திலும் அவள் என்னை விட்டுப் போய்விட முடியும்.

மேலும் இது என்ன வாழ்க்கை. தினசரி இரவுத் தாபம். படுத்திருப்பவளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டிய கொடுமை. இதை தீர்த்து வைத்துத்தான் ஆக வேண்டும். அவளைத் தீர்மானமாக இன்று கேட்டு விடவேண்டும்.

காப்பி பருகிக்கொண்டே் இருந்தவன் பாதியில் நிறுத்தி விட்டான்.

"திலகம். இன்னிக்குத்தான் கடைசி."

"என்னய்யா?"

"இனிமேல நான் பொறுமையாக இருக்க முடியாது"

"என்ன சொல்ற நீ"

"எனக்கு ஒரு பதில் இன்னிக்கு நீ சொல்லித்தான் ஆகணும்."

"எதுக்கு"

"நம்ம கல்யாணத்துக்கு"

"மறுபடி ஆரம்பிச்சாச்சா."

"இல்லை, திலகம். இந்தமாதிரி பாசாங்கு வாழ்க்கை எனக்குப் பிடிக்கலை. சொல்லு, நீ எனக்கு யாரு?"

யோசித்து, "சிநேகிதம்னு வெச்சுக்கயேன்."

"என் மனைவியா ஆறதல உனக்கு என்ன தடை?"

மறுபடி நிதானம் தயக்கம். "அப்புறம் சொல்றேன்"

"இந்த பதிலை நிறைய தடவை கேட்டாச்சு. இப்பவே சொல்லு. ஏதாவது தீவிரமான காரணம் இருந்துதுன்னா நாம் பிரிஞ்சிடலாம். திலகம், உனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சா?"

"இல்லை."

"பின்ன ஏன் தயங்கறே? நான் உனக்கு வேணுமா, வேண்டாமா?"

"வேணும்"

"எதுக்காக என்னைப் போட்டு சித்திரவதை செய்யறே? என் மனசு, உடம்பு எல்லாம் உன்னையே கேக்குது, திலகம். பக்கத்தில் உன்னை தூங்க வைச்சுட்டு நான் படறபாடு தெரியுமா, உனக்கு."

அவள் யோசித்து தீர்மானித்து, மெல்ல பதில் சொன்னாள். "இன்னிக்கு சாயங்காலம் முடிச்சுடலாம்யா."

அவ்வளவுதான். அவனுள் ஓர் உற்சாக ஆறு பொங்கியது. இன்னிக்கு சாயங்காலம்! சாயங்காலம்!...அவள் கையைப் பற்றி அதை ஒரு தடவை அழுத்திவிட்டு "வறேன்." என்று புறப்பட்டான்.

## 16

31524
4817190

தர்மலிங்கம் சட் என்று கண் விழித்தார்.

இன்னும் அந்தக் கனவு ஞாபகம் இருந்தது.

ஆஸ்பத்திரி அவசர அவசரமாக ஓடுகிறார். ஒவ்வோர் அறையாகப் பார்த்து, "என் மனைவி எங்கே? என் மனைவி எங்கே?" என்று கேட்கிறார். "இருபதில் பாருங்க...முப்பத்தி அஞ்சில பாருங்க" என்று போக்கு காட்டுகிறார்கள். ஒவ்வோர் அறையிலும் வேற்று முகங்கள், கடைசியில் இதோ பார், பார், இதோ இருக்கிறாள் உன் மனைவி" என்கிறாள், ஒரு நர்சு. ஓடுகிறார். "எங்கே? எங்கே?" என்று ஓடுகிறார்..."அய்யோ இது பிணவறை" வெளியே ஓர் ஆட்டோ ரிக்ஷா நின்று கொண்டு இருக்கிறது. "சவாரி வர்றதில்லைங்க செட்டுக்கு போற டயமுங்க " என்கிறான்.

கண் விழித்து சற்று நேரம் படுத்திருந்தபடியே விட்டத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

"சவாரி வர்றதில்லிங்க, ஷெட்டுக்கு போற டயங்க."

திடுக்கிட்டு எழுந்தார்.

சவாரி வர்றதில்லை, ஷெட்டுக்கு போற டயம். ஆம். அன்று அந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர் அந்த தாமத ராத்திரியில் வீட்டுக்கு அல்லது ஷெட்டுக்குத்தான் திரும்பிக்கொண்டு இருந்திருக்க வேண்டும். அப்படியெனில்? அந்த ஆட்டோ ரிக்ஷாவின் சொந்தக்காரர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்!

சட்! இதை ஏன் நான் முன்னமே யோசிக்கவில்லை. தர்மலிங்கம் விருட் என்று உட்கார்ந்து கொண்டார் பூரண விழிப்புக் கண்டு, இத்தனை நாள் அடைப்பட்டு இருந்த சுவரில் ஒரு சின்ன சந்து கிடைத்து இருக்கிறது!

புறப்படு, உடனே!

□

# 17

"முதலாளி! அரை நாள் லீவு வேணும்!" என்றான், நாராயணன்.

"எதுக்குய்யா?"

"இன்னிக்கு சாயங்காலம் வீட்டில ஒரு விசேஷம்!"

"அந்த டேபிளை முடிச்சுட்டியா?"

"இதோ ஆயிரும், முதலாளி!"

"என்ன சந்தோஷமா இருக்கே? பொண்டாட்டி உண்டாயிருக்காளா?..."

இனிமேல்தான் அவள் பெண்டாட்டி என்று எப்படிச் சொல்வது? "அதெல்லாம் இல்லிங்க! கோயிலுக்குப் போகணும்."

"காலாகாலத்தில ஒரு புள்ளையப் பெத்துக்கிடுங்க!"

சிரித்தான்.

"நாளைக்கு காலைல வந்துருவல்ல?"

"அவசியம், ஒரு இருபது ரூபா அட்வான்ஸ், முதலாளி!"

"அது வேறயா? இந்தா! போய்ட்டுவா!"

உற்சாகமாகப் புறப்பட்டான்.

இன்றைக்கு எச்சரிக்கைகளை ஒத்திப்போட்டு விட்டான், தெருவில் விருட் என்று நடந்தான்.



என்ன என்ன வாங்க வேண்டும்? இரண்டு மாலை; ஒரு மோதிரம், சில தின்பண்டங்கள். இனிப்புகள்...

அவளை அழைத்துக் கொண்டு அந்தக் கடற்கரைக் கோயிலுக்கு செல்ல வேண்டும். அஷ்டலட்சுமி, கூட்டமாக இருந்தாலும் பரவாயில்லை. மாலை மாற்றிக் கொண்டு, பிரார்த்தனை செய்துவிட்டு, இருக்கிற சின்னப் பயல்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கிவிட்டு கடலை நோக்கி நடக்க வேண்டும். சற்று நேரம் அலை ஓசையைக் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு, அப்புறம் ஓர் உயர்தர ஓட்டலில் சாப்பாடு. அப்புறம்... முதல் இரவு!

ஒப்புக்கொண்டு விட்டாள்! இன்றில் இருந்து அவள் பரிபூரணமாக என்னுடையவள். இனி நான் நிஜமாகவே புதியவன். புண்ணியகோடியின் கடைசி அடையாளங்களை மிதித்து அழித்து புறப்பட்ட பரிபூரண நாராயணன்.

பூக்கடைக்கு முதலில் போனான்.

□

# 18

தீர்மலிங்கம் அந்த பஸ் ஸ்டாண்டு வழியே ஜீப்பில் சென்றார்.

ஆட்டோ ரிக்ஷா சொந்தக்காரர்களை எப்படித் தேடுவது? இந்தக் குடிசைகளில் நிச்சயம் இருக்க மாட்டார்கள். அதை அடுத்து இருந்த புதிய காலனி, ஏதோ ஒரு பாங்கு ஊழியர்களின் கூட்டுறவு சங்கம் கட்டிய நெருப்புப் பெட்டிகள், ம்கூம் இங்கேயும் இருப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை.

சாலை நீண்டு கொண்டே சென்றது. கரடுமுரடான களிமண் பிரதேசம். புதிய கட்டடங்கள், பாதிக் கட்டடங்கள், எங்கே விசாரிப்பது? மறுபடி சுவரா?

தர்மலிங்கம் யோசித்தார். சாதாரணமாக ஆட்டோ ரிக்ஷா சொந்தக்காரர்களை எந்த அந்தஸ்தில் எதிர் பார்க்கலாம்? காண்டிராக்டர்கள்? ஒட்டல் முதலாளிகள்...? பெட்ரோல் பாங்க் வைத்திருப்பவர்கள்! ஆம்! முதலில் பெட்ரோல் நிலயத்தில் விசாரிக்கலாம்.

அவர் விசாரித்த இரண்டாவது பெட்ரோல் நிலையத்தில் கொஞ்சம் செய்தி கிடைத்தது. "இப்படியே நேராப் போனிங்கன்னா ஒரு மைல் தொலைவில் எச். பி. பங்க் ஒன்று இருக்குதுங்க. அவரு பத்து ஆட்டோ வெச்சிக் கிட்டு விடறாரு!"



"இந்த ஏரியாவில் வேற யாராவது ஆட்டோ வெச்சிருக்காங்களா?"

"எனக்குத் தெரிஞ்சவரை கிடையாதுங்க!"

அந்த எச். பி. பெட்ரோல் நிலையத்தில் முதலாளி இல்லை. இரண்டு பையன்களும், கண்ணாடிக்கு உள்ளே கணக்கு எழுதும் வயோதிகரும் இருந்தார்கள்.

"எங்கய்யா, முதலாளி?"

"சாப்பிடப் போயிருக்காருங்க"

"எப்ப வருவாரு?"

"மூணு மூணரைக்கு வருவாங்க!"

"எங்கே! அவர் ஆட்டோ வெல்லாம் எங்கே?"

"எல்லாம் டிரைவருங்க எடுத்துட்டுப் போயிருக்காங்க"

"எல்லா வண்டியும் எப்ப வரும்?"

"ராத்திரி ஒம்பதரை பத்துக்குள்ள கொணந்து விட்டுருவாங்க! அப்புறம் நைட் ஆளுங்க வருவாங்க. ரெண்டு மூணு வண்டி எடுத்துப் போவாங்க!"

"ஒம்பதரைக்கு வந்தால், எல்லா வண்டியும் வந்துரும். இல்லையா?"

"அப்படித்தாங்க. நீங்கள் எதுக்கும் அக்கவுண்டண்ட் ஐயரு உக்காந்திருக்கார் பாருங்க. அவரையும் கேட்டுடுங்க! இல்லைன்னா. சும்மா நம்ம மேல பாய்வாரு, முதலாளி"

"பயப்படாதே! நான் அப்புறம் வர்றேன்"!

"எதுக்கும் அவர்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிடுங்கய்யா!"

"சரி, சொல்லிட்டுப் போறேன்"

ராத்திரி ஒன்பதரைக்கு வரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டார் தர்மலிங்கம்

☐

# 19

''என்னய்யா சீக்கிரம் வந்துட்டே?''!

நாராயணன் அந்தப் பொட்டலங்களை ஒவ்வொன்றாக தரையில் வைத்துவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''என்ன இதெல்லாம், பூவு! பொட்டலம்! ஏதாவது பூஜையா!''

''திலகம் நீ இப்ப என் கூட வரே!''

''எங்கே?''

''அஷ்டலட்சுமி கோயிலுக்கு''

''வந்து?''

''அங்கே நாம ரெண்டு பேரும் மாலை மாத்திக்கப் போறம். அய்யரை வெச்சுட்டு பூஜை மந்திரம் எல்லாம் சொல்லிட்டு...இத பார், இனிப்பு. இதை அங்க எல்லாருக்கும் கொடுத்துட்டு... கை கோத்துக்கிட்டு...''

''என்னய்யா, இது? கல்யாண ஏற்பாடா?''

''ஆமாம்!''

''சினிமால வர்ற மாதிரியா! அஞ்சு நிமிஷவேலையா! யோவ் உன்னை யாரு என்னை கேக்காமல் இதெல்லாம் ஏற்பாடு செய்யச் சொன்னது!'' என்று அதட்டினாள்.

''நீதான் காலைல சொல்லிட்டியே!''



''என்ன சொன்னேன்? என்னய்யா சொன்னேன்!''

''சாயங்காலம் முடிச்சுடலாம்னு சொல்லலை?''

அவள் அதிர்ந்து போய் கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள்! ''அடப்பாவி! நான்சொன்னது வேற அர்த்தத்தில்! கல்யாணத்தைப் பத்தி யாருய்யா பேசினா?''

நாராயணன் முகம் சுருங்கியது! கோபம் வந்தது. ''பின்ன, என்ன அர்த்தத்தில சொன்ன?''

அவள் கண்களில் மெலிதாகக் கண்ணீர் திரையிட்டது. ''மன்னிச்சுக்கய்யா நீ என்கிட்ட எவ்வளவோ உண்மையா பழகினதுக்குநான் உன்கிட்ட உண்மையை இதுவரை சொல்லலை. சொல்லணும்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். என்னிக்காவது ஒரு நாள் —என்னிக்காவது ஒரு நாள்னு தள்ளிப் போட்டுக்கிட்டே வந்துட்டேன்! இன்னிக்கு சொல்லியே ஆகணுங்கிற கட்டாயம் வந்துருச்சு! உனக்கு அனாவசியமா மனத்தாங்கல் ஏற்படறதுக்கு முந்தி சொல்லிடறேன்!''

''என்ன சொல்லப் போறே?''

''சொல்லப் போறதில்லை. காட்டப் போறேன்''

''புரியலை, திலகம்!''

''இப்ப என்கூட ஒரு இடத்துக்கு வரியா?''

''வந்து?''

''வந்தால் எல்லாம் புரியும் கொஞ்சம் இரு. சேலையை மாத்திக்கிட்டு வந்துர்றேன்!''

அவள் புதிய சேலை உடுத்தி, தன்னை மெலிதாக அழகு படுத்திக் கொள்வதைப் புரியாமல் பார்த்தான்.

தரையில் அந்த மலர்மாலைகள் காத்திருந்தன. இனிப்புகள். ஏழைக் கல்யாண ஏற்பாடுகள்... எல்லாம் அர்த்தமின்றிக் காத்திருந்தன...

அவனுள் ஒரு பள்ளம் விழுந்திருந்தது. ஒரு சமயம் அடக்க முடியாத இரக்கம் ஏற்பட்டது. ஒரு சமயம் வெறி இரு! இவள் என்ன செய்யப் போகிறாள். என்ன சொல்லப் போகிறாள். பார்க்கலாம், கேட்கலாம் அப்புறம் தீர்மானிக்கலாம்.

''மணி எவ்வளவு இருக்கும்?''

''தெரியலை, மூணு மூணரை இருக்கும்''

''அஞ்சு மணிக்குள்ள போயிடணும்! என்கூட நீ வந்தே ஆகணும் இனிமேல் மறைச்சு வெச்சுப் பிரயோசனம் இல்லை'' அவசரப்பொட்டு இட்டுக் கொண்டாள் யாருக்காக?

''விஷயம் என்னனு சொல்லு, திலகம்!''

''கொஞ்சம் பொறுய்யா! ஒரு மணி நேரம், பொறுமையா இருக்கமாட்டியா? அதுக்கப்புறம் நீயே எனக்கு வழி சொல்லு, நீ சொல்றதை நான் கேக்கறேன்!''

தெரு மூலையில் ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தினாள். தீர்மானமாக உட்கார்ந்தாள். ''ஏறிக்கய்யா!''

''சென்டிரல் போங்க!''

சென்டிரல்! ரெயில் நிலையம், அங்கே என்ன!

''பேச மாட்டியா?''

''நிறையப் பேசப்போறேன்! கவலைப்படாதே!''

சென்டிரல் ரெயில் நிலையத்தை அடைவதற்கு முன்னமே பாலம் தாண்டுவதற்குள் நிறுத்தச் சொன்னாள். காசு கொடுத்து விட்டு, ''நடய்யா'' என்றாள்.

இடப்பக்கம் திரும்பிய பாதையில் நடந்தாள்.

எதிரே மத்திய சிறைச்சாலை!

துணுக்குற்றான்.

''அங்க எங்க போறே திலகம்!



''அங்கதான்யா போகணும், வா என் பின்னால''

தயங்கினான். ஆபத்து! ''இரு, திலகம், என்னனு சொல்லு!''

''ஒரு ஆளை நாம் பார்க்கப் போறம். வாயேன்' சீக்கிரம்!''

தர்மசங்கடம்! என்னை யாராவது அடையாளம் கண்டு கொண்டு விட்டால, என்ன செய்வது? போகலாமா, நின்று விடலாமா?...

அங்கே போவதில் ஆபத்து இருக்கிறது. இருந்தும், திலகத்தின் நோக்கம் என்ன என்று புரியவில்லை.

பார்வையாளனாகப் போவதில் என்ன தப்பு...

ஐந்து ஆண்டு ஆயிற்று. தாடி மீசை அவ்வளவு சுலபத்தில் அடையாளம் கண்டு கொள்வார்களா, என்ன? அந்த சகாப்தம் முடிந்து விட்டதே

நான் வேறு ஒருவன். அகப்படமாட்டேன்!
போகலாம், பார்க்கலாம்.

தலை குனிந்து கொண்டு அவளைத் தொடர்ந்தான்.

அதிகம் மற்றவர் கண்ணில் படாமல் ஒதுக்குப்புறமாகவே நின்றான். எவரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை.

பார்வையாளர் பகுதியில் பலர் இருந்தது அவனுக்கு வசதியாக இருந்தது. கைதிகளைப் பார்க்க வந்திருப்பவர்கள். எனக்கு ஒருத்தருமே வரவில்லை!...

திலகம் சென்று அந்த வார்ட்ருடன் பேசினாள்.

''என்னம்மா, கொஞ்ச நாளாக் காணோம்? சவுக்கியமா?''

''உங்க தயவில இருக்கேங்க! அவரைக் கொஞ்சம் கூப்பிடறீங்களா...?''

''குமாரசாமியை அழைச்சிட்டு வாய்யா,ஒரு வாரமா திலகம் வர்லியா, திலகம் வர்லியான்னு துளைச்சு

எடுத்துக்கிட்டு இருக்கான். குதிச்சு ஓடி வருவான்! என்ன நீ! போன வாரம் வர்றதாத்தானே இருந்தது!''

''முடியலிங்க. வேலைங்க!''

''ஒரு நாள் பூரா அழுதான்!''

''அடிக்கடி ஒரு முறை வந்து பார்க்கறதில என்னம்மா சிரமம். உங்களுக்கு? நீங்கள்லாம் வெளிய இருக்கீங்க! வருஷக்கணக்கா உள்ள இருக்கிறவனுக்கு இது ஒண்ணுதானே சந்தோசம்! அதுவும் குமாரசாமி இருக்கானே. ஒரு பொல்லாப்பு கிடையாது. ஒரு சண்டை கிடையாது... நல்ல பையன். ஏதோ சந்தர்ப்பவசத்தில் நடந்து போச்சு! அதுவும் உனக்காகத்தான் செஞ்சான்! அந்த விசுவாசம் வேண்டாமா!—இதவர்றான். பாரு! பேசு!''

கதர் பனியன், கதர் கால்சராய், முகத்தில் தாடி, தலையில்குல்லா கண்கள் கண்ணாடியாய்ப் பளபளக்க கரிய நிறச் சூழ்நிலையில் பளிச் என்று சிரிப்புடன்—''திலகம், வந்துட்டியா, அப்பாடா'' என்றான்.

''வந்துட்டேன்யா?''

அவன் கைகள் கம்பிக்கு வெளியே வந்து, அவள் கைகளைப் பேராசையுடன் பற்றிக் கொண்டு தன் பக்கம் கொண்டு சென்று முகத்தில் ஒத்தி ஒத்தி ''உன்னைப் பார்க்காமல்...உன்னைப் பார்க்காமல்...செத்துப் போயிடலாமான்னு ஆயிடுச்சு, திலகம்! ஏன் வரலை! என்று தேம்பினான்.

''மன்னிச்சுக்கய்யா! மன்னிச்சுக்க. இனிமேல் தவற மாட்டேன்!''

''பரோலுக்கு மனுப் போட்டு இருக்கேன், திலகம், வருமோ வராதோ, தெரியலை!...''

அவன் கைகள் அவள் நெற்றியை, கூந்தலைத் தடவின.

''நல்லா இருக்கியாய்யா!''



''இன்னும் ஏழு வருஷம்!'' என்றான்.

''இருக்கேன்யா! காத்திருக்கேன்! எனக்காக நீ செஞ்சதுக்கு நான் காத்திருக்கேன்!''

''திலகம்! திலகம்! திலகம்...'' அவன் அழ ஆரம்பித்து மேலே சொன்ன வார்த்தைகள் கண்ணீரில் தேம்பின.

நாராயணன் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''அழுவாதய்யா! என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி...''

''நீ தனியா இருந்துக்கிட்டு என்ன செய்யறியோ!''

''நான் தனியா இல்லைய்யா!'' நாராயணன் பக்கம் திரும்பினாள். கொஞ்சம் வரிங்களா?''

நாராயணன் அருகில் சென்றான்.

''இந்த நல்ல மனுசன்தான் என்னை வெச்சுக் காப்பாத்துறாரு! எனக்குத் தங்க இடம் கொடுத்து, காசு கொடுத்து, திங்கச் சோறு கொடுத்து...கும்பிடுய்யா, இவரை!''

குமாரசாமி அப்படியே சரிந்து நாராயணன் கால்களைப் பற்றிக் கொண்டான்... ''அய்யா! புண்ணியவானே தர்மதுரை!'' என்றான்.

''எனக்காக...எனக்காக ஜெயிலுக்குப் போயிருக்காரய்யா, இவரு! இவரு பேரு குமாரசாமி என்னைக் கட்டிக்கப் போறவரு!...'' என்றாள் திலகம்.

''பாவிப் பொண்ணு! இவள் பட்ட கஷ்டம் பூரா சொன்னாளா?...''

''இல்லிங்க தெரியாதுங்க'' என்றான் நாராயணன்.

''சொல்லுய்யா! இவர்கிட்ட சொல்லு! நீ எதுக்காக ஜெயிலுக்கு வந்தே?''

''இவளுக்காக!''

''சொல்லு! எத்தனை வருஷம்?''

“பத்து வருசம்! இன்னும் ஏழுவருசம் பாக்கியிருக்கு”

“காத்திருக்கேன்! என்னிக்காவது ஒரு நாள் நீ வெளியே வருவேல்ல? காத்திருக்கேன்! சொல்லுய்யா!”

“இது சின்னப் பொண்ணுங்க. அப்பன்காரன் போய்ட்டான். குடிச்சே செத்தான்... அம்மா ஒரு மாதிரிங்க இவளை வெச்சுக்கிட்டு விட்டுக்குள்ளாற வேற ஆளையும் கூட்டிக்கிட்டு...முதல் முதல் இதை ஆத்தங்கரைப் பக்கம் பார்த்தேங்க. தனியா பாவாடை தாவணி போட்டுக்கிட்டு அழுதுக்கிட்டு இருந்ததுங்க ஆற்றங்கரையில் நான் பல் தேய்க்கப் போனேன்...”

அவன் சொல்லச் சொல்ல நாராயணன் மனதில் ஒலி ஒளி காட்சிகள் விரிந்தன.

“ஏ புள்ளே, ஏன் அழுவறே?”

“நான் பாட்டுக்கு அளுவறேன்! நீ யார்யா கேக்க?”

“என் பேரு குமாரசாமி, உன் பேர் என்ன?”

“திலகம்”

“அழாதே திலகம்”

“அழாதே திலகம்! படிக்கிற பொண்ணில்ல நீ—தைரியமா இருக்க வேண்டாம்!”

“ஆத்தில விழுந்து செத்துப் போயிலாமான்னு தோணுது...”

“ஆத்தில தண்ணி கிடையாது. இத பாரு! என்ன விஷயம் சொல்லு...”

“சொல்ல மாட்டேன் போ!”

“இத பாரு! பயப்படாதே. என் பெயர் குமாரசாமி சாமி மேலத் தெருவில சைக்கிள் கடைவெச்சிருக்கேன் உனக்கு ஏதாவது உதவி தேவைன்னா என்கிட்ட வந்துரு! என்ன?”

“முடியாது!”

ஒரு வாரம் கழித்து இரவு எட்டு மணி கடையைப் பூட்டிவிட்டு அதன் பின்புறத்தில் இருந்த தன் வீட்டிற்கு



சந்து வழியாகச் சென்று கொண்டு இருக்கும்போது இருட்டில் ஓர் உருவத்தைப் பார்த்தான்...

“பாரு”

“குமாரசாமின்னு சைக்கிள்கடைக்காரர் ஒருத்தர்...”

“நான்தான் குமாரசாமி. என்ன வேணும்!”

“நான்தான் திலகம்!”

“ஓ! என்ன திலகம்!”

“என்னை அழைச்சுட்டுப் போங்க!”

“எங்கே?”

“உங்கள் வீட்டுக்கு!”

“எதுக்கு?”

“என்னைக் காப்பாத்துங்க! என்னைக் கூட்டிப் போங்க ஒளிஞ்சுக்க ஒரு இடம் வேணும்...”

“வா!”

இவன் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு அழுதாள். “நான் என்ன செய்வேன்! ஏது செய்வேன்! வீட்டில் எங்கள் அம்மாகூட ஒருத்தன் இருக்கான்... அவன்...என்னை... என்னை ரூம்ல வெச்சுக் கதவைச் சாத்திட்டு...பாருய்யா...”

உடம்பெல்லாம் காயம். கிழிசல்...

“தப்பிச்சுட்டு ஓடியாந்துட்டேன். இனி அங்கே செத்தாலும் போகமாட்டேன்! எனக்கு ஒரு டிக்கெட்டு வாங்கிக் கொடுத்துடு! நான் எங்காவது ஓடிப்போயிடறேன்!”

“யார்றா இந்தப் பொண்ணு!”

“தெரிஞ்ச பொண்ணும்மா”

“வீட்டுக்குள்ள ஏன் வந்தாள்?”

"பாவம்மா, பயந்த பொண்ணும்மா!"

"என்னடி பெண்ணே!"

"பாட்டி! என்னைக் காப்பாத்துங்க பாட்டி!"

"என்னடா இது குமரா?"

"இரும்மா. இந்தப் பொண்ணு ஏதோ சேதப்பட்டு வந்திருக்கு. இதுக்கு ஆறுதல் சொல்லணும்..."

"ஊட்டைவிட்டு ஓடிவந்த பொண்ணுபோல இருக்கே! நமக்கேண்டா பொல்லாப்பு..."

"இத பார் கொஞ்ச நேரம் சும்மா இரு! முதல்ல அதுக்குக் குடிக்க ஏதாவது கொடு இரைக்குது பாரு!"

"மோர் தாறேன். குடிச்சுட்டுப் போயிடுவியா?"

போகவில்லை. அங்கேயே ஏழுநாள் இருந்தாள். வெளியே தலைகாட்டவில்லை. பாட்டிக்கு வீட்டு வேலையில் ஒத்தாசை செய்தாள். வீடு பெருக்கினாள். கன்றுக் குட்டியை அலம்பினாள்.

"பாட்டி! நான் இங்கேயே இருந்திடவா!"

"அதெப்படி முடியும்? உங்கப்பன்காரன் வந்து சண்டை போடுவான். ஆயா திட்டுவா...!

"அவுங்கள்ளாம் எனக்கு கிடையாது. பாட்டி!"

"அப்படிவிட்டுற முடியுமா? பெத்ததாய் இல்லையா?"

"பெத்த தாயா? கொளுத்தணும். பாட்டி அவளை! எங்கப்பா இறந்துபோனதுக்கே அவள்தான் காரணம்!"

□

# 20

போலீசுக்காரர்கள் கதவைத் தட்டினார்கள்.

"யார்யா இங்க குமாரசாமி!"

"நான்தாங்க ஏன்?"

"நீ இங்க ஒரு மைனர்ப் பொண்ணைக் கடத்தி பல வந்தமா வெச்சிருக்கியாமே? புகார் வந்திருக்கு!;'

"அந்தப் பொண்ணையே கேட்டுக்குங்க"

"கூப்பிடுய்யா, அதை!"

"திலகம், நீயே சொல்லு!"

"நான் இந்த வீட்டில்தான் இருக்கப்போறேன்! இங்கதான் எனக்கு வாழ்வு. எனக்கு அங்க போக இஷ்டம் இல்லே. மனப்பூர்வமா நான் இங்க இவரோட இருக்கேன்! என்னை யாரும் பலாத்காரம் செய்ய வில்லை. என் சொந்த விருப்பத்தின்படியே வந்துசேர்ந் திருக்கேன்!"

"உனக்கு என்ன வயது!"

"பத்தொன்பது!"

"தப்பு! உன் எஸ். எஸ். எல். சி. சர்ட்டிபிகேட்டைப் பார்த்துட்டம்! உனக்கு பதினாறுவயசுதான் ஆயிருக்கு. இத பார்மா. உன் சொந்த விஷயத்தில் எங்களுக்கு அக்கரை கிடையாது. சட்டப்படி உன்னை நாங்கள் உன் அம்மாகிட்ட சேர்த்தாகணும்."

"நான் வரலை! நான் வரலை!"

"சொல்றதை ஒழுங்காகக் கேட்டுக்க. நீ இப்ப வரலன்னா இந்தாளை நான் கைது செய்ய வேண்டிவரும். வாரண்டு இருக்குது! சரியா, ஒப்புக்கிறியா!"

"அந்த வீட்டில ஒரு ஆள் பலாத்காரம் செய்ய றானே அதுக்கு உங்கள் சட்டம் என்ன செய்யுது!"

"அதுக்கு ஒரு புகார் எழுதிக்கொடு! இதபாரு, சின்ன விஷயத்தை அனாவசியமா சிக்கல் ஆக்காதே! இந்த ஆளு ஜெயிலுக்குப் போகணும்னு உனக்கு ஆசையா!"

"இவரை நான் கல்யாணம் செய்துக்கிட்டே ணிங்க"

"பொய் சொல்லாதே! எங்கே அத்தாட்சி? அத் தாட்சி இருந்தாலும் செல்லுபடியாகாது...நீ மைனர் பொண்ணு! குமாரசாமி, நீங்கள் இவளை விடப்போறீங் களா? கைது செய்யவா?"

"திலகம்! நீபோ! பயப்படாதே! அஞ்சாதே! எதுக் கும் அஞ்சாதே, நான் உன்னைக் காப்பத்தறேன்"

□

## 21

அந்தச் சிறுமி குமாரசாமியிடம் "திலகம் அக்கா இதை உங்கள்கிட்ட கொடுத்துட்டு வரச் சொல்லிச்சு" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

"என்னை கடலூருக்கு அழைச்சுட்டுப் போறாங்க. அங்கே எனக்குக் கல்யாணமாம். ஏதாவது செஞ்சு என்னை காப்பாத்துங்க. உங்கள் மேலதான் நம்பிக்கை வெச்சிருக்கேன் அவசரம்... திலகம்..."

பாஸஞ்சர் வண்டி வர இருந்தநேரம். திலகம், அவன் அம்மா, மாமன்காரன், மற்றொருபெண்பிள்ளை



மூவரும் மாட்டு வண்டியில் வந்து இறங்க... "கொஞ்சம் பார்த்துக்க டிக்கெட் எடுத்தாறேன்"

திலகம் இறங்கி சுற்றிலும் பார்க்கிறாள்.

குட்ஸ்ஷெட் அருகே குமாரசாமி சைக்கிளுடன் நின்றான்.

சைகை செய்கிறான்.

திலகம்ஒரேஓட்டமாக அவனை நோக்கிஓடுகிறாள்.

அவளை அணைத்து ஹாண்டில்பாரில் ஏற்றிக் கொண்டு அசுரவேகத்தில் சைக்கிள் மிதிக்கிறான்.

"அய்யய்யோ! எம்பொண்ணைக் கொண்டுபோய்ட் டானே! பிடிங்க! பிடிங்க!"

அதற்குள் சற்று திரும்பி மற்றொரு தெரு,மற்றொரு சந்து, மற்றொரு திருப்பம் என்று மறைந்துவிடுகிறான். டிரங்க்ரோடில்,சைக்கிள் பறக்கிறது. அவனுக்கு இரைக் கிறது.

"எங்க போறீங்க!"

ஊருக்கு வெளியே தோப்பு. பிள்ளையார் கோயில். அதையடுத்து மண்டபம். அங்கு இருந்து, ஒற்றையடிப் பாதை. ஒதுக்குப்புறமாக ஒரு சின்ன வீடு. அங்கே அவ ளைக் கொண்டு சென்று "இத பார்! வெளியே தலை காட்டாதே. நான் போய் கொஞ்சம் பணம் எடுத்துக் கிட்டு வந்துர்றேன். தைரியமா இரு உடனே வந்துர் றேன். ஊரை விட்டு ஓடிடலாம்..."

தற்காலிக சரணாலயத்தில் இரண்டு நாள் இருக்கி றாள். இருட்டினதும் சோறு கொண்டுவருகிறான். "வீட்டுப்பக்கம் போகலை, திலகம், போக முடியலை. தெருவே கொல்லுனு போச்சு! போலீஸ்காரங்க காத் திருக்காங்க. எங்கம்மாளைப் பார்க்க முடியலை."

"என்னால உனக்கு எவ்வளவு கஷ்டம்யா!"

"உனக்காக நான் எல்லாத்தையும் விட்டுட்டேன், திலகம்! கொஞ்சம்பணம் கிடைச்சுடுச்சுன்னா கிளம்பிடலாம். கண்ணுசாமிகிட்ட கடையை ஒப்படைச்சுட்டு, பணம் வாங்கிவரலாம்னு இருக்கேன். ராத்திரிக்குள்ள அவனைப் பார்த்து ஒரு நூறு ரூபா புரட்டிட்டேன்னா போதும். அம்மாளை லெட்டர் எழுதி அப்புறம் வரவழைக்கலாம். எதுக்காக அழறே?

"என் ஒருத்தியினாலே உனக்கு எவ்வளவு பொல்லாப்பு பாரு? எவ்வளவு கொடுமை பாரு"

"இல்லை, திலகம் இதில் எனக்கு சந்தோசம்தான்! உன்னை நான் அன்னைக்கே என் மனைவியா ஏத்துக்கிட்டேன்! உன்னை நான் விடமாட்டேன்! விடவேமாட்டேன் உயிருள்ளவரைக்கும் விடமாட்டேன்!"

கண்ணுசாமியின் விட்டுக்கு இரவோடு இரவாகச் சென்று பேசிகடையை அடகுவைத்து கையெழுத்திட்டு பணம் வாங்கிக் கொண்டு பத்து பத்தரை சுமாருக்கு தோட்டத்துக்குத் திரும்பினான்.

"திலகம் கிளம்பு! பணம்வாங்கிட்டேன். நேராகபஸ்ஸ்டாண்டு போயிடலாம். காலைல மெட்ராஸ் போய்ச் சேர்ந்திடலாம் ம்...சீக்கிரம் கிளம்பு"

நிலா வெளிச்சத்தில் நடந்து இருவரும் வெளியே வர ஒற்றையடிப் பாதையில் ஆள் அரவம் கேட்டது.

"எங்க கிளம்பிட்டாப்பல, அய்யா?" என்று இருட்டில் குரல் கேட்க, டார்ச் ஒளி அவன் முகத்தில் பரவ திலகத்தின் "அம்மா புருசன்" இரண்டு ஆட்களுடன் நிற்கிறான்.

"என்னம்மா! மகளே! என்னை விட்டுவிட்டு அவ்வளவு சுலபமா போயிட முடியுமா! கண்ணுசாமி வீட்டுக்கு அவன் வருவான்னு தெரியாதா? ஏய்,வளைங்கடா!"



"கிட்ட வராதீங்க! இங்க கொலை விழும்!"

"பிடிங்கடா!"

ஒருவன் அவன் மேல் பாய, "என்னம்மா மகளே திலகம்! உனக்கு அவ்வளவு திமிரா! என் மேல் போலீஸ் புகார் எழுதிக்கொடுப்பியா?" அவன் நிதானமாக அவள் சேலையைப் பற்றி இழுத்து, உதறிப் போட்டான்.

தன் சட்டைக் கைகளை மடக்கிக் கொண்டு, வேட்டியை டப்பா கட்டு கட்டிக் கொண்டு, செருப்பை உதறி விட்டு "விட்டுர்றா, இவளை நான் கவனிச்சுக்கறேன்" என்றான்.

சரச் என்று அவள் ரவிக்கையைக் கிழித்து, விடுபட்ட மார்பில் கைவைத்தான். கைகளைச் சேர்த்து பின்பக்கம் மடக்கி இடுப்புத் துணியை மூர்க்கத்தனமாகக் கிழித்தான்.

குமாரசாமியை ஒருவன் பிடித்திருக்க, ஒரு அமானுஷ்யத் திமிறலில் விடுபட்டு அங்கேஓடி-முதலில் அவனைத் தோளில் கடித்து வீழ்த்தி, தானும் அடிபட்டு திலகத்தை விடுவித்து, "ஓடு திலகம் ஓடிப் போயிரு!"

பெரிய பாறாங்கல் ஒன்றைத் தூக்கி, அவன் தலையைக் குறி வைத்து ஒரே போடு!

நிலா வெளிச்சத்தில் ரத்தம் அவன் கால்களை நனைத்தது. "வாங்கடா! நீங்களும் வாங்கடா! தைரியம் இருந்தால் வாங்கடா!..."

மற்ற இருவரும் பயந்து ஓடிவிட, இறந்தவனை மறுபடியும் மறுபடியும் அடித்தான்.

"திலகம்! திலகம்" என்று கூப்பிட்டான்.

பதில் இல்லை.

மெதுவாக போலீஸ் நிலையத்தை நோக்கி நடந்தான்.

"டயமாச்சு! ம்ம்!கிளம்பு. பாக்கியை அடுத்தமுறை பேசிக்கலாம். கிளம்புங்க!"

நாராயணனும் திலகமும் சிறைச்சாலையை விட்டு வெளியே வந்தார்கள்.

"எனக்காகக் கொலை செஞ்சாருய்யா. எனக்காக எல்லாத்தையும் விட்டுட்டு செயிலுக்குப்போயிருக்காரு. பத்து வருசம் தண்டனை கொடுத்தாங்க! மூணு வருசமாச்சு! இவருக்கு நான் காத்திருக்க வேண்டாமாய்யா நீயே சொல்லு. இவருக்கு இருக்கிற ஒரே ஒரு நம்பிக்கை—என்னிக்காவது ஒரு நாள் வெளிய வந்திருவம். திலகம் எனக்குக் காத்திருப்பாள் என்கிட்ட விசுவாசமா, மத்தவங்க யாரையும் நினைக்காமல், இருப்பாள், கதவு திறந்ததும் கல்யாணம் செய்துக்க காத்துக்கிட்டு இருப்பாள். இந்த ஒருநம்பிக்கைதான்யா அவரைசெலுத்துது! நான் எப்படி இவருக்கு துரோகம் செய்ய முடியும் சொல்லு..."

நாராயணன் பேசாமல் நடந்தான்.

□

# 22

தர்மலிங்கம் அந்த பெட்ரோல் பங்குக்கு ஒன்பதரைக்கு வந்து விட்டார்.

ஒவ்வொன்றாக ஆட்டோ ரிக்ஷாக்கள் "ஷெட்" போட்டுக்கொண்டு வருவதைப்பார்த்து அவருக்கு உற்சாகம் ஏற்பட்டது.

ஜீப்பில் இருந்து இறங்கி, குழல் விளக்கு வெளிச்சத்தில் கண்ணாடி அறைக்குள் கணக்குப் பார்த்துக் கொண்டு இருந்தவரிடம் வந்தார்.

"நீங்கள் தானே முதலாளி?"

"ஆமாங்க, மத்தியானம் பையன் சொன்னான், போலீஸ் வந்து விசாரிச்சதா. என்ன விஷயம்? எங்கள் கடையில தில்லுமுல்லு ஏதும் கிடையாதுங்க..."



"உங்கள் கடையில் ஏதும் குறை சொல்ல வரலைங்க. உங்கள் கிட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்குதில்லை...?"

"ஆமாம்"

"அந்த டிரைவர்களை கொஞ்சம் விசாரிக்கணும்... ஒரு ஆளைப்பத்தி..."

"அவ்வளவுதானே? டிரைவருங்க ஏதும் தப்பு தண்டா செய்யலியே?"

"அதெல்லாம் இல்லிங்க!"

"இப்பத்தான் வண்டிகள் ஒவ்வொண்ணா ஷெட்டு திரும்புது. சரியான டயத்துக்குத்தான் வந்திருக்கீங்க. எல்லாரையும் பார்த்து விசாரிச்சுடலாம்"

அவர்கள் ஒவ்வொருவராக வர, இன்ஸ்பெக்டர் காத்திருந்தார். அன்றைய வாடகையை அவர்கள் சொந்தக்காரரிடம் சமர்ப்பிக்க, "இருங்கய்யா, எல்லோரும் போயிடாதீங்க. இன்ஸ்பெக்டர் சார் ஏதோ உங்களை எல்லாம் விசாரிக்கணுமாம்..."

"பயப்படாதீங்க... ஒரு சவாரியைப் பத்தி விசாரிக்கணும், அவ்வளவுதான்!"

"மொத்தம் பத்து ஆட்டோதானுங்களே?"

"ஆமாம். எல்லாரும் வந்தாச்சு"

அந்த காக்கி சட்டைக்காரர்களைக் கூட்டி வைத்து "இத பாருங்க, சுமார் பதினஞ்சு நாளைக்கு முன்னாடி ராத்திரி சுமார் ஒம்பதரை மணிக்கு உங்களில் ஒருத்தர் ஷெட்டுக்கு திரும்பறபோது, ஒரு தாடி வெச்ச ஆளும் ஒரு பொண்ணும் பாலத்துக்குப் பக்கத்துல பஸ் ஸ்டாண்டில நின்னுக்கிட்டு, சவாரி போகணும்னு கெஞ்சிக் கேட்டுக்கிட்டாங்க். எக்ஸ்டிரா கொடுப்பாங்கன்னு அவங்களை ஏத்தி வந்த சைக்கிளை ரிக்ஷாக்காரன் சிபாரிசு செய்திருக்கான். நீங்கள் அவர்களை ஏட்டி பக்கம் கொண்டு போயிருக்கிங்க. யாருக்காவது ஞாபகம் இருக்கா?"

"அது நான்தான் சார்!" என்றான் ஒருவன்.

இன்ஸ்பெக்டர் துடிப்புடன், "சபாஷ்! கொஞ்சம் முன்ன வாங்க. உங்கள் பேர்?"

"தங்கராசுங்க. அவுங்களை அழைச்சுக்கிட்டுப் போனது ஞாபகம் இருக்குது. எக்ஸ்ட்ராவா ரூபா கொடுத்தாங்க. பொட்டி படுக்கை வெச்சிருந்தாங்க."

"ஆம்! அவுங்களேதான் அவுங்களை எங்க கூட்டிக்கிட்டுப் போனீங்க? ஞாபகம் இருக்குதா?"

"கொஞ்சம் இருங்க, யோசிக்கிறேன்..."

தர்மலிங்கம் பதறினார். "வா தங்கராசு! என் இனிய நண்பனே! தயவுசெய்து உன் நூற்றுக்கணக்கான சவாரிகளில் இந்த பிரத்தியேக யாத்திரையை தயவு செய்து தோண்டி எடு, எனக்காக! எனக்காக! ப்ளீஸ்?"

"மைலாப்பூர் கொண்டு விட்டனுங்க!"

"எங்கே! நல்லா யோசிச்சு ஞாபகப்படுத்திப்பாரு, மைலாப்பூரிலே எந்த இடத்திலே?"

"இருங்க... குளத்தாண்டை போய் சுத்திவந்து... கோயிலாண்டை...ஒரு ஒரு...எனக்கு வீடுகூட ஞாபகம் இருக்குங்க!"

சபாஷ் தங்கராசு, உனக்கு நிச்சயம் ரிவார்டு கிடைக்கும்படியா செய்யறேன்! பெரிய ஆள் நீ!... எனக்காக இன்னும் ஒரே ஒரு காரியம் செய்யணும். இப்ப என்னோட ஜீப்பில் வரணும் அந்த இடத்தைக் காட்டணும்!

"வறேங்க' அந்த ஆள் யாருங்க?"

"அவன் பெரிய கேடி! பழைய குற்றவாளி... அவனை நாங்கள் ரொம்ப நாளாத் தேடிக்கிட்டு இருக்கோம்."

"வாங்க போகலாம்!" என்றான், தங்கராசு!

"அட, இவனுக்கு வந்த வாழ்வைப் பாருடா!"

ஜீப் புறப்பட்டது.

□

# 23

"என்னய்யா யோசிக்கிறே!..."

இருவரும் அறையில் உட்கார்ந்து இருந்தார்கள். தரையில் கிடந்த அந்த மாலையின் மலர்கள் வாடியிருந்தன.

"என்ன நீ, அப்புறம் பேசவே இல்லையே? உனக்கென்ன கோபமா?"

"இல்லை, திலகம், உன்கிட்ட நான் சொல்ல வேண்டியது ஒண்ணு பாக்கியிருக்கு. அதை எப்படி ஆரம்பிச்சு எப்படிச் சொல்லலாம்னு யோசிக்கிறேன்"

"என் மேல கோபமா, உனக்கு! கோபம்தானே!"

"இல்லை, திலகம். தப்பு என் பேரில்!"

"நான் முன்னாடியே சொல்லியிருக்கலாமில்ல? உனக்கு அனாவசியமா ஆசைகளை எல்லாம் உண்டாக்கியிருக்க வேண்டாமில்ல."

"பரவாயில்லை, திலகம்."

"நான் வேற என்ன செய்வேன், சொல்லுய்யா தனியா ஒரு பொம்பளை பிழைக்கணும்னா..."

"திலகம், நீ இனிமேல் தனியா பிழைச்சுத்தான் ஆகணும்!"

"என்னய்யா சொல்றே!"

"நான் உன்னை விட்டுப் போயிடப் போறேன்!"

"ஏன்யா? அவ்வளவு கோபமா?"

"கோவமில்லை, திலகம்... நீ என்கிட்ட உன் கதையைச் சொல்லிட்டே. நான் உன்கிட்ட என் கதையை இன்னும் சொல்லலை. என் கதையில் உன் கதைமாதிரி காதல், தியாகம் அப்படி இப்படி எல்லாம்

கிடையாது. என் கதை வேறு யாரோ எனக்காகத் தீர்மானிச்ச மாதிரி நடந்து போய்ட்ட கதை! இதுல எவருக்கும் ஒரு படிப்பினையோ புத்திமதியோ கிடையாது. இப்ப நீ சொன்னதில் மனிதத் தன்மையோட கூடிய பல விஷயங்கள் இருக்குது. ஓர் ஆண் ஒரு பெண்ணுக்காக ஏறக்குறைய தன் வாழ்க்கையையே தியாகம் பண்றான், அதற்கு பிரதியா அவள் அவனுக்காகக் காத்திருக்கா. அவளும்தான் தியாகம் பண்றாள் அவள் அழகான பொண்ணு. சில சந்தோஷங்கள் அவளுக்கு சுலபமாக கிடைக்கும். அது எல்லாத்தையும் அவள் ஒத்திப் போட்டுட்டு, ஒரே ஒரு வைராக்கியத்தோட அவனுக்காகக் காத்திருக்கா! அவன் சிறைக்கு அவளுக்காகப் போயிருக்கான்! என் கதையில் இந்த மாதிரி பெரிய விஷயங்கள் ஏதும் கிடையாது...திலகம், என் பேர் நாராயணன் இல்லை. புண்ணியகோடி அஞ்சு வருஷத்துக்கு முன்னாலதான் நாராயணனா மாறினேன். அதுக்கு முன்னால நான் எத்தனையோ திருட்டுக்கள், கொள்ளை ஏன் ஏறக்குறைய ஒரு கொலை வரைக்கும் செஞ்சிருக்கேன். எல்லா ஜில்லாவிலேயும் எல்லா மாநிலத்திலயும் போலீஸ் என்னைத் தேடுது. ஏராளமா போட்டோ வெச்சிருக்காங்க. கை ரேகை எடுத்திருக்காங்க. உன் குமாரசாமி ஒரே ஒரு குற்றம் செஞ்சுட்டு ஜெயிலுக்குப் போனான். நான் முப்பத்தாறு செஞ்சுட்டு ஜெயில்ல இருந்து தப்பிச்சுட்டு வெளியே இருக்கேன். நான் ஒரு சாதாரண பாத்திரத் திருடன். குமாரசாமி ஒரு கொள்கைக்காக குற்றம் செய்தவன். ஒரு ஆளுடைய அக்கிரமத்தை தாங்காமல், ''தார்மீகக் கோபம்''னு சொல்வாங்க. அதில கொலை செஞ்சவன். நான் செஞ்சதெல்லாம் நகை புடவை, பணம், இப்படித்திருட்டு. அவன் செஞ்சது ஒருவிதம்! எனக்கும் அவனுக்கும் ஈடே இல்லை...அவனுக்காக நீ காத்திருக்கிறதில அர்த்தம், நியாயம் இருக்கு. நான் வாழ்க்கை பூரா ஓடறவன்!



தெருத்தெருவா ஓடிக்கிட்டு இருக்கிற நாய், திடீர்னு ஒரு மர நிழலில் நிக்கும். அந்த மாதிரி கொஞ்ச நாள் உன்கூட நின்னேன். மறுபடி ஓடற நேரம் வந்திருச்சு...போலீஸ்காரங்க மறுபடி என்னை விசாரிச்சிக்கிட்டிருக்காங்க. அவர்கள் என்னைப் பிடிக்கிறதுக்குள்ள நான் கிளம்பணும். வேறு ஊர், வேறு தேசம், வேறு வேஷம், வேறு தொழில்...ஆனால், வேறு ஒரு திலகம் எனக்குக் கிடைக்க மாட்டாள்...''

திலகம் அதிர்ந்து ''என்னய்யா சொல்றே? என்னால நம்ப முடியலை. நீ வந்து...ஒரு திருடனா? சேச்சே!''

''எந்த போலீஸ் ஸ்டேஷன்ல வேணாபோய் புண்ணியகோடின்னு கேளு! போட்டோ காட்டுவாங்க! அப்ப தாடி மீசை கிடையாது. அவ்வளவுதான் வித்தியாசம்!''

''அப்ப நீ...''

''ஆமா, திலகம் நான் ஓடவேண்டியவன்''

''நானும் உன்கூட வந்துர்றேன்யா!''

''வேண்டாம். இன்னிக்கு நான் பெருந்தன்மையா இருக்கேன்! ஆனால், உன்னை என்கூடவே வெச்சுக்கிட்டு ஏழுவருஷம் அண்ணன்—தங்கச்சின்னு ஓட்ட முடியாது. ஒருநாள் இல்லை ஒருநாள் ஏதாவது செஞ்சுருவேன். என் மேல எனக்கு நம்பிக்கை கிடையாது!

''ஏழு வருசம் என்னய்யா செய்வேன்?''

''திலகம்! நீ தைரியமான பொண்ணு. உன்னால் சமாளிக்க முடியும். உன் வைராக்கியம் இருக்கு பாரு. அதுவே பல சலனங்களை சமாளிக்கிறதுக்கு உனக்குந் தெம்பு கொடுக்கும்...''

''இல்லையா. எனக்கு ஒரு ஆம்பிளைத் துணை நிச்சயம் தேவையா இருக்குது. உன் மாதிரி ஒரு நல்ல மனுசனுக்காக அலைஞ்சுக்கிட்டு இருந்தேன். கிடைச்சே! கிடைச்ச உடனே பறிபோயிட்டே! என் அதிர்ஷ்டத்தைப் பாரு!''

"நான் இவ்வளவு சொன்ன பிறகும் என்னை நல்ல மனுசங்கறியா?"

"என்னைப் பொறுத்த வரையிலும், என்னோட பழகின வரையும் நீ நல்ல மனுசன்தான்யா. நீ போன ஜென்மத்தில் என்ன செஞ்சா எனக்கென்ன? எனக்கு உன்மேல் நம்பிக்கை உண்டுய்யா. இருந்துரு! நான் உன்னை ஒளிச்சு வெச்சுக் காப்பாத்தறேன்."

"எனக்கு என்மேல நம்பிக்கை கிடையாது, திலகம். அதனாலதான் விலகறேன். மேலும் நான் மெட்றாஸ்ல இருக்கிறதில நிறைய ஆபத்து இருக்குது...இது வரைக்கும் உனக்காகத்தான் இருந்தேன். நீ கிடைக்கப் போறங்கற எதிர்பார்ப்பில இருந்தேன். இப்ப அது இல்லைன்னு ஆனப்புறம் எனக்கு இந்த ஊர்ல வேற வேலை கிடையாது"

"எங்கய்யா போவே? நானும் கூட வர்றனே!"

"என் கூட பம்பாய்க்கு வருவியா?"

அவள் யோசித்து, "அதெப்படி அவரை விட்டுட்டு...? பக்கத்தில ஏதாவது ஊராயிருந்தால் சரி; மாசா மாசம் நான் அவரைப் பார்த்தாகணுமில்ல?"

அவன் அலமாரியில் இருந்த பணத்தை எடுத்து "இந்தா செலவுக்கு வெச்சுக்க!" என்றான்.

"உனக்கு!"

"நான் பார்த்துக்கறேன். நான் சம்பாதிச்சுக்கிடுவேன்!"

"இப்பவே போறியா!"

"நான் பதினைஞ்சு நாள் முன்னாடியே போயிருக்கணும்! ஒரு சப்பாரையில் இதுநாள்வரை தங்கினேன்!..."

"இருய்யா! உன் பொட்டி படுக்கை..."

"புதுசா பெட்டி, புதுசா படுக்கை! நான் ஊர்விட்டு ஊர் மாறினால், உடமை எதையும் எடுத்துக்க மாட்டேன்! புதுசா பறவை! புதுசாப்பேரு! புதுசா எல்லாமே! நான் வரேன்!"



"இருய்யா, நானும் உன்கூட கொஞ்ச தூரமாவது வறேன்!"

"வா!"

"அதுக்கு முன்னாடி இந்தாய்யா!"

அவள் அருகில் வந்து அவன் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவனை வளைத்து அணைத்துக் கன்னத்தில் பதிய முத்தமிட்டாள். அவன் கையை எடுத்துத் தன் மேல் பரவ விட்டாள். மூச்சு முட்டும் அளவு இறுக்கினாள்.

"இது என்னை ஞாபகம் வெச்சுக்க" என்றாள்.

□

## 24

ஜீப் மெதுவாக குளக்கரையைச் சுற்றி வந்தது. "நேராப்போங்க. மெல்லப்போங்க" என்றார், தங்கராசு ஆட்டோ டிரைவர்.

"இங்கிருந்து இரண்டாவது அல்லது மூனாவதுசந்தில்னு ஞாபகம் திரும்பிடுங்க ரைட்டுல. இந்த பால் டிப்போ ஞாபகம் வருது."

ஜீப் திரும்ப, சந்தின் எதிர் முனையில் திலகமும் நாராயணனும் திரும்பினார்கள்.

மெல்ல நடந்து பஸ்ஸ்டாண்டு அருகில் வந்தார்கள்.

திலகம் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "நீ போய்ட்டின்னா எனக்கு யாருமில்லே!..."

"கவலைப்படாதே. சந்தர்ப்பம் சரியா இருக்கறப்ப நான் திரும்பி வரேன்!"

"இதாங்க வீடு" என்றாய், தங்கராசு, "இங்கதான் கொணாந்து விட்டேன்"

"எப்ப வருவீங்க!"

"சொல்ல முடியாது. நீ அந்த விட்டை விட்டுடாதே. கேட்டால் "என் புருசன் ஊருக்குப் போயிருக்காரு; வந்துருவாரு"ன்னு சொல்லு. அந்த வீடு உனக்கு நல்ல பத்திரம் - நான் கடுதாசி எழுதறேன்"

"இங்க நாராயணன்னு ஒரு ஆள்?" என்று தர்மலிங்கம் கீழ்க் குடித்தனக்காரரிடம் விசாரித்தார்.

"தெரியாது!"

"மாடியில் ஒரு தாடிவெச்ச ஆசாமி குடியிருக்கார்" அங்கே போய் கேட்டுப் பாருங்கோ!"

"வாரா வாரம் கடுதாசி எழுதறேன், திலகம்."

---

கடைசி பஸ் வந்து நிற்க அவன் அதில் ஏறிக்கொண்டான். "நீ போ திலகம்! கவலைப்படாதே, கடவுள் காப்பாத்துவார்."

"என்னையா! அழாதே! இதபார் அழக்கூடாது..."

பஸ் புறப்பட சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

தர்மலிங்கம் மாடிப்படியேறி அந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை அறைக்கு வந்து சேர்ந்தார்.

ஏமாற்றம்.

அறைக்கதவு பூட்டியிருந்தது.



சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

உள்ளே விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. சாமி படத்தில் ஊதுபத்தி புகைந்து கொண்டு இருந்தது.

"இப்பதான் வெளியே போயிருக்கணும். வந்திருவாங்கன்னு நினைக்கிறேன். சார் கொஞ்சம் வறீங்களா?"

"என்னையா?"

"நாராயணன்னு தாடி வெச்ச ஆளு இந்த ரூம்ல தானே குடியிருக்காரு?"

"பேர் தெரியாது, தாடி வெச்ச ஆசாமி ஒருத்தர் இருக்கார். கூட ஒரு..."

"பொம்பளை"

"ஆமாய்!"

"எத்தனை நாளாச்சு அந்தப் பொம்பளை வந்து?"

"சமீபத்தில்தான்னு நினைக்கிறேன்!"

இவன் தான்!

தர்மலிங்கத்திற்கு நரம்புகள் துடித்தன! வந்துவிட்டேன், ஜெயிக்கும் கம்பத்திற்கும், மிக அருகில் வந்துவிட்டேன்.

சிறு வயதில் உரியடி உற்சவம் ஞாபகம் வந்தது. மூக்குக்கு வெகு அருகே வெண்ணெய்த்தாழி அதை அடிக்க போனால் உயரே செல்லும். இதோ இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது. ஆனால், இன்னும் அகப்படவில்லை.

பொறுத்திரு!

திலகம் வீடு திரும்பாமல், ஆறுதலுக்கு "காமதேனு"வில் சினிமாப் பார்க்கச் சென்றாள்.

பாதி சினிமா கழிந்திருக்கும், ஆனால், என்ன? பார்த்த படம்தானே! எனக்கு இப்போது அந்த விட்டுக்குச் செல்வதில் இஷ்டம் இல்லை. மனம் மிகவும் குழம்பியிருக்கிறது. சற்றுநேரம் மறக்க படம் பார்க்க வேண்டும். நிறைய பாட்டுக்கள், நிறைய சிரிப்பு...

தர்மலிங்கம் கை கெடிகாரத்தைப் பார்த்தார். என்ன இது, ஆளைக் காணோம்! ஒரு வேளை சினிமா போயிருப்பார்களோ? இருக்கும்; காத்திரு காத்திரு.

நாராயணன் பஸ் புறப்பட்டு நகர்ந்ததும் சன்னல் ஓர இருக்கையில் கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்தான். வெளியே ஒளிக்கீற்றுகளாக நகர விளக்குகள் செல்ல, அவனுள் சிந்தனை குழம்பியது.

எத்தனை நாள், எத்தனை நாள் ஓடுவது?
என்றாவது ஒருநாள் நின்றாக வேண்டாமா?
என்றாவது ஒரு நாள்!
இன்று! இன்று! இன்றுதான்.

"கண்டக்டர்! ஸ்டாப்பிங் ஹோல்டன்!" என்று கத்தினான், நாராயணன்.

அடுத்த ஸ்டாப்பில் இறங்கிவிட்டான்.

தர்மலிங்கம் கெடிகாரத்தைப் பார்த்தார். பதினொன்று.

கூட இருந்த கான்ஸ்டபிளிடம், "இத பாருங்க. அங்கயே எதிர்த்தாப்பல நில்லுங்க. அவங்க வந்தால், ஒண்ணும் செய்ய வேண்டாம். வீட்டைவிட்டு வெளியே வராமல் மட்டும் பார்த்துக்கங்க. பத்து நிமிடத்தில் வந்துர்றேன். பக்கத்தில போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிட்டு"

ஜீப்பை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

திலகம் தன் எதிரில் சலனப்பட்ட பொய் பிம்பங்களில் தன்னை மறந்து இருந்தாள்.

சிங்கப்பூரில் திலகமும் குமாரசாமியும் இளையராஜாவின் இசைக்குப் பாடிப் பறந்துகொண்டு இருந்தார்கள்!

வருகிற வாகனங்களில் விரைந்தார்கள்!
கம்பி ரெயிலில் தொங்கினார்கள்!

குமாரசாமி அவளைத் தன் பக்கம் திருப்பி, அவள் உதடுகளில் முத்தமிடப் போக, காமிரா நீலவானத்தை நோக்கி விரிந்தது.



தர்மலிங்கம் மைலாப்பூர் போலீஸ் நிலையத்தில் ஜீப்பை நிறுத்தி அவசரமாக உள்ளே சென்றார். உள்ளே மேஜையில் ட்யூட்டி எஸ். ஐ. உட்கார்ந்திருக்க, "நான் தர்மலிங்கம் அசோக்நகர் சர்க்கிள்."

"வாங்க, சார் என்ன விஷயம்?"

"புண்ணியகோடின்னு பழையகேடி ஒருத்தன் உங்கள் ஏரியாவில்தான் பதுங்கியிருக்கான். அவன் வீட்டு விலாசம் கண்டுபிடிச்சுட்டேன். அவனைப் பிடிக்கத் தயாரா இருக்கோம். இப்ப நீங்கள் வந்தால்..."

"புண்ணியகோடியா!"

"ஆமாம்!"

"இதோ பாருங்க, புண்ணியகோடி!"

"என்னது..."

அருகே ஓரத்தில் உட்கார்ந்து இருந்த தாடிக்காரனை முதல் முதல் பார்த்தார்.

"நான்தான் சார் புண்ணியகோடி!" என்றான் நாராயணன். "என்னைப் பிடிக்கிறதுக்கு நீங்கள் சிரமப்பட வேண்டாம். நானாவே வந்துட்டேன்!"

# "முற்றும்" என்பதற்கு முன்

பிரமாண்டமான சாம்பார் அண்டா. அதன் அருகில் கைதிகளின் "கியூ." ஒவ்வொருவராக அலுமினியக் கிண்ணியில் சாம்பார் வாங்கிக் கொண்டுபோக, குமாரசாமியின் முறை வந்தபோது அருகில் "வணக்கம் குமாரசாமி!" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

"அட நீங்களா!"

"ஆமாம், குமாரசாமி!"

"என்ன ஆச்சு!"

"அது பெரிய கதை! அப்புறம் சொல்றேன். சாப்பிட்ட புறம் தனியா கொஞ்சம் வரிங்களா! உங்கள்கிட்ட முக்கியமா பேசணும்..."

"திலகம் எப்படி இருக்காள்?"

"அதுபத்தித்தான் பேசணும்...வரிங்களா?"

## 25

கை கழுவும் இடத்தில் இருந்து வார்டுக்கு இரட்டை இரட்டையாக நடக்கையில் குமாரசாமி புண்ணியகோடியுடன் சேர்ந்து கொண்டான்.

"என்ன விசயம்? திலகத்துக்கு ஏதாவது ஆயிருச்சா? உடம்பு கிடம்பு?"

"உடம்புக்கு ஒண்ணுமில்லை! அவளைத் தனியா விட்டு வரும்படி ஆய்டுச்சு!"

நாராயணன் சுற்றுமுற்றும் பார்த்தான். எதிரே பாதையைப் பார்த்துக்கொண்டே தாழ்ந்த குரலில் பேசினான்.

"குமாரசாமி! திலகத்தை நீதானே காப்பாத்தணும்! தனியா இருக்கா."

"ஆமாங்க. எப்படிங்க!"

"குமாரசாமி! இந்த ஜெயிலை விட்டு வெளியே போக எனக்கு ஒரு வழி தெரியும் சொல்லித்தாரேன்!" என்றான்...

(முடிந்தது)

31524
4817190